# ஸ்ரீ விநாயகபுராண வசனகாவியம்



அருட்கவி. சீ. விநாசித்தம்பி. M.A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமான் முருகேசு
செல்வத் திருமகனால்
பாரோர் வளம் பெருகிப்
பல்லாண்டு வாழியவே

அன்பன்

அருட்கவி
சீ. விநாசித்தம்பி
1/12/2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஸ்ரீ விநாயக புராணம் வசனகாவியம்

ஆக்கியோன்:-
கவியோகி அருட்கவி
சீ. விநாசித்தம்பி M.A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ விநாயகபுராண வசனகாவியம்

ஆக்கியோன் :- அருட்கவி சீ. விநாசித்தம்பி புலவர்

வெளியீடு :- நாகவரதநாராயணர் தேவஸ்தானம்
அளவெட்டி

முதற்பதிப்பு :- 20 - 11 - 2002

அச்சிட்டோர் :- கணாதிபன் அச்சகம் கரணவாய்

பக்கம் :- xvi, 107

அளவு :- A5

விலை :- 250/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# என்னுரை

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

பார்க்கவ புராணம் என்னும் விநாயகப் புராணத்தை தமிழிலே கச்சியப்ப முனிவர் கவிதை வடிவில் பாடியுள்ளார்- இதனை ஆதாரமாகக் கொண்டு பல அறிஞர்கள் கவிதைவடிவிலும், வசன வடிவிலும் பதிப்பித்துள்ளார்கள். 1905ல் மட்டக்களப்பு, புளியநகர் சதாசிவம்பிள்ளை பூபாலபிள்ளை என்பவர் அகவற் பாவாகப் பாடியுள்ளார், 1908ல் முத்தமிழ் இரத்தினாகரம் ம.தி. பானகவி என்பவர் விநாயகர் பராக்கிரமம் என்னும் நூலை வெளியிட்டுள்ளார். திரு.எஸ். ராமநாதன் (கார்த்திகேயன்) என்பவர் வசனமாக எழுதியுள்ளார். இப்படியாக வெளிவந்த நூல்களை மக்கள் படித்துவந்தபோதிலும் அவற்றை புராணபடனமாக ஓதிப்பயன் பெறுவது அருகி வருவதால் எம்பெருமானின் சந்நிதியில் இருந்து படிக்கத்தக்க விதமாக கதைவரம்பு மாறுபடாமல், சிறியேன் இந்நூலை வசனகாவியமாக, எளியதமிழில் ஆனைமுகன் திருவருளால் எழுதியுள்ளேன்.

பாலர் முதல் முதியோர் வரை படித்துப் பக்தர்களாக வேண்டும். விநாயகர் திருவருளைப் பெற்று விக்கினமின்றி வாழவேண்டுமென்பதே எனது பேரவா ஆகும். பல அன்பர்களின் வேண்டுகோளால் இந்நூல் மலர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலைப் படிப்பதனாலே......

விநாயகரின் பற்பலதோற்றங்கள்
விநாயகரின் பராக்கிரமம்
கொலைகளவு முதலிய பாவம் புரிந்தோர் அனுபவிக்கும் துன்பங்கள்
செய்த வினை காரணமாக வருகின்ற பிறவிகள்- மறுபிறவிகள்
சதுர்த்திவிரதமகிமை
வன்னி, அறுகு, மந்தாரை இவற்றின் சிறப்பு
பகவான் பக்தரைக் காக்கும் தன்மை
ஆணவத்தால் – அடையும் துன்பம்
அசுரர்களின் கொடுமை
விநாயகரின் திருவிளையாடல்கள்
விநாயகரை வழிபடுவோர் பெறும்பயன்கள்

இத்தகைய உண்மைகளை அறிய முடியும். எனவே நம்மக்கள் இந்நூலை உணர்ந்து படித்து நலம்பெற வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

புத்தகத்தில் வரும் விநாயகர் திருவுருவம் முப்பத்திரண்டும் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருமங்கலக்குடி அருள்மிகு தேரடிவிநாயகர் திருக்கோயில் கும்பாபிஷேக மலரை மூலமாகக் கொண்டு கரணவாய் அருள்மிகு மூத்தவிநாயகர் ஆலயத்தில் ஓவியர் திரு.திபாகரன் அவர்களால் வரையப்பட்டதை திரு.ந.நந்தகுமார் அவர்கள் கணணிப்பதிப்புக்கு வடிவமைத்துத்தந்தார்

இந்நூலுக்கு ஆசியுரை, வாழ்த்துரை, முதலியன வழங்கிய உத்தமர்களுக்கும் இந்நூலைச் சிறப்புற அச்சிட்டுதவிய கரணவாய் கணாதிபன் அச்சகத்தினருக்கும் எனது மனங்கனிந்த நன்றிகள் கூறி அமைகின்றேன்.

வணக்கம்

*அன்பன்*

***அருட்கவி சீ. விநாசித்தம்பி***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்,**
கலைப்பீடாதிபதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அவர்கள் வழங்கிய
## அணிந்துரை

புராணங்கள் தெய்வங்களின் அருட்சிறப்புக்களை எடுத்துக்கூறுகின்றன. மகாபுராண மரபை அடியொற்றித் தலபுராணங்கள், அவ்வவ் தெய்வங்களது தெய்வீகப் பெருமைகளைக் கூறும் ஏனைய புராணங்களும் பக்திநெறியை வளம்படுத்தியுள்ளன. அவ்வரிசையில் விநாயகர் புராணமுமொன்றாகும். விநாயகபுராணம் பார்க்கவபுராணம் என்ற பெயரிலும் சிறப்பு பெற்றுள்ளது. இப்புராணத்திற்குரிய சமய முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு இதனை மூலமாக வைத்து பல அன்பர்கள் கவிதை வடிவிலும், வசன வடிவிலும் காலத்திற்கு காலம் பல பதிப்புக்களை வெளியிட்டுள்ளார்கள். அத்தகைய முயற்சியின் மற்றொரு வடிவமாக அமைவதே அருட்கவி விநாசித்தம்பி அவர்களது ஸ்ரீ விநாயகபுராண வசன காவியம் ஆகும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கிராமங்கள் தோறும் பல எண்ணிக்கையிலான விநாயகர் ஆலயங்கள் எழுச்சி பெற்றுள்ளதைக் கவனிக்குமிடத்து இத்தெய்வத்தின் மீது மக்கள் அளவற்ற பக்தி கொண்டுள்ளமை தெளிவாகின்றது. இவ்வாலயங்களில் வருடந்தோறும் விநாயகர் சஷ்டி விரதத்தை அந்தமாகக் கொண்டு இருபத்தொரு நாட்களுக்கு விநாயகருக்கு விசேட அபிஷேகங்களுடன் கூடிய பூசைவழிபாடுகள் நிகழ்ந்து வருவதோடு, அந்நாட்களில் அடியார்கள் விநாயகர் புராணத்தை பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்துவரும் மரபு இருந்து வருகின்றது. விநாயகப் பெருமானின் திருவருளுக்கு எம்மை ஆற்றுப் படுத்தும் தோத்திரநூலாக இது விளங்குகிறது.

இப்புராணத்தில் உபாசனா காண்டம், லீலாகாண்டம் என இருகாண்டங்களில் விநாயகப் பெருமானின் தோற்றப் பொலிவுகள், விநாயகரது மகத்துவம், மாபாதங்களினால் வரும் துன்பங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் பயனாகக் கிட்டும். பிறவிகள், விநாயகரை வழிபட உதவும் சதுர்த்தி விரத மகிமை, விநாயகரைப் பூசிக்க உதவும் அறுகு. போன்றவற்றின் சிறப்பு, பக்தர்களுக்கு பாதுகாப்பு அளித்து விநாயகர் அருள் சுரக்கும் தன்மை ஆணவமேலீட்டினால் கிட்டும் துன்பம், அசுரர்களது கொடுமை, விநாயகப் பெருமானின் தெய்வீகத் திருவிளையாடல்கள் மற்றும் விநாயக வழிபாட்டினால் கிட்டும் பலன்கள் போன்றவை நன்கு எடுத்துக்கூறப்படுகின்றன. விநாயகரை வழிபடும் அடியவர்கள் ஓதி ஓதி பயன்பெறத்தக்க இந்நூலை மேலும் நன்கு விளங்கிக் கொள்வதற்கு ஏதுவாக அருட்கவியின் அரிய முயற்சியின் பயனாய் வசனகாவியமாக வெளிப்படுகின்றது.

அருட்கவி கந்தபுராணத்தை வசனகாவியமாக வெளியிட்ட அனுபவப் பேறாக விநாயக புராண வசனகாவியத்தையும் வெளியிட முன்வந்துள்ளார். அருட்கவி அவர்கள் இயல்பாகவே கவிதை புனைவதில் வல்லவர் எண்ணற்ற பாவடிவங்களில் ஆலயங்கள் தோறும் இறைவன் புகழ் பாடும் பெரும்பணியை சிரத்தையோடு மேற்கொண்டு வருபவர். அத்தகைய அனுபவம் மிக்க கவிஞராகிய அருட்கவியின் கைவண்ணத்தில் உருவாகியுள்ள ஸ்ரீ விநாயக புராணம் - வசனகாவியம் ஆகிய இந்நூலை சைவ உலகம் புகழ்ந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. இப்புராண படனத்திலும் அதனை கேட்பதனாலும் எல்லாப் பழிபாவங்களும் எம்மைவிட்டகல்வதோடு பிறவா இன்பத்தையும் நல்கும் என்பது புராண பலனாகும். எனவே இப்புராண வசனகாவியத்தின் பயன் அனைவருக்கும் கிட்டுவதாகுக.

இத்தெய்வீகப் பணியில் தம்மை ஈடுபடுத்தியுள்ள அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களுக்கு எனது பாராட்டினைத் தெரிவிப்பதோடு, அவர் நீண்ட ஆயுளுடனும் சகல நலன்களுடனும் இனிதே வாழ விநாயகப் பெருமானின் திருவருள் துணைநிற்பதாகுக!

14-01-2002 *பேராசிரியர். ப. கோபாலகிருஷ்ணஐயர்*
தைத்திங்கள் நன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்**

**வழங்கிய**

# அன்புரை

அருட்கவி. சீ. விநாசித்தம்பி புலவர் M.A அவர்களினால் ஆக்கப்பட்ட விநாயகபுராணம் வசனகாவியம் என்னும் நூலுக்கு அன்புரை வழங்குவதில் மனநிறைவு அடைகின்றேன்.

நாம் எக்கருமத்தைத் தொடங்கும் போதும் விநாயகப் பெருமானை முதலில் வணங்கியே கருமமாற்றுவது வழக்கம். எனினும் விநாயகர் புராணம் படிக்கும் மரபு எம்மவரிடையே அருகிவருவதைக் காணலாம். இக்குறையை அருட்கவி. ஐயா அவர்களின் இந்நூல் நீக்கி விடும் எனலாம்.

புராணபடன மரபைத் தொடக்கி வைத்த நாவலர் பெருமானின் வழி வந்த பெரியோர்கள் சிலர் கவிதை நடையில் அமைந்த புராணங்களை வசனநடையில் அமைத்தனர். ஆனால் அந்நடை மக்களுக்கு படித்து, விளங்க சற்று கடினமாக இருந்தது. இதனால் ஐயா அவர்கள் கந்தபுராண வசன காவியத்தைத் தொடர்ந்து விநாயக புராண வசனகாவியத்தை எவருக்கும் எளிதில் விளங்குமாறு இலகுதமிழில் எழுதியுள்ளார். இன்றைய இளைய தலைமுறையினருக்கு தெரியாத பல விடயங்களை இந்நூலில் அவர் தந்திருப்பது அவர்களுக்கு மிக்க பலனளிப்பதாகும். இந்நூல் எமக்குக் கிடைத்த ஓர் அருங்கொடையாகும்.

அளவெட்டி ஸ்ரீநாகவரத நாராயணர் திருத்தலத்துடன் தன் வாழ்க்கையை இணைத்துள்ள ஐயா அவர்களின் சமய, சமூகப்பணி யாவரும் அறிந்ததே. அவர் பல்வேறு திருத்தலங்கள் பற்றி எழுதியுள்ள நூல்கள் பலவாகும். அவரின் பணி மென்மேலும் தொடர்ந்து சிறக்க இறைவன் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

*பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.சி. சக்திகிரீவன்

கௌரவ செயலாளர் இந்துசமயபேரவை

### அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

தெய்வத்திருவருள் உலகமெலாம் சிறந்து வளர்ந்தோங்க வேண்டுமென்ற பெருவிருப்போடு திருவருள் தொண்டாற்றி வரும் எமது பேரன்புக்குரிய இந்துசமயப்பேரவைத் தலைவர் அருட்கவி அரசு சிவதிரு சீ. விநாசித்தம்பி ஐயா அவர்கள் காலத்திற்குக் காலம் அருள் நூல்களை ஆக்கி வெளியீடு செய்து வரும் பெருந்தொண்டுள்ளம் கொண்ட பெருமைக்குரியவர்.

இதுகாறும் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை யாத்து வெளியீடு செய்து மகிழ்ந்தவர். சென்ற ஆண்டு கந்தபுராண வசனகாவியம் என்ற செம்பொருள் நூலை யாத்து வெளியீடு செய்து கந்தப்பெருமான் அன்பர்கள் அவனருளில் ஆனந்திக்க உதவியவர். இவ்வாண்டு விக்கினங்களைத் தீர்க்கும் விநாயக புராணத்தை வசனகாவியமாக வெளியீடு செய்யத் திருவருள் கூட்டியுள்ளது.

இந்நூலில் விநாயகப் பெருமானின் பல்வேறு நாமபேத தோற்றங்களும், அவனருட்செயல்களும், அவனை வழிபடுவதாற் பெறும் பேறுகளும், ஆணவத்தால் அடையும் துன்பமும் அசுரர்களால் அடியவர்கள் அடையும் இடர்களும், அவ்விடர்களை அவ்விநாயகன் தீர்த்தருளும் சிறப்பும், பற்றி அழகு தமிழில் அற்புதமாகக் அமைத்திருக்கிறார். அருட்கவி ஐயா . படிப்பதற்கும், எண்ணி எண்ணி அவனருளை அகம்மகிழ்வதற்கும் ஏற்றநூலிது.

விநாயகப் பெருமானினுடைய அர்ச்சனைக் குரிய, அறுகு, வன்னி, மந்தாரை, ஆகியவற்றின் பெருமைகள் 46ம், 47ம் பக்கங்களில் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமானின் அறுகொன்றின் பெருமைபற்றி எடுத்தாளுகையில்

என்பெரும் பதியே எல்லாத் தினமும்
இன்புறு மறுகு பதினாயிரத்தால்
விநாயகர் பாதம் வேண்டுகின்றோமே
நினைவுறு செல்வம் எமக்கேனில்லை
என்று கேட்க, இடரெய் தாதே
அப்பனைப் பூசித்த அறுகொன்று தருகிறேன்
இப்பொழுதேநீ இந்திரனிடம் போய்
இவ்வறு குற்ற எடையுள்ள செல்வம்
செவ்விதில் தருக எனக்கேட்டுப் பெறு.

எனும் இவ்வடிகள் விநாயகரை அர்ச்சித்த ஓர் அறுகிற்குள்ள பெருமையை நன்கு புலப்படுத்தி நிற்கிறது.

ஊற்றுப்போற் கவிதை யாக்கும் உண்மைத் திருவருள் பெற்ற அருட்கவி ஐயாவின் அருள்வளம் அடியவர் அள்ளும் தோறும் குறைவுறாப் பெருமை பெற்றது. இத்தகைய அருட்கவி ஐயாவின் அருள்வளம் என்றும் வளர்ந்தோங்க எல்லாம் வல்ல ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் திருவருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

*சி. சக்திகிரீவன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி மல்லிகா சீவரத்தினம்**
(ஆசிரியை யாழ் இந்துமகளிர் கல்லூரி)
***மனமுவந்து அருளிய***

## வாழ்த்துப்பா

அருட்கவியின் செந்நா வாழ்க!

வானுலகும் மண்ணுலகும் வாழ நாம் வாழ
வழங்கு தமிழ் வளர் சைவ வளங்கள் சேர்க்கும்
தேனுவெனத் திகழ்கின்ற செஞ்சொற் கொண்டல்
செங்கதிரோன் அருட்கவியின் செந்நா வாழ்க.

போரிலே வெந்து எங்கும் புன்னெறி மலியும் யாழில்
காரிருள் களைய வல்ல கந்தபுராணத்தினோடு
நேரிய வழிசெலுத்தும் நிகரிலா விநாயகர்தம்
சீரிய புராணம் தந்தாய், திக்கெட்டும் அறங்கள் ஓங்க.

வாழ்க நீ எம்மான் எங்கள் ஆன்மீக வறுமையெல்லாம்
பேரருள் திறமதாலே போக்கினாய் புகழும் பெற்றாய்
சீர்பெற சைவம் வாழ சிறந்த தொண்டாற்றி வாழும்
நாரணன் அடியான் விநாசித் தம்பிதன் நலன்கள் வாழ்க.

14-01-2002.

*ம. சீவரத்தினம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ கணபதியின் 32 தோற்றங்கள்
## கீர்த்தனை

அண்ட மெங்கும் நிறைந்தவனே கணபதிநாதா
தொண்டர்களின் காவலனே கணபதிநாதா

ஆதிஉமை தருபாலக் கணபதிநாதா
அடியார்முன் வருதருணக் கணபதிநாதா
வேதமுதல் வாபக்திக் கணபதிநாதா
விடையவனும் போற்றும் வீரக் கணபதிநாதா

அகிலலோக ஞானசக்திக் கணபதிநாதா
அப்பனம்மை யானதுவிஜக் கணபதிநாதா
அகரஉகர மகரசித்திக் கணபதிநாதா
அன்புருவே உச்சிஷ்ட கணபதிநாதா

சீவகோடிக் கருளும்விக்கின கணபதிநாதா
சித்தயோகம் காட்டும்க்ஷிப்ரக் கணபதிநாதா
மூவர்தொழும் ஏரம்பக் கணபதிநாதா
மூலசுகம் தருஇலட்சுமி கணபதிநாதா

ஆனந்த சோதிமகா கணபதிநாதா
அசுரகுல வென்றவிஜயக் கணபதிநாதா
வானுந்து ஞானநிருத்த கணபதிநாதா
மாகமேவி வரும்ஊர்த்துவக் கணபதிநாதா

எங்குமுள்ள ஏகாட்சரக் கணபதிநாதா
எண்ணுமின்பம் கொடுக்கும்வரக் கணபதிநாதா
பொங்கும்தமிழ் திரயாட்சரக் கணபதிநாதா
பொலிக்ஷிப்ரப் பிரசாதக் கணபதிநாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநாயக ஹரித்திராக் கணபதிநாதா
திருமங்கள ஏகதந்தக் கணபதிநாதா
பவமாவினை புரிசிருஷ்டிக் கணபதிநாதா
பஞ்சபூத உத்தண்டக் கணபதிநாதா

சுககாரண ரணமோசனக் கணபதிநாதா
சுத்தசத்தி ரூபதுண்டிக் கணபதிநாதா
இகபராதி யாம்துவிமுகக் கணபதிநாதா
எழுமுத்தொழில் பயில்மும்முகக் கணபதிநாதா

சிற்பரனே சிங்கமுகக் கணபதிநாதா
சிவசங்கர தவயோகக் கணபதிநாதா
தற்பரநா யகதுர்க்கா கணபதிநாதா
சந்திரநட சங்கடஹர கணபதிநாதா

விக்கினங்கள் தீர்த்திடுவாய் கணபதிநாதா
வேழமுகவி நாயகனே கணபதிநாதா
பக்தர்பிழை பொறுத்திடுவாய் கணபதிநாதா
பாதநிழல் தந்திடுவாய் கணபதிநாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| கடவுள் வணக்கம் | ...01 |
| அவையடக்கம் | ...04 |
| சுருக்கப் பார்வை | ...05 |
| கதை பிறந்த கதை | ...07 |
| காமந்தன் | ...08 |
| சோமகாந்தன் | ...09 |
| பிரம்மஹத்தி நீங்கியது | ...10 |
| வேதவியாசர் தோற்றம் | ...11 |
| விக்கினராஜரின் விஸ்வருபம் | ...12 |
| பிரம்ம சிருஷ்டி | ...15 |
| முழுமுதல் கடவுள் திருமணம் | ...16 |
| மதுகைடவர் வதம் | ...16 |
| வீமராசரின் சந்ததி வரலாறு(விஸ்வாமித்திரர் கூறியது) | ...17 |
| வல்லாளன் | ...19 |
| தக்கனுக்கு அரசு கிடைத்தது | ...22 |
| வனிதையால் விளைந்த துன்பம் | ...24 |
| இந்திரனின் அற்பசந்தோஷம் | ...25 |
| கிருச்சமதரின் கோபம் | ...27 |
| அரக்கன் பிறந்தான் | ...28 |
| திரிபுரன் | ...29 |
| திரிபுரன் சங்காரம் | ...30 |
| பார்வதி அனுட்டித்த சதுர்த்தி விரதம் | ...31 |
| சதுர்த்தி விரத மகிமை | ...33 |
| மன்மதனுக்கருளிய கணபதி | ...34 |
| ஆதிசேஷன் கர்வபங்கம் | ...36 |
| புருசுண்டி முனிவர்(கற்பக விருட்சம்) | ...37 |
| சங்கடஹர சதுர்த்தி விரதம் | ...39 |
| அறுகம்புல்லு | ...41 |
| பசித்து வந்த பரம்பொருள் | ...44 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிபத்திரம் ...47
வாமனர் யாசித்தமண் ...48
கீர்த்தியின் பக்தி ...50
பவள விநாயகர் ...54
சொர்க்கம் சேர்ந்த சூரசேனன் ...57
இராமனுக்கு அருளிய பரிசு ...58
கோகர்ணம் ...60
காவிரி தந்த கணபதி ...62

## 2ம் பாகம்

## லீலா காண்டம்

கஸ்யபர்சந்ததி ...63
கபில விநாயகரும் கணனும் ...64
விநாயகர் தோற்றம் ...67
மூஷிகவாகனரின் வேலாயுதம் ...68
மயில்வாகனர் ...70
சூரியகுமாரன் ...71
குழந்தைக் கணேசன் திருவிளையாடல் ...72
கருடரும் நாகரும் ...73
சிந்துராஜரின் முடிவு ...75
தூமாசுரன் ...76
கஜமுகா சுரன் வதம் ...79
மகோற்கடர் ...80
மகோற்கடரும் காசிராசனும் ...84
சோதிடன் வந்தான் ...86
தேவாந்தகன் வதம் ...88
வக்ரதுண்டர் ...89
திவோதாசன் ...91
வல்லபை திருமணம் ...93
சோமகாந்தன் முத்தி ...96
விநாயக புராணம் கேட்டபலன் ...97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவியோகி அருட்கவி
சீ.விநாசித்தம்பி புலவர் M.A. அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலாசிரியர்

## கவியோகி, அருட்கவி சீ. விநாசித்தம்பி M.A. அவர்கள்

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் தமிழுக்கும், சைவசமயத்திற்கும், சமூகத்திற்கும், கலை கலாச்சராத்திற்கும் பணிசெய்து அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தால் கௌரவ முதுகலை மாணிப்பட்டம் பெற்ற கவியோகி அருட்கவி சீ. விநாசித்தம்பி ஐயா இலங்கையிலும் இந்தியா முதலிய பிறநாடுகளிலும் சமயச் சொற்பெருக்காற்றி மொழி, கலை சலாச்சார பண்பாட்டு எழுச்சியை ஏற்படுத்தியவர். செல்வச்சந்நிதியான் ஆச்சிரமக் கலைபண்பாட்டுப் பேரவை இவருக்கு ஞானபண்டித அமுதசுரபி என்று பட்டம் சூட்டிக் கௌரவித்தது நினைவு கூரத்தக்கது.

அநுபூதி மானாகிய அருட்கவி ஐயா அவர்கள் தான் சுகித்த அநுபூதிச்சாரத்தை, இறையருளை ஏனையோருக்கும் செறியக்கூடியதாக தன் அருள் வாக்கினால் வழிகாட்டி வருகிறார். அவரது இருப்பிடத்தை நோக்கிப்பக்தர்கள் கூட்டம் திரண்டு வருவதையும் நலம்பெறுவதையும் காணலாம்.

எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய கருணை வள்ளல் தென்னாட்டில் சிவனாகவும் எந்நாட்டிற்கும் இறைவனாகவும் இருப்பவர் மக்கள் உய்யும் பொருட்டு தடத்த நிலைக்கு இறங்கி வருகின்றான். அறம் அழிந்து அரியாயம் தலைவிரித்து ஆடும் போது இறைவன் அருளுருக் கொண்டு உலகை உய்ய வைக்கின்றான். இவை புராண வரலாறுகள் இவற்றை வெளிப்படுத்தவே ஐயா அவர்கள் சாதாரண மக்களும் படிக்கத்தக்க வகையில் இலகு தமிழில் கந்தபுராண வசனகாவியம் போன்ற நூல்களை ஆக்கியுள்ளார். திருவிருத்தம் பதிகம், தமிழ் அர்ச்சனை, பிள்ளைத்தமிழ், திருவூஞ்சல், அந்தாதி, அருட்புகழ், அநுபூதி என்னும் பாவகையில் நூற்றைம்பது நூல்களுக்கு மேலாக எழுதியுள்ளார்.

தெய்வீக அர்த்தங்களைத் தெளிவு படுத்தி அருட்கவி ஐயா அவர்கள் பார்க்கவ புராண மென்னும் விநாயக புராணத்தை வசன காவியமாக் ப்போது வழங்கியுள்ளார். பற்பலதத்துவங்களை உள்ளடக்கிய இந்நூல் விநாயகர் கருணை பெறுவதற்கும் சாந்தி சமாதானத்திற்கும் வழிகாட்டும் சொத்தாகும். மக்கள் ஓதி நன்னெறி காண்பார்களாக இதனை எழுதுவதற்கு ஸ்ரீவிநாயகப் பெருமான் ஒருவாய்ப்பை சிறியேனுக்குத் தந்தமைக்கு இறைவனைப் பிரார்த்தி ஐயா அவர்களை இதயத்தில் பூசித்து நன்றியுடன் விடைபெறுகின்றேன்.

இங்ஙனம்

பொறுப்பாசிரியர்
யாழ் மத்தியகல்லூரி

ஞான. திருக்கேதீஸ்வரன்
*இந்து மாமன்றம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கடவுள் வணக்கம்

# விநாயக புராண வசனகாவியம்

உலகுக்கு முன்னாய் நின்ற ஒருபரம் பொருளை ஞான
மலருக்குள் மலருகின்ற மலைமணி விளக்கை, எங்கும்
பலருக்குமாகி இன்பம் பாலிக்கும் கற்பகத்தை
தலைவைத்து துதிகள்பாடித் தாளிணை போற்றி வாழ்வாம்.

அகரமென அறிவாகி உலகமெங்கும்
அமர்ந்து அகரஉகர மகரங்கள் தம்மாற்
பகருமொரு முதலாகி வேறுமாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில் பொருள் நான்கினையும் இடர்தீர்ந் தெய்தப்
போற்றினருக் கறக்கருணை புரிந் தல்லார்க்கு
நிகரில்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்துவாழ்வாம் (வி.பு)

தொண்டரின் மனத்திருக்கும்
தும்பிமா முகனே போற்றி
வண்டுறை குழலாள் ஞான
வல்லபை கணவா போற்றி
அண்டங்கள் அனைத்தும் தாங்கி
அருள்லம்போ தரனே போற்றி
பண்டுபா ரதம் வரைந்த
பரமனே போற்றி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிவன்

ஆதியில் வேதம் சொல்லி
ஆகமம் விதித்தாய் போற்றி
மாதுமா தேவி யோடு
மலையமர்ந் தருள் வாய் போற்றி
காதலால் ஏத்துமன்பர்
கருவினைக ளைப்பாய் போற்றி
சோதியே தில்லை யாடும்
சுந்தரா போற்றி போற்றி.

### உமை

பற்பல வடிவமாகிப்
பஞ்ச பூதங்களாகி
கற்பக வல்லி யாகி
காலெடுத் தாடுகின்ற
சிற்பர நாத னோடு
செகமெலாம் நிறைந்தாய் போற்றி
பொற்புயர் வீடுகாட்டும்
பூரணி உமையே போற்றி.

### நாராயணர்

சங்குசக் கரங்களேந்தும்
தாமரைக் கண்ணா போற்றி
தங்குநற் கீதை சொல்லித்
தருமத்தைக் காத்தாய் போற்றி
எங்கனும் நிறைந்தாய் போற்றி
இகபர சுகம் கொடுக்கும்
மங்களச் செல்வி மார்பா
வரதநா ரணனே போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமுருகன்

ஆறுமா முகனே போற்றி
அறுபடை யழகா போற்றி
நீறுமா மறை விளங்க
நெடியவேல் பிடித்தாய் போற்றி
தேறுதல் வழங்கும் வள்ளி
தெய்வானை கணவா போற்றி
கூறுசூர் வென்றவீரக்
குமரனே போற்றி போற்றி.

கலைமகள்

நாமகள் செல்வி போற்றி
நாயேனை இயக்கும் வெள்ளைத்
தாமரை யாளே போற்றி
தருமிசை வீணையேந்திப்
பாமழை பொழிவாய் போற்றி
பளிங்குவண் ணத்தாய் போற்றி
மாமறை பேசும் ஞான
வாணியே போற்றி போற்றி.

திருமகள்

கருணையங் கடலாம் மாயன்
கவின்மார்பில் உறைவாய் போற்றி
அருளமு தத்தினோடே
அலைகடலு தித்தாய் போற்றி
வருமடி யாரின் துன்ப
வறுமையைத் தீர்ப்பாய் போற்றி
திருமகள் தாயே நின்றன்
சேவடி போற்றி போற்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவையடக்கம்

பேரார் பிருகுப் பெருமகா முனிவரன்
பாரோர் பரவும் பார்க்கவ புராணமாய்த்
தந்த விநாயகர் தத்துவக் கதையைச்
சுந்தரத் தமிழில் சுவைநலம் செழிக்கக்
கச்சியப்பனாம் கண்ணிய முனிவன்
இச்சகம் புரக்க இசைத்த விநாயக
புராணப் பரம்பொருள் புண்ணிய சரிதையை
பராபரன் கணபதி பதமலர் துணைகொடு
நம்மினம் நயந்து நாடிப் படித்துத்
தம்முளத் திறைவன் சால்பினை வளர்க்கச்
சிறியேன் இந்நூல் திரட்டி எழுதினேன்
நெறியார் கலைகள் நிறைமனச் செல்வர்
அன்பா லோதி ஆனைமா முகனின்
பொன்பா தத்துணை பொருந்துவர் இனிதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விநாயக புராணக் கதை சுருக்கப் பார்வை
## (1) உபாசனா காண்டம்

காமந்தன் என்பவன் செய்த பாவங் காரணமாகச் சோமகாந்தனாகப் பிறந்தான். இவனைப் பிரம்மஹத்தி பிடித்தது. அலைந்தான் பூர்வ வினைத்தொடர்பால் பிருகுமுனிவரைச் சந்தித்தான் முனிவர் சோமகாந்தனின் பூர்வ வரலாறுகளைக் கூறத் தொடங்கினார்.

தெய்வீக உணர்வு குன்றிய காலம் அதை நிவர்த்தி செய்வதற்காக வேதவியாசர் தோன்றினார். அவரின் செயல்கள் தடைப்பட்டன வக்கிர துண்டரை வழிபட்டுச் செயல்பட்டார். முழுமுதற் கடவுளாகிய வக்கிர துண்ட விநாயகர் மும்மூர்த்திகள் முதலானோரைத் தோற்றுவித்துப் பஞ்ச கிருத்தியம் புரிவித்தார்.

எதிர்பாராத வகையில் தோன்றிய மதுகைடபர்களை மகாவிஷ்ணு, விநாயகர் அருள் பெற்றுச் சங்காரம் செய்தார்.

வீமராசனும் மனைவியும் புத்திரப் பேற்றுக்காகத் தவம் புரிந்தனர் - விசுவாமித்திர முனிவரைச் சந்தித்தனர். முனிவர் அவர்களுக்கு விநாயகரின் பெருமை கூறி வழிகாட்டினார்.

### தக்கனின் வரலாறு

* முற்கல முனிவரால் அவன் நலம் பெற்றமை
* வல்லாளன் வரலாறு
* வீமராசனின் மகன் ருக்மாங்கதன் வரலாறு
* கவிமுனிவரின் மனைவி முகுந்தை ருக்மாங்கதனுக்கிட்ட சாபம்
* இந்திரன் விநாயகப் பிரதிட்டை செய்தமையை நாரதர் கூறியது
* முகுந்தையின் விரகவேதனை தீர்த்த வேளை கிருச்சமதர் தோற்றமாயது.
* கிருச்சமதர் கொட்டாவியில் திரிபுரன் (பலி) பிறந்தான் - சிவனால் அழிந்தான்
* பார்வதி-பரமனைச் சேர்வதற்காக அநுட்டித்த சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* காத்தமனுக்கு உபதேசம்
* மன்மதன் மகோற்கடரைப் பிரதிட்டை செய்தது
* புருசுண்டி முனிவர் (வேடன் விப்ரதன்) கிருதவீரியன் – சந்திரன் வரலாறுகள்
* வன்னி அறுகு மகிமை
* விநாயகர் அருள் பெற்று மகாவிஷ்ணு மூவடிமண் பெற்றது
* அருள் பெற்ற கீர்த்தி
* கோகர்ணம் காவிரி வரலாறுகள்
* காசிபருக்குச் செயல் நலம் காட்டியது

## (2) லீலா காண்டம்

* கணன் – கபில முனிவர் உபாசித்த கபில விநாயகரால் அழிந்தான், சிந்தாமணிக் கல்லை மீட்டு தந்த பரம்பொருளுக்குச் சிந்தாமணி விநாயகர் எனப் பெயர் ஏற்பட்டது.
* பிரம்ம தேவரின் கொட்டாவியில் பிறந்த சிந்துரனை அழிக்க – விநாயகப் பெருமான் மயேச்சுதனின் யானைத்தலையைத் தானே எடுத்து தன் தலையாக்கி வந்து போரிட்டது
* மூஷிகத்தை வாகனமாக்கிய வரலாறும் கால நேமியை வதைத்ததும்
* சூரியகுமாரன் சிந்து என்பவனை வதைத்த கணேசர்
* தூமாசுரனை வதைத்துத் தூமகேது எனப்பெயர் பெற்றார்
* நராந்தகனை அழித்தார்
* ஆதிசேடப் பாம்பை படுக்கையாக்கிப் பணிராச வாசன் எனப் பெயர் பெற்றார்
* தேவாந்தகன் வதம்
* பிரமாசுரன் வஞ்சகமாகப் கொலைபட்டதை யறிந்து வந்தெதிர்த்த அவன் மகன் துராசனைக் கொன்றமை
* திவோதாசன் காசியை ஆண்டது
* வல்லபை திருமணம்
* மேற்படி வரலாறுகளைக் கேட்ட சோமகாந்தன் முத்தியடைந்தான்

(இவை–சூதமுனிவர் நைமிசாரண்ய முனிவர்களுக்குக் கூறிய விநாயக புராணசாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விநாயக புராணம்

வசனகாவியம்

கணமும் நினைபவர்க்குக் கற்பகமாய் நிற்கும்
கணபதியின் பொற்பாதம் காப்பு

## (1) கதை பிறந்த கதை

ஓங்கு நைமி சாரணியத் துயர்ந்த சௌனகமுனிவர்
உயர் பன்னிரு வருடம் ஒளிர்யாகம் செய்வதற்குப்
பாங்குடனே முற்பட்டார் பயில்யாகம் காண்பதற்காய்
பான்மைதரு முனிவரெலாம் பண்புடனே வந்தமர்ந்தார்
வந்தமுனி வரர்கள் மகான் சூத மாமுனியை
வந்தனைகள் பலபுரிந்து மகாபக்த விஷயங்களைத்
தங்களுக்குக் கூறும்வண்ணம் தாழ்ந்தி றைஞ்சி நின்றார்கள்
அங்கங் குளிர்ந்தார் அருட்சூத மாமுனிவர்
இன்பப் புன்னகை புரிந்தார் இயம்புவேன் எனப்புகன்றார்
அன்பான முனிவர்களே ஆதிகை லாசபதி
பகவத் விஷயங்களை பரவுநந்திக் குரைத்தருள
தகுநந்தி சனற்குமாரர் தமக்குரைக்க அவர்பின்பு
வேதவியா சருக்குணர்த்த வியாசரும்பதி னெட்டுப்
புராணங்க ளைச்சொன்னார் புராண உபதேசங்களை
பராவு முனிவர் கேட்டுப் பதினெண் உபபுராணங்கள்
ஆக்கினார் அவைகேண்மின், சனற்குமார, நாரசிங்க,
வாக்குநல - நந்தி, சிவதரும, துருவாச,
நாரதீய, கபில, ஔசன, சௌமிய,
வருண, காளி, வாசிஷ்ட லிங்க,மா னவசௌர
பராசரிய, மரீச, சாம்பேச, பார்க்கவவாம்
இவற்றுள் பிருகுமுனி இசைத்தவிநா யகபுராணம்
*அவர்பெயரால் பார்க்கவ புராணமெனும் பெயருடைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபாசனா காண்டம்

## 2 காமந்தன்

படர்குழுவாய் வந்தமர்ந்த பான்மைமிகு முனிவரெலாம்
பகவத் விஷயங்களைப் பகரும்படி வேண்டிநிற்க
தொடர்யாகம் பங்குபற்றச் சூழ்ந்த சூத மாமுனிவர்
சுவையாக முனிவரெலாம் சூழ்ந்திருக்கக் கூறுகிறார்
விந்திய பர்வதத்தில் விளங்குகொல்லம் எனும் ஊரில்
வியாபாரி சித்ரூபன் விழைமனைவி சுலோசனையை
சிந்தைகுளிர் மணம்பூண்டு திகழ்காமந் தன் நாமச்
சேய்தன்னைப் பெற்றார்கள் அவன்குடும் பினியை மணந்து
ஆண்ஏழு பெண்ஐந்தாய் ஆறிரண்டு மக்கள் பெற்றான்
ஆயவியா பாரத்தால் அடைந்த செல்வம் அத்தனையும்
வீண்வழியில் காமந்தன் விலைமாதர்க் குக்கொடுத்தான்
மேவுபெற்றார் இறந்தொழிய விரவியசொத் தத்தனையும்
காமியத்தால் செலவழித்தான் கனிவான மனைவிமக்கள்
கட்டியபூண் ஆபரணங்கள் கழிந்தெடுத்துச் செலவிட்டான்
சேமமிழிந்தான் சோ்வறுமை யாலலைந்தான்
திருட்டு கொலைசூது பஞ்சமா பாதகங்கள்
நாளும் புரிந்திட்டான் நகராள் அரசாங்கம்
நாடு கடத்தியது நண்ணினான் கானகமே
வாள்வில்லு ஈட்டிகொண்டு வனக்கொள்ளைக் கூட்டத்தின்
மன்னும் தலைவனாய் வழிப்பறியில் ஈடுபட்டான்
அன்றொருநாள் கணவர்த்தன் ஆயபெயர் அந்தணனை
அநியாய மாய்க்கொன்றான் அன்புமணம் புரிவதற்காய்க்
கொண்டுவந்த பொருளெல்லாம் கொள்ளையடித்துச்சென்றான்
கொடிய பிரமகத்திப் பழிசுமந்தான் காமந்தன்
சொல்லொணா நோயுற்றான் தொலையாத பேயுற்றான்
சுவையூண் உறக்கமின்றி சுகமின்றி மனம்தவித்தான்
கொள்ளைப் பொருளிருந்தும் அநுபவிக்க முடியாமல்
குறித்தபிர மகத்தியினால் கொடும்பாவி யாய்த்திரிந்தான்

* * *

இத்தகைய நிலைமையிலே இருந்தகாமந் தனையடைந்து
எண்ணிலா அந்தணர்கள் இசைந்துபிச்சை ஏற்க வந்தார்
சொத் தெல்லாம் காமந்தன் சுமைசுமையாய்க் கொடுத்தானே
தோய்ந்த பொருளெல்லாம் தொடர்களவால் வந்தபொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனை அந்தணர்கள் ஏற்கமறுத் துரைக்கலுற்றார்
இக்காட்டில் இருக்கின்ற எந்தை விநாயகரின்
முன்பொலியும் கோயில்கட்டி முடித்திடுவாய் என்றார்கள்
மொழிந்தபடி காமந்தன் மூஷிகனார் கோயில்கட்டி
இன்பவிழா வெடுத்தனனே எல்லாநோ யுந்தீர்ந்தான்
இபமுகனைப் பூசித்தான் இறந்தான் சிலநாளில்
பின்பு யம தூதுவர்கள் பிடித்திழுத்துக் காமந்தனை
பேராரும் தர்மராஜப் பெருந்தலைவன் முன்விட்டார்

* * *

சித்திர புத்திரரின் சேர்த்தெழுதிக் கணக்கிட்ட
திரண்டநின் வினையின்படி செய்தபுண் ணியபாவம்
அத்தனையும் நீஇங்கே அனுபவிக்க வேண்டுமப்பா
ஆகையால் பாவவினை அறவினைகள் இவற்றுள்ளே
எதனைமுத லனுபவிக்க எண்ணினாய் சொல்லென்றே
இயமதர்மன் கேட்டிடவே, யான்முதலில் புண்ணியத்தின்
சுபபலனை அனுபவிக்கத் துணைபுரிவீர் சுவாமி என்றான்
தும்பிமுகன் பணிபுரிந்த தூயபல னாலேநீ
பூவுலகில் மன்னனாய்ப் போய்ப்பிறப்பாய் என்றுயமன்
புகன்றதுமே காமந்தன் புனித,சௌ ராஷ்டிரத்தில்
தேவநகர் எனுமிடத்தில் திகழ்சோம காந்தனென
சிறந்த மன்னன் குடும்பத்திலே சீர்பெருக வந்துதித்தான்

* * *

## (3) சோமகாந்தன்

சௌராஷ் டிரதேசத் தகைமைமிகு வேந்தனாய்
தையல் சுதன்மைதனைத் தாலிகட்டி மணம்பூண்டான்
கௌரவமாய் அரசுசெய்தான் கணபதியின் கருணையினால்
கவினுயர்ந்த ஏமகண் டன் எனும்மகனைப் பெற்றார்கள்
சோமகாந்தன் ஊழ்வினையால் சொறிகுஷ்ட நோய்பிடிக்க
தொடர்அரசை மகனுக்குச் சொர்ணமகு டம்சூட்டி
வாமமனை யாளுடனே மந்திரிமார் இருவர்வர
வனம்புகுந்து காய்கனிகள் வாய்மடுத்து வாழ்ந்து வந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (4) பிரம்மஹத்தி நீங்கியது

அன்றொருநாள் சோமகாந்தன் அடர்ந்தபெருங் காடெல்லாம்
அலைந்து களைப்புற்றுச் சோலையொன்றை வந்தடைந்தான்
நன்னிழலின் மரத்தடியில் நலமாகப் படுத்தயர்ந்தான்
நண்ணிவந்த மந்திரிமார் நீரெடுக்கச் சென்றார்கள்
நீரெடுக்கும் தடாகத்தை நாடிவந்த ஒருசிறுவன்
நிழலில் படுத்திருந்த மன்னனையும் மனைவியையும்
ஆரணியம் வந்தவகை அன்பாக விசாரித்தான்
அச்சிறுவன் ஓடிச்சென்று தந்தையாம் பிருகுவிடம்
சோமகாந்தன் வரலாற்றைச் சொன்னதுமே அம்முனிவர்
சோகமுற்ற மன்னவனைக் கூட்டிவரப் பணித்திட்டார்
ஓமெழுத்து விநாயகரை உள்ளத்திலே நினைந்து கொண்டான்
உரைத்தபடி முனிவரிடம் ஓடிச்சென்று பாதத்திலே
விழுந்து வழிபட்டான் விஷக்குஷ்ட ரோகமுறும்
வேதனையைத் தீர்க்கும்படி மெய்ந்நடுங்கி வேண்டிநின்றான்

## சோமகாந்தன் நோய்தீர்ந்தமை

அழுந்துகுஷ்ட ரோகமுற்ற ஆதிஜென்ம வரலாற்றை
அன்பாகப் பிருகுமுனி அம்மன்னற் கெடுத்துரைத்தார்
பூர்வஜென்ம வரலாற்றை புகழ்முனிவன் கூறுகையில்
புந்திநொந்த சோமகாந்தன் சந்தேகம் பலகொண்டான்
காரணத்தைப் பிருகுமுனி கருத்திலே நினைந்தவுடன்
கடுகவே அவனுடம்பில் எழுந்தனஆ யிரம்பட்சி
சீற்றத்துடன் அவனுடலைக் கொத்திக்கொத்திக் கிழித்தனவே
சிறந்தமுனி ஹுங்காரம் செய்ய,அவை மறைந்தனவே
ஏற்றமிகு பூதமொன்று வெளிப்பட்டு மன்னனையும்
ஏனையோ ரையும் விழுங்க முற்பட்ட வேளையிலே
பிருகுமகா முனிவர் பிரான் பூதத்தை மரப்பொந்தில்
பிடித்திருக்கச் சொல்லிஅந்த மரத்தையும் பூதத்தையும்
கருகிவெந்து சாம்பராக்கிக் கருணைசெய்தார் அவ்வேளை
காமந்த னால் இறந்த அந்தணன்வந் தும்பருற்றான்
இவ்விதமாய்ச் சோமகாந்தன் எண்ணரிய பூர்வ ஜென்மம்
இயற்றிய பழியுணர்ந்து பிருகுமுனி பாதத்திலே
செவ்வனே வீழ்ந்தழுதான் விளம்புகிறார் முனிவர்பிரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிருகுமுனி கூறிய விநாயகர் கதை

அன்பனே சோமகாந்தா, ஆனைமுகன் விநாயகரின்
அருளைநீ பெற்றுவிட்டால் ஆயவினை தீர்ந்திடுவாய்
பொன்கயிலைப் புண்ணியனார் பூவயனுக் குச்சொல்ல
பொருந்துவியா சன்கேட்டுப் புனிதமாய் எனக்குரைத்த
பூரணனாம் விநாயகரின் புராணத்த் துவக்கதையை
புகலுகின்றேன் நீகேட்டுப் புரிந்தபழி வினைநீங்கி,
வராணனின் கருணையினால் மகாஞானம் பெற்றிடென
மழவிடையோன் முதன்மைந்தன் வரலாற்றை விளம்பலுற்றார்

## (5) வேதவியாசர் தோற்றம்

முன்னொரு காலம் மன்னுயி ரெல்லாம்
பின்ன மடைந்து பேணுதெய் வீகத்
தன்மை யிழந்து தலைதடு மாறி
வன்மைக் கொடுமை மலிந்த நிலையில்
தெய்வம் மறந்து சிவநெறி பழித்து
உய்வகை யறியாது உயிர்கள் திரிவதை,
அரியும் அயனும் சிவனை நாடினர்
அரியை நோக்கி அரனார் புகல்வார்:
நாரணா "நீபோய் நானிலந் தன்னில்
ஓரவ தாரம் உயர்வாய்த் தாங்கி
விரிந்து கிடக்கும் வேதங்க ளனைத்தும்
ஒருங்கு திரட்டி ஒருநான் காக்கி
சனற்குமா ரர்பால் தாங்கு வேதப் பொருள்
இனிக்கும் பதினெண் புராண முணர்ந்து
அன்னவர் வழியாய் ஆன்மா டேற்றும்
மன்னுயிர் பிடித்திட வழங்குவாய்" என்றனர்

***

பராசர முனிவர் பாயுங்கங்கைக்
கரையினில் வாழ்வுறும் காலத் தொருநாள்
ஓடம் ஓட்டும் உறுதொழில் புரியும்
ஈடிலா அழகி மச்சகந்தியின்
படகில் ஏறிப் பயணம் செய்கையில்
கடுகி யவள்தனைக் காதலாய்ச் சேர்ந்தார்
மச்ச கந்தியின் வயிற்றில் பராசரர்
புத்திர னாகப் புண்ணிய நாரணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சமாய் வியாசர், கமண்டலம் தண்டுடன்
உம்பரர் வாழ்த்திட உதித்தனர் இனிதே
குழந்தை வியாசர் குலவிடும் வேதப்
பழஞ்சாத் திரங்கள் பரமனின் கருணையால்
உணர்ந்தனர்: வேதம் ஒன்றாய்த் திரட்டி
இணைந்திடும் இருக்கு யசுர்சாமம் அதர்வணம்
எனநான் காக்கி இதந்தரு முனிவரர்
மனமுற உணர்த்திய வண்ணத் தாலே
வேத வியாசராம் வியன்பெயர் பெற்றார்
ஓதும்பதினெண் புராண மனைத்தும்
சனற்குமா ரரிடம் தான்கேட் டுணர்ந்தார்
புராண மனைக்கும் போக்கறி யாமல்
பராவு பிரமனைப் பணிந்து வேண்டினார்
"பிரணவ விநாயகப் பெருமானே உன்
குறைகளைத் தீர்ப்பார் கொடுப்பார் திருவருள்"
என்றயன் சொல்ல எம்பரன் விநாயகர்
தன் புகழ்தன்னைச் சாற்றுக எனவே
வியாசர் கேட்க விதிஅயன் மகிழ்ந்து
தயாநிதி கணேசன் சால்பினை உரைப்பார்

சுமுகரே ஏகதந்தரே கபிலர் சூழ்கச கன்னரே நாகம்
இமிழ்தரும் இலம்போதரர் எழில்விகடர் இலகிய விக்கினராசர்
அமைவர் சூழ்ந்தேத்தும் கணாதிபர் துமகேதுநன்றருள்கணாத்தியட்சர்
உமியொழிப் பால சந்திரர் தானம்உற்றிருந் தெழுங்காசனனரே

வக்கிர துண்டர் வயங்கிய சூர்ப்பகன்னர் ஏரம்பர் வான்வரங்கள்
தொக்கருள் கந்த பூர்வசர் எனவே சொல்லிய பெயர்பதினாறும்
மிக்குரைத் திடினும் கேட்பினும் வித்தைவிவாகம் வேட்டெழும் பிரவேச
நிக்கமடுபோர் யாகமாதிகளும் நினைக்குமுன் முற்றுறும் பிள்ளாய்.

இவ்விதமாக எந்தை கணேசர்
செவ்விய நாமம் திகழும் அற்புதம்
அனைத்தையும் கூற அகங்குளிர் வியாசர்
நினைத்து நினைத்து நிகழ் பதினெட்டுப்
புராணம் பாடிப் புகழ்பல கொண்டார்
சராசரம் உய்யச் சதுர்முகன் கூறுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வக்ரதுண்டர்

## (6) விக்கினராஜரின் விஸ்வரூபம்

கழறுவேன் வியாசரே கணேசன் கதையை
மொழிதவறாது முன்னின்று கேண்மின்
பன்னிரு வருடம் பன்னிரு சூரியர்
பின்னிய நிலையால் பிரபஞ்சம் வெந்தது
அனலின் கொடுமையால் ஆதிசேடனும்
கனலும் விஷத்தைக் கக்கினான் எங்கும்
அதனால் பூமியின் ஆருயிர் அழிந்தன
கதிரவன் அனைவரும் கரிச்சாம் பலாயினர்
சாம்பலில் தோன்றிய சப்த மேகங்கள்
தாமத மின்றித் தாரைதாரையாய்
வருடம் நூறு மழையைச் சொரிந்தன
உருவேழுலகும் உற்றபிரளய
வெள்ளத்தில் மூழ்கின வியனுல கழிந்தது
வள்ளல் விநாயகர் வந்து தோன்றினார்
மும்மூர்த் திகளையும் முதல்தோற்று வித்தார்
தம்மை யாக்கிய தற்பரன் தன்னை
அயன்அரி உருத்திரன் ஆகிய மூவரும்
மயல்நீத் தாயிரம் வருடம் தவஞ்செய்(து)
அன்புடன் வேண்ட ஐங்கரன் தோன்றினார்
பொன்நவரத்தினக் கிரீடம் திலகம்
விளங்கும் நெற்றி மிளிர்மணிக் குண்டலம்
துளங்கும் துதிக்கை தோற்றுநாற் கரங்களில்
ஆயுதம் மார்பில் அலர்கொன்றை மாலை
ஆய பவளத் தலங்கார மேனி
கொண்ட வடிவுடன் குஞ்சரன் நின்றான்
கண்டமூ வருக்கும் கருதிய முத்தொழில்
புரிந்திடப் பணித்தார் "பூதநா யகனே
திருந்துமுத் தொழிலும் செய்வகை யறியோம்"
என்றனர் மூவரும், இப்படிக் கேட்டு
நின்ற மூ வரையும் எந்தை கணேசன்
கடைக்கண் நோக்கி கனத்தஎன் வயிற்றுள்
தொடுக்கும் உலகம் எல்லாம் பொலிவதைக்
கண்டுநும் தொழிலை கவினுறச் செய்யலாம்
என்று மூவரையும் எந்தை கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுங்கினார் அங்கே விளங்கும் காட்சிகள்
ஒழுங்காய்க் கண்டனர் உணர்ந்தனர் திகைத்தனர்

* * *

சீவராசிகளுடன் செறிந்தபல் அண்டம்
மேவும் ஈரேழு விளங்கும் புவிகளும்
முத்தொழில் புரியும் மூன்றுமூர்த் திகளும்
சித்திரக் கையிலையும் சீர்ப்பாற் கடலும்
பகவன் பள்ளியும் பயில்நான் வேதமும்
சகல தேவரும் சாற்றுகந் தருவரும்
கின்னரர் கிம்புருடர் கிரகம் நாள்கள்
மன்னும் எண்டிசையோர் மலைகள் அசுரர்
நதிகள் ஆழிகள் நற்றவ முனிவரர்
பதிகள் நகர்கள் பறவைகள் விலங்குகள்
மற்றுள உயிரினம் வகைவகை விருத்தியாய்
பற்றி மிளிர்வதும் பரம்பொருள் கணேசனின்
மத்தள வயிற்றுள் மலரவன் முதலியோர்
சித்தங் குளிரத் திகைப்புடன் கண்டனர்

* * *


சென்ற மூவரும் திரும்பி வரும்வழி
ஒன்றறி யாமல் உள்ளம் கலங்கினர்
இதனை அறிந்த எம்பெரு மான்தன்
துதிக்கையாலே தூக்கினார் பிரமனை
செவிகளின் வழியே திருமால் உருத்திரன்
இவர்களை வெளியே எடுத்து நிறுத்தினார்
முத்தொழில் புரியும் தத்துவம் உணர்த்தி
வித்தக விநாயகர் மெய்யருள் புரிந்தார்

* * *


### ஐங்கரன் வயிற்றுள் மும்மூர்த்திகள் தாம் கண்டவற்றை கூறுதல்

நாதங்கள் ஓரிரண்டாய் நலமருளும் சதாசிவமாய்
பாதங்கள் ஒருநான்கும் பதம்நான்கும் பயில்வித்த
வேதங்கள் அறியாத விநாயகர்தம் திருவருளால்
பூதங்கள் ஓரைந்தும் புரையின்றி எதிர்கண்டோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் புரிகின்ற மலரவனும் மாயவனும்
நதிபாயும் சடைமௌலி நாயகனும் எண்டிசையின்
வதிவோரும் அரக்கர் உருத் திரர்வசுக்கள் மருத்துவரும்
கதி சேரும் நவகோளும் காதலிப்ப எதிர்கண்டோம்

## (7) பிரம்ம சிருஷ்டி

படைத்தார் உயிரையெலாம் பரவுமறைப் பிரம்மா, தான்
தொடுத்த உருவங்கள் சொன்னபடி அமையவில்லை
எடுத்த பிறவிகளும் எதிர்த்தனவே பிரம்மாவை
அடுத்த தொழிலறியா தைங்கரனைத் தோத்தரித்தான்
அலைகடலில் ஓரிலையில் அறிதுயிலாய் ஒருகுழந்தை
நிலையாகக் கிடப்பதனை நினைந்து கண்டான் மறையாளன்
தன்னைநினை யாத செயல் சரிவரா தென்றங்கே
முன்னவனார் விநாயகரும் மொழிந்தாரே பிரமனுக்கு
இம்மொழியைக் கேட்டஅயன் ஈராறு வருடங்கள்
செம்மைஏ காட்சரத்தைச் செபித்துத் தவமிருந்தான்
தவத்துக் கிரங்கினார் தந்திமுகன், தன்னுடைய
நவமான கிரியையுடன் ஞானமெனும் சத்திகளைத்
துணைகொடுத்தார் நான்முகனும், தூயஇரு சத்திகளைப்
புத்திரிகளாய்க் கொண்டு புரிந்தார் படைப்புத் தொழில்
இதயத்தி லேநினைந்தார் ஏழுஆண் மகவுபெற்றார்
பற்றுமுல கங்களையும் படைக்கும்படி ஏவிவிட்டார்
உற்றஎழு புத்திரரும் ஓங்காரன்தாள் சேர்ந்தார்
மற்றும்எழு வரைப்படைக்க மலரடிக்கே போய்ச் சேர்ந்தார்
நற்றவச னகாதியர் நால்வரொடு நாரதரை
தோற்று வித்தார், தம்முகத்தில் சுருதியில் அந்தணர்கள்
ஆற்றுபுய க்ஷத்திரியர் அருந்தொடையில் வைசியர்கள்
மருவுகால்களில் மற்ற வர்ணத்தார் தோற்றுவித்தார்
சிந்தையிலே சந்திரன் திருவிழியில் செங்கதிரோன்
மந்திரநன் நாசியிலே வாயு, முகத்திந்திரனார்
முந்துசெவி வழியே பிராணன் முதல் மருத்துவர்கள்
சிந்துசடை விண்ணுலகம் திருவயிற்றில் ஆகாயம்
பாதத்தில் பூலோகம் படைத்து மனங்குளிர்ந்து
வேதவிநாயகனை வேண்டிநின்றார் பிரம்மாவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தோத்திரம்

தோற்றாமே உலகனைத்தும் தோற்றியளி யாதளித்து
பாற்றாமே பாற்றியிடும் பண்ணவனின் பதம் போற்றி
தேற்றாமே உயிரனைத்தும் தேற்றிமல மாயை கன்ம
நீற்றாமே நீற்றியருள் நின்மல நின்பதம் போற்றி.

## (8) முழுமுதற் கடவுள் திருமணம்

விநாயகரின் கிரியைஞானம் ஆயசத்தி
விதிஅயனின் சித்திபுத்தி மக்களாகி
மனமினிய மங்கையராய்ப் பருவமெய்த
வணங்கினான் விநாயகரைப் பிரம்மதேவன்
வேண்டியவா றவர்களைத்தாம் மணம்முடிக்க
மெய்ஞ்ஞானக் கணபதியும் சம்மதித்தார்
தூண்டுகலை நாரதரும் வந்துதோன்றி
சுந்தரிகள் வடிவழகை வியந்து சொன்னார்
நாரணனும் சிவனும்பார் வதியும் வந்தார்
ஞானமுயர் முனிவர்கள் தேவரெல்லாம்
வாரணனின் திருமணத்தைக் காணவந்தார்
மண்டபங்கள் விஸ்வகர்மா நன்கமைத்தார்
துந்துபிகள் பலமுழங்க ரிஷிகள் கூட்டம்
சுருதிசொல வித்தியா தரர்கள் பாட
முந்துகலைச் சரஸ்வதி நதிநீ ராட்ட
முருகன் முதல் யாவருமே ஆசிகூற
சித்திபுத்தி மங்கையர்க்குத் தாலிசூட்டி
சிறந்தமுழு முதற்கடவுள் மணம்புரிந்தார்

## (9) மதுகைடவர் வதம்

பரந்தாமன் பாற்கடலில் பாம்பின் மீது
பள்ளிகொள்ளும் காலத்தில் அவரின் காதில்
இருந்து வந்தார் மதுகைட வர்எனப்பார்கள்
இவ்வுலகும் வானுலகும் எங்கும் தங்கள்
ஆதிக்கம் செலுத்தித்தே வரைக் கலக்கி
அடக்குமுறை செய்தார்கள், அதனால் தேவர்
வேதத்தின் பிரமனுடன் விஷ்ணுபால் போய்
விபரத்தைச் சொன்னார்கள் விஷ்ணு மூர்த்தி
அவர்களிடம் போரிட்டார், அவர்கள் மாயை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநந்தமுறு போர்செய்தார் அரிதிகைத்தார்
சிவனிடம் போய் அயல்வனத்தில் யாழ் வாசித்து
திருவருளை வேண்டிநின்றார் சிவனார் வந்து
நவமான கணேசரின் சடாட்சரத்தை
நாரணனுக் குபதேசம் செய்து மூத்த
கணபதியின் கருணைபெற்று வெல்க என்று
கனிந்தமொழி கூறினார் கண்ணனும் போய்த்
துணையாகக் கணபதியைத் தோத்தரித்து
தூயசக்க ரத்தாலவர்கள் தலையறுத்தார்

## (10) விமராசனின் சந்ததிவரலாறு (விஸ்வாமித்திரர் கூறியது)

ஆறெழுத் தாழியேந்தி அநுட்டித்த வாறு தேர்ந்தேன்
ஈறிலி காதையின்னும் இயம்பென வியாதன் வேண்ட
வீறுயர் விச்சுவா மித் திரனைவெல் வீமன் சார்ந்து
பேறுபெற் றதனை முற்றப் பேசுவன் *வாசக்கஞ்சன்*

விதர்ப்பதேசக் கவுண்டியம் எனும்நகர்வாழ்
வீமனெனும் மன்னனும் அவனின் இல்லாள்
மதிமிகுந்த சாருகா சினியும் பன்னாள்
மக்கட்பேற் றுக்காகத் தவம்புரிந்தார்
அன்றொருநாள் சுமந்து, மனோ ரஞ்சிதம் பேர்
அமைச்சர்கள்பால் அரசியலை ஒப்படைத்து
நின்றுதவம் புரிவதற்குச் செல்லுகின்றோம்
நீங்களர சியலைநடாத் திடுவீர் நாங்கள்
வராவிட்டால் இருவீரும் நாட்டை இரண்டாய்
வகுத்தெடுத்துக் கொண்மினென வீமன் சொல்லி
பராவுமர வனம்சென்று வாழ்ந்து வந்தான்
பசுவுடனே புலியும்கரு டனும்வெம் பாம்பும்
பூனையுட னேஎலியும் புலியும் மானும்
பொருந்தநன் னண்பர்களாய் வாழ்தல் கண்டான்
ஆனஇந்த அற்புதத்தை அறியஎண்ணி
அருகிலுள்ள விசுவாமித் திரனிடம்போய்
மகரிஷியே வணக்கமெனத் துவண்டு நின்றான்
மகாமுனிவர் இருவரையும் ஆசீர்வாதம்
மிகப்புரிந்தார் மன்னவனும் தாங்கள் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனையை முனிவருக்குக் கூறினார்கள்
கேட்டமுனி, மன்னவனை விழித்துச் சொல்வார்
"கேடுனக்கு வந்தவகை சொல்வேன் கேட்பாய்
கோட்டொருகை விநாயகரை உனது முன்னோர்
கும்பிட்டு வந்தார்கள். மறந்தாய் நீயும்
குலவுமனை யாளுடனே சுகித்து வாழ்ந்தாய்
குலம்பொங்கு நின் முன்னோர் வரலா றெல்லாம்
நலமாகக் கூறுகிறேன் கவனித்துக்கேள்.
நயந்த*கர் நாடகத்தில்* பானு என்னும்
நகர்தன்னை வல்லவன் என்பான் ஆண்டான்
நன்மனைவி கமலைஒரு மகனைப் பெற்றாள்,
மகனோ கண் குருடுசெவி டூமை, தேகம்
மாறாத இரணங்கள் அருவருத்த
உடல்தோற்றம் அவனுக்குத் தக்கன் என்றே
உவந்துபேர் வைத்தார்கள். குழந்தைக்காகத்
தொடர்தான தருமங்கள் பலவும் செய்தார்
சுகமேது மில்லாத நிலைமை கண்டு
வல்லவன்தன் மனைவியையும் பன்னிரண்டு
வயதுடைய தக்கனையும் நாட்டைவிட்டு
பொல்லாத வனத்துக்குத் துரத்திவிட்டான்
புத்திரனும் கமலையும் கனிகாய் உண்டு
கவலையால் அலைந்தார்கள் கள்வர்கூட்டம்
கமலையின் ஆபரணங்கள் பறித்துச் சென்றார்
அவலநிலை பொறுக்காமல் உயிரை மாய்க்க
அகங்கொண்டாள் குழந்தைக்காய்ப் பொறுத்திருந்தாள்

### கமலையின் கவலை

பற்றார் யாரோ பண்டுசெய் நல்லூழ் படர்காலை
இற்றார் யாரோ ஓங்கிய தீயூழ் உறுகாலை
எற்றோ என்னி இரங்கலின் என்னாம் இடம்மாதைப்
பெற்றான் அல்லால் காப்பில்லை என்றே பெயர் குற்றாள்

***

மன்னுகுண் டினபுரத்துக் கருகேகாட்டு
வழியாகக் கமலைதக் கனையும்கொண்டு
தன்னிலைக்கு மனமுருகி அழுதவண்ணம்
தவித்தவளாய்ச் செல்லுகையில் முற்கலன் பேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவரந்த வழியிலிவர் களைக்கடந்து
முதுவழியே சென்றனர்அன் னாரின் தேகத்
தினியசிவக் காற்றுத்தக் கனிலே வீச
இருகண்ணும் பார்வையுற்றான், செவிடுநீங்கி
உடலிலுள இரணங்கள் தீர்ப்பெற்றான்
உருவழகு பெற்றுவாய் பேசலுற்றான்
இடரின்றிக் கமலைஆ னந்தம் கொண்டாள்
இன்னொருநாள் உத்தமவே தியர் உவந்து
தக்கனுக்கு விநாயகமந் திரத்தை ஓதிச்
சந்ததமும் வழிபாடு செய்யச் சொன்னார்
பக்குவமாய் அவன்தினமும் வணங்குங்காலை
பரம்பொருளாம் விநாயகனார் காட்சிநல்கி
என்னவரம் வேண்டுமெனத் தக்கன், என்னோ(டு)
எய்தியவர் யாவருமே சுகமாய்வாழ
நின்னருளைத் தரவேண்டும் என்றான், ஐயன்
"நீஎனது * பக்தனின் காற்றுப்பட்டு
துன்னுவினை நீங்கினாய் அவன்பாற்சென்று
சுகமெலாம் பெறுகஎன" அருள்புரிந்தார்

### தக்கன் கணேசரைத் தோத்திரிக்கிறான்

குணமொடு குறிபல கொள்கைகொள் ளாய்எழில்
அணிமலர் மணமென ஆக்கையின் உயிரெனப்
பணிஉயிர் அறிவெனப் பயிலுமத் துவிதமாங்
கணபதி நினதியல் காணவல் லார்எவர்

–

கமலையொடு தக்கனும்முற் கலன் பால், கால்கள்
கடுகிநடந் தவரிடம்தம் வரலா றெல்லாம்
அமைவாகச் சொல்லியதும் முனிவர் வாழ்த்தி,
அவர்களது சொந்தஇடம் போகச் சொன்னார்

## (11) வல்லாளன்

(விஸ்வாமித்திரர் கூறிய வரலாறு)

சிந்து என்னும் தேசத்திலே வல்லிஎன்னும் பட்டினத்தில்
வந்துவாழ்ந்த கல்யாணன் வைசியரின் குலமுடையான்
இந்துமதி என்னும்பெண்ணை இணைந்துதிரு மணம்முடித்து

(* முற்கலமுனிவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தனாய்த் தவம்சிறந்த வல்லாளன் தனைப் பெற்றார்
வல்லாளன் விநாயகரை வழிபட்டு விளையாடிக்
கல்லொன்றை மரத்தோப்பில் கண்டெடுத்துப் பூசைசெய்வான்
தோழர்களோ டபிஷேகம் சுத்தநை: வேத்தியங்கள்
நாளும்படைத் தாண்டவனை நாவாலே பாடிடுவன்
மாதரெலாம் கூடிவந்து வல்லாள னால் எங்கள்
பாலரெலாம் கெட்டுவிட்டார் என்றுவசை சொன்னார்கள்
எங்களது பிள்ளைகள்அவ் வல்லாளன் தோழர்களாய்
தங்கள்நிலை தாமிழந்து தவிக்கிறார் என்றவனின்
தாயாரி டம்சொல்லத் தந்தையாம் கல்யாணன்
பேயாகிக் கொதித்தெழுந்தான் பிரம்பொன்றைக் கையிற்கொண்டு
வல்லாளன் பூசைசெய்யும் மரத்தோப்பு வந்தடைந்தான்
வல்லாள னின் தோழர் மறைந்தோடி விட்டார்கள்
கல்யாணன் தன்மகனைக் கம்பாலே அடித்தடித்து
நல்வாசல் தோரணங்கள் கோயில்பூசைப் பொருட்களெலாம்
தூக்கியெங்கும் வீசிவிட்டான் தும்பிக்கையான் கல்லையும் தன்
நாக்குமிறிப் பேசிவிட்டு நடுவயலில் வீசிவிட்டான்
அடித்தபுண் காயங்களால் அலையாய்க் குருதிகக்க
தடித்தனத்துக் கல்யாணன் தனையனையோர் மரத்துடனே
கட்டிவிட்டுத் திரும்புகையில் கதறினான் வல்லாளன்
பட்டதுயர் போதுமப்பா பழம்பொருளாம் விநாயகரை
மன்னிப்புக் கேளுங்கள் வரந்தருவார் உங்களுக்கு
என்னையடித் தீர்களென யான்கவலை கொள்ளவில்லை
வாரணனைத் தூக்கிவிட்டு வயலிலே போட்டீர்கள்
பூரணனை வழிபடுங்கள் பொறுத்திடுவான் பிழையெல்லாம்
என்றுமகன் கூறிடவே எடுத்தகொடுந் தடியாலே
பின்னுமவன் மரத்துடனே பிணைந்துநின்ற நிலையினிலே
அடித்தானே அடித்தானே ஆனைமுகன் அடியவனை
கடித்தபல்லுச் செருக்குடனே கல்யாணன் வீடு சென்றான்

* * *

## வல்லாளன் வேண்டுதல்

தந்தைதாய் சுற்றமுற்றும் தமியனேற் கடிகளன்றி
இந்தவை யகத்தில் வேறே யிலையென்ப தின்றுகண்டேன்
முந்துல கனைத்தும் தோற்றி முடித்தருள் முதல்வ மூவா
அந்தணன் என்றான் மைந்தன் அந்தணன் தழுவிச்சொல்வான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தையே கணேசா யானுனைப் பூசித்து
வந்தேன், இதுவோ வழங்கிய பலன்நீ
உன்னை யன்றி ஒருதுணை எனக்கிலை
முன்னவா வந்தென் முன்னில் லாயோ
என்றுவல் லாளன் ஏங்கி யழுதான்.
அன்புயர் சிறுவனாய், அழுதவல் லாளன்
முன்னே விநாயகர் மூர்த்தியங் கெழுந்தார்
கட்டிய கயிற்றைக் கையால் அவிழ்த்தார்
சட்டென எல்லாக் கட்டு மவிழ்த்தன,
காயங்கள் எல்லாம் கடிதே மறைந்தன
மாயச் சிறுவன் மகா கணபதியாய்க்
காட்சி தந்தார், கனிந்ததன் பக்தன்
மாட்சியைக் கூறி, மைந்தனே, உன்னைத்
தண்டித் தவரைத் தண்டிப்ப தென்கடன்
தொண்டும் பூசையும் சுவை மிகப் புரிந்து
நின்னா யுள்நாள் நிறைவுறும் காலமென்
பொன்னார் கழலிற் புகுவாய் என்றனர்

* * *

### கல்யாணன் நிலை

அடித்ததடியுடன் அகன்றகல் யாணன்
நடுத்தனி வழியில் நயன மிழந்தான்
காதுகள் செவிடாய் கதைசொலா ஊமையாய்
வேதனைமிக்க மேனியெல் லாம்புண்
இதனை யறிந்தாள் இந்துமதி தன்
மகனை யழைத்தாள் வாரண விநாயகப்
பகவனை வேண்டினாள் பலனில் லாமல்
மீண்டும்வல் லாளனை மிகப்பணி வுடனே
பூண்ட செயல்களைப் பொறுப்பாய் மகனே
வந்தநின் தந்தை மருவிய சுகம்பெறத்
தந்திமுக னிடம் வேண்டுதி என்றாள்
அந்த வேளை ஐங்கரன் பத்தன்
சிந்தனை சிறந்த தெய்வவல் லாளன்
அம்மா ஐங்கரன் ஆணையை உரைக்கின்றேன்
இம்மையில் இறந்தபின் எடுப்பீர் மறுபவம்
நீங்கள்கர் நாடகம் என்னு மூரிலே
பாங்குயர் வல்லவன் மனைவியாம் கமலையாய்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கனாம் பெயரொடென் தந்தையைப் பெற்று
தக்கபே றடையுங்கள் என உரைத்தனுப்பினான்
வல்லவன் பின்னர் மத்தள வயிறனின்
நல்லரு ளாலே நண்ணினான் சொர்க்கம்

## (12) தக்கனுக்கு அரசு கிடைத்தது

மூவர் பெருமான் எனையாண்ட முக்கட் பெருமான் அரியாதி
தேவர் பெருமான் ஒருகோட்டுச் செல்வப் பெருமான் அடியார்க்குக்
காவ அரிய விருந்தாங்கே யிருந்துதக்க னரசுரிமை
மேவு மெனின்வேல் கரத்தேந்தும் வீமமேலும் விளம்புதுங்கேள்

கல்யாணன் ஊழ்வினை காட்டியவாறு
சொல்லிய கமலையின் மகனாம் தக்கனாய்
வந்து விநாயகன் மலரடி பெற்றான்
முந்திய அவன்கதை மொழிவாம் இன்னும்

—

முற்கல முனிவரின் மெய்க்காற் றாலே
அற்புத மடைந்த தக்கனும் கமலையும்
அப்பன் விநாயகர் பணிசெயும் காலை
சொப்பன மொன்று தக்கன் கண்டான்
ஆனையொன்று மாலை சூட்டி
ஆனபொற் சிவிகையில் அமர்த்தக் கண்டான்
கவுண்டிய புரத்தில் அருகே குளக்கரைச்
சிவமகன் ஐங்கரன் சேவையிலிருக்க
கவுண்டிய மன்னன் சந்திர சேனன்
புவிதனை நீத்தான் அவன்தன் மனைவி
சுலபை என்பாள் நீர்க்கடன் செய்தபின்
குலமுறை அரசை ஆளும்பொறுப்பை
ஆரிடம் கொடுப்போம் சந்ததியில்லையே
சீரிய வகையைச் செப்புக என்று
மந்திரி மார்கள் மாமுனி முற்கலர்
தம்மிடம் சுலபை சாலஆ ராய்ந்து
பட்டத்து யானைக்கு மாலையைக் கொடுத்து
திட்டமாய் நல்ல செங்கோல் மன்னனை
தேடிவா என்றதும் ஓடிய யானை
கூடுதக்கனுக்குக் குளிர்மாலை யிட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்கல முனிவர் மொழிந்தனர் ஆசிகள்
பொற்சிம் மாசனம் பொலிந்தான் தக்கன்.
வளர்முடி சூடிய வரலா றறிந்து
வல்லவன் வந்து மகனை வாழ்த்தி
உளமகிழ் வுற்றான் ஊரெலாம் செழித்தது
வீரசேனனுக்கு விநாயகர் கனவில்
விளம்பிய வண்ணம் வியந்துதன் மகளை
சீருயர் திருமணம் தக்கனுக் கியற்றினான்
தக்கனின் மைந்தன் *பிரகத் பானு*
தழுவு மவன்மகன் *கட்கதரன்* அவன்
மிக்கசீர் மைந்தன் *கபாலன்* அவன்மகன்
*வீர யதாகரன்* அவன்மகன் *வபுத்திரன்*
இவன்மகன் சித்திர சேனன் இவன்மகன்
இசைதரு வீமன் இவற்றை அறிவாய்
என*விஸ் வா*முனி இயம்பி விநாயகர்
இனியமந்திரமும் உபதேசம் செய்தார்
விபரமறிந்த வீமராசனும்
விளங்கிய மனையாள் சாருகாசினியும்
இபமுக வேளை இனிது போற்றி
இராச்சியப் பொறுப்பை ஏற்றுமகிழ்ந்தான்
கண்ணிய வல்லாளன் கருதிப் பூசித்த
கல்லு விநாயகரை கவின்கோ யில்கட்டி
பண்ணுயர் பூசனை பண்ணிவந்தார்கள்
பரம்பொருள் விநாயகர் பலவரம் கொடுக்கிறார்

-

விநாயகர் அருளால் வீமராசனுக்கு
வித்தக மைந்தன் ருக்குமாங்கதன்
மனநிறைவெய்த வந்துபிறந்தான்
மைந்தனைக் கபில முனிவரிடத்தே
சகல கலைகளும் கற்க விடுத்தான்
தன்னரசியலை ருக்மாங் கதனிடம்
அகமகிழ்துதவி அணிமுடி சூட்டி
ஆனைமாமுகனின் அரும்பணி புரிந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (13) வனிதையால் விளைந்த துன்பம்

பக்குவ மாக ருக்கு மாங்கதன்
பண்பாய் அரசு பரிபா லித்தான்
மிக்குயர் காட்டில் வேட்டையாடிட
விழைந்தான் அமைச்சர்கள் வேறுகாவலர்கள்
உடன்வரச் சென்றவன், உறுவழிதவறினான்
ஒவ்வொரு வராக ஓடினர் வேட்டையில்
இடம்பல செல்ல இவன்தனியாக
எதுசெல் வழியெனத் தெரியா தலைந்தான்.
தாகத் தாலே தவித்தான் ஆங்கோர்
தவமுனி என்னும் கவிமுனி யகத்திற்
கேகினான் அங்கே முனிவரும் சீடரும்
எவருமங்கில்லை முனிவரின் பத்தினி
முகுந்தை என்பாள் முன்னே நின்றாள்
முன்னிய தாகந் தீர்த்திடத் தண்ணீர்
தரும்படி மன்னன் தயாவுடன் கேட்டான்
தண்ணீர் கொடுத்ததும் சார்ந்த மன்னனைத்
தன்னுடன் சேரத் தழுவினாள் முகுந்தை.
தவித்தான் ருக்மாங் கதனு மாங் கேங்கி
உன்னைச் சேரேன் உறுதியென்று ரைத்தான்
உடனே முகுந்தை கொடுஞ்சாப மிட்டாள்.
வெண்குட்ட நோயால் வேந்தனலைந்தான்
வேட்டைக்கு வந்தோர் ருக்மாங் கதனை
எங்கும் காணா திராச்சியம் சேர்ந்தனர்
இடருறு மன்னன் அங்கோர் கணபதி
ஆலயம் சென்றான் அழுதான் விழுந்தான்
ஆலயக் குளத்தில் நீராடுகையில்
சீலமார் நாரதர் சேண்வழி செல்வதைத்
தெரிந்தான் மன்னன், கரமெடுத் தழைத்தான்
வந்தனர் நாரதர் மன்னவன் பட்ட
வரலா றறிந்தார்: "ருக்மாங் கதனே
இந்தநோய் தீர இந்திரன் அமைத்த
இனியகந் தர்ப்பம் என்னும் ஊரில்
வீற்றிருந்தருளும் விநாயகர் கோயில்பால்
கணேச குண்டம் எனும்தடா கத்தில்
போற்றிநீ ராடினால் போகும் நோயெலாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறலும் , எம்பெரு மானே
இந்திரன் கணேசனை ஏன்தா பித்தார்
எனருக் மாங்கதன் இரந்து வேண்டினான்
மனநிலை குளிர வழுத்துக என்றான்

## (14) இந்திரனின் அற்பசந்தோஷம்

(நாரதர் கூறியது)

நாரதர் முனிவர் நயந்துரை செய்வார்.
நானொரு வேளை வானவனிந்திரன்
பேரவை சென்றேன், பெருநடமாடும்
பெண்கள் ஊர்வசி மேனகை அரம்பை
எண்ணும் திலோத்தமை இவர்களின் மேலாம்
எழிலுடை அழகி கௌதம முனிவரின்
பெண்ணாம் அகலிகை எனப்புகழ்ந் துரைத்தேன்
இதனைக் கேட்டதும் இந்திரன், இரவிலே
இருஷிகௌதமர் இருப்பிடம் சென்று
சதிமிகு சேவலாய் அதிரக் கூவினான்
தவமுனி வைகறைச் சாமமென் றெழுந்து
நதிக்கரை சென்றார், நண்ணிய இந்திரன்
நன்முனி வரைப்போல் நங்கை அகலிகை
வதிவிடம் புகுந்து மருவினான், அவளை,
வந்தநேரம் பிழையெனத் தெரிந்து
திரும்பினார் முனிவர், திடுக்கிட் டிந்திரன்
திகைத்த வேளை செயலை உணர்ந்த
அருளுயர் கௌதமர், "அங்கங்க ளெல்லாம்
அரிவையர் குறிகள் ஆகுக" என்று
சபித்தார். இந்திரன் சஞ்சலமடைந்து
தடாக மொன்றில் தாமரைத் தண்டினுள்
எவரும் காணா தேங்கி ஒளித்தான்
"இனமறியாத பெண்ணே நீகருங்
கல்லாய்ப் போ"என அகலிகை தன்னை
கடுஞ்சாப மிட்டார். "கடையேன் செய்த
எல்லாப் பிழையும் பொறுத்தருள்" என்றாள்
இராமன் மிதிலைக் கேகும் வேளை
"அவனடி பட்டதும் அகலும் சாபம்"
ஆகிய சாப விமோசனம் கொடுத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலை யடைந்து கனமிகு தேவர்கள்
கௌதம முனிவரின் கால்பணிந்தேத்தி
இந்திரன் சாபம் தீர்த்திட வேண்டினர்.
இந்திரனிருக்கும் இடத்தை யான் காட்டினேன்
அந்தரர்க் கிரங்கி அருந்தவக் கௌதமர்
"ஆனைமுகவனின் ஆறெழுத்ததனை
அணிகுருவியாழன் அறிந்திடு வண்ணம்
ஞானோப தேசம்யான் நல்குவேன் வியாழன்
நண் ணுமிந்திரற்கு நயந்து புகட்டுவான்"
இவ்வகை விளம்பி இந்திர னுடம்பில்
இலங்குயோ னிக்குறி எண்ணூறு மாயிரம்
செவ்விய கண்களாய்த் திகழ்ந் திடுமென்று
சீரியசாப விமோசனம் கொடுத்தார்
விமோசனம் பெற்ற விண்ணவர் கோமான்
விநாயக மூர்த்திக்கு மிளிர்கதம் பவனத்
தோமெனும் மந்திரம் உச்சரித்தாலயம்
உவப்புட னாக்கி உயர்தவம் புரிந்தான்
மெய்த்தவம் கண்டு விநாயகப் பெருமான்
வேண்டும் வரத்தை வினவுதி என்றார்

—


கோடா மெவைக்கு முறுகாரணங்கள் கிழவோய்பதத்தினிறையன்(பு)
ஆடாமையாகும் அதனாலெனக்குன் அடிவாரிசத்திலுழு வல்
வீடாமை வேண்டும் அதுவன்றியுள்ள விழைவுக்கு மிங்குன் வடிவுக்
கோடாத சிந்தா மணியென்னும் நாமம் உறல்வேண்டுமொக்குமுறுக

அப்பனே கணேசா அடியேன் தங்கள்மேல்
அளவிலா பத்தியும் அமரர் வாழ் இத்தலத்(து)
ஒப்பிலாச் சிந்தா மணிவிநாயகர்ப் பேர்
உடனே தேவரீர் உறைந்திடு வரமும்
மருவும் சிந்தா மணியெனும் தீர்த்தமும்
வழங்கி, வணங்குவோர் மகாசித்தி பெறவும்
கருணை செய்தருள் கெனக் கைகூப்பி நின்றான்
கணேசனும் அருளினார் எனக் கதை கூறி
நாரத முனிவர் ருக்மாங் கதனுக்கு
நயந்தாசி நல்கினார் மன்னவன் பின்னர்
சீருறு கதம்ப வனத்தில் கணேசரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சிந்தா மணி யெனும் தீர்த்த மாடினான்
விண்ணிடை வந்த விமானத்திலேறி
வீமன் சாரு காசினி என்னும்
புண்ணிய பெற்றார் தம்முடன் அரண்மனை
புகுந்தனன். பின் வந்த விமானத்தில் மூவரும்
ஓமெனும் விநாயகர் உலக மடைந்தனர்

## (15) கிருச்சமதரின் கோபம்

உருக்குமாங்கதனை உறவுற வலிந்த
உளந்தடுமாறிய முகுந்தை என்பாள்
கருக்கும் காம விரக வேதனையால்
கடுகிய பித்தம் பிடித்துத் திரிந்தாள்
அவள் நிலையறிந்த அமரர்கோன் இந்திரன்
அரசன் ருக்குமாங்கதன் போல்வடி வெடுத்து
தவறிய முகுந்தையைத் தான்சேர்ந்து கொண்டான்
தையலும் கர்ப்பமாய்த் தனையனைப் பெற்றாள்
பெயர் *கிருச் சமதர்* என்னும் குழந்தையை
பேணுதன் மகனென கவிமுனி நினைத்தார்

* * *

மகத நாட்டு மன்னன் சூரன்
தகவுறு தந்தையின் சிராத்தத் துக்கு
முனிவர் பலரை முறைப்படி அழைத்தான்
நினைவுறு முனிவர்கள் நிகழ்ச்சியின் போது
அத்திரி முனிவரும் கிருச்ச மதரும்
மெத்திய வாதம் விளம்பிக் குமுறினர்
அத்தருணத்தில் கிருச்ச மதரை
அத்திரி முனிவர் "நீகவி முனிவரின்
மகனலன் ருக்மாங் கதனின் மகனே
தகமை யாய்அறிதி" எனவ்சை சொன்னார்
கிருச்ச மதர்போய்த் தாயிடம் வினவி
சரித்திரம் உணர்ந்தார் தாயைச் சபித்தார்
இலந்தை மரமாய் விளங்கென, அவளும்
"நலந்தரு தாயைச் சபித்தவனே ஒரு
மகனுனக் குதிப்பான் கண்டவர் நடுங்கும்

(* சிந்தாமணி கணேசகுண்டம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவத்துடனே" எனச்சாப மிட்டாள்.
கேட்டசா பத்தால் கிருச்சமதர் மனக்
கிலேச மடைந்தார் மனந்தடுமாறி
வாட்ட மொடலைந்தார் வானொலி சொன்னது
"மகனே நீருக் மாங்கதன் மகனலன்
இந்திரன் மகன்நீ " என்றலும் மகிழ்ந்தான்
இபமுகன் தன்னை இதயம் வைத்து
மந்திரம் செபித்து வருடம்பத் தாயிரம்
மாதவ மிருந்தான் வந்தனர் விநாயகர்
என்னவரங் கேள் என்றலும் தொழுது
எந்தையே இவ்வனம் புஷ்பக வனமென
இந்நகர் புஷ்பக நகரமும் என்ன
இசைப் பெயர் பெறவும் என்றும் நின்னடி
என்மனத்திருக்கவும் எனதுகண்களால்
எளியேன் நின்னெழில் என்றும் காணவும்
நின்வரம் தாவென நின்ற எம்பெருமான்
நிறையருள் புரிந்தார் கிருச்சமதர் பணிந்தார்

ஆக்காமே யாக்கி யளியா தளித்தெவையும்
போக்காமே போக்கிமலம் பொன்றுவித் தொன்றானும்
தாக்காது நின்ற தனிமுதலே நீயடியேன்
வாக்காரக் கூறுமா வந்தெதிரே நின்றனையே

(வி.பு.)

## (16) அரக்கன் பிறந்தான்

கிருச்சம தர்தினம் கிருபை விநாயகர்
திருவடி பரவித் திகழும் காலை
முன்பு பழித்த முனிவர் குழாங்கள்
முறைமுறை வந்து போற்றிச் சென்றனர்
முனிகிருச் சமதர் மோன யோகத்தில்
இனிதே யமர்ந்தார் யோகத்தின் பின்
கண்ணை விழித்தார் கனல் யோகத்துத்
திண்ணிய பார்வையால், செப்பிய முகுந்தை
சாபத்தின் படி சகமெலாம் அஞ்சும்
கோபத்துடனே கொடுமிடி முழங்க
பலிஎனும் அசுரன் வலிதுவந்துதித்தான்
அவனுக்கு விநாயகர் அரியமந்திரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவியில் கிருச்சமதர் உபதேசித்தார்
அன்னவன் விநாயகர் அடியிணை போற்றி
உன்னரும் வரங்கள் உவப்புடன் பெற்றான்
இந்திரன் முதலிய இமையோ ரெல்லாம்
வந்தடி பணியும் வகைசெயல் படைத்தான்
விநாயகர் கொடுத்த வரத்தின் படியே
வெள்ளி பொன் இரும்பென விளங்குமுப்புரத்தை
தனக்கெனக் கொண்ட தகைமிகு திரிபுரன்
தந்தைபால் சென்று வாழ்த்துகள் பெற்றான்
ஆதிக் கணபதிக் காலயம் தீர்த்தம்
அனைத்தும் முண்டாக்கினான் அமரரையடக்கினான்

## (17) திரிபுரன்

ஐராவதத்தை அபகரித்தான்பின்
அமரர்கோன் இந்திரன் அரிஅயன் அனைவரும்
கைலையை அடைந்தனர் கதிமிகு உலகெலாம்
கைப்பற் றினான்அவன் கருத்தினால் மக்கள்
மூவரைப் பெற்றான் வச்சிரத மிஷ்டரன்
ஆகிய மைந்தன் சுக்கிலம் என்னும்
இரும்புக் கோட்டையும் வீமகாயன் சீர்
எழிலார் சுபிலமாம் வெள்ளிக்கோட்டையும்
பெருங்காள கூடன் சுவர்த்தி என்னும்
பெருகுபொன் கோட்டையும் தனித்தனியாக
ஆளும்படியே அவர்களை விடுத்தான்
அசுரன் சண்டன் பிரசண்டன் தமை
அயனரி உலகை ஆண்டிட விட்டான்
வருபலி திரிபுரன் மகிஷியை மணந்தான்
மதன் எனும் புத்திரன் வந்து பிறந்தான்

* * *

திரிபுரனாம் பலியென்பான் பாதாளம் வான்
செறிந்தஉல கத்தனையும் வெற்றிகொண்டு
அரசியற்றி அடக்குமுறை செய்தகாலம்
அமரரெலாம் நாரதரை நாடித்தங்கள்
பரவுதுயர் அத்தனையும் கூறினார்கள்
பலரும்போய் விநாயகரை வேண்டினார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனிடத்தே போகும்படி ஐங்கரத்தான்
அனுப்பினான் தான்துணையாய் வருவோம் என்றார்
கணபதியும் கலாதரன் எனும்பேரோடு
கவினாரும் அந்தணனாய்ப் பலிபாற் சென்று
குணமிகுந்த திரிபுரனே எனக்குத்தாங்கள்
குறித்தவகை செயவேண்டும் மென்று நின்றார்
அணிநிறைந்த அந்தணரே என்னவேண்டும்
அறையுமென, "அரசேஅக் கைலைதன்னில்
அணைசிவனும் பார்வதியும் வணங்கும் சிந்தா
மணியெனக்கு வாங்கித்தர வேண்டு"மென்றார்
அந்தணரே ஈதுபெரும் வேலையா யான்
அங்குசென்று கொணர்ந்திடுவேன் என்றெழுந்தான்
வந்தபணி யாளர்களைத் தூதனுப்பி
மணியதனை வாங்கிவரச் சொன்னார், தூதர்
அந்தமணி தரமுடியா தென்றார், என்றே
அவனுக்கு வந்துரைக்க அடங்காச் சீற்றம்
செந்தழலாய்க் கண்சிவக்கப் படைதிரட்டி
சிவபெருமா னோடுசமர் புரியச் சென்றான்

* * *

## (17) திரிபுரன் – சங்காரம்

படையெலாம் பணிப்பவர்க் கருள்பரனும் ஐங்கரன்பால்
படைகொள்வான் கதை கேட்டனை பார்த்திப, இனிமேல்
அடையலார்ப் புரன் அவ்வர னழித்ததுங் கேளென்(று)
இடையறாதுரைப் பானெழில் மாதவப் பிருகு
(வி.பு.)

சூரியனும் சந்திரனும் சக்கரங்களாக
துலங்குரித் திக்குகள் உடபரப்பாக
சீரிய சமயங்கள் உள்ளிடமாக
செறிமாயை முகப்பாக பூமிதட்டாக
சொர்க்கமா சனமாக துலங்குபா வதங்கள்
தூயபரி வட்டமும் தூண்களுமாக
நற்றத்து வங்கள்மேல் கலசமுடியாக
நண்ணுபல மேகங்கள் சுற்றுப்பட்டையாக
சீராளும் புராணங்கள் தோவடங்களாக
தெறிக்கும் அலை வாருதிகள் தோரணங்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாராரும் வேதங்கள் சதுர்க் குதிரையாக
சாற்றுமுப நிடதங்கள் குதிரை யணியாக
காருண்யம் மிருவசுக்கள் கடிவாளமாக
கர்மஞான காண்டங்கள் நுகத்தடிகளாக
ஆயமறை வருபிரமன் சாரதியுமாக
அமைந்த மணித்தேரிலே மேருவை வில்லாய்
மாயனைஓர் அம்பாக்கி வாசுகி நாணாக
வாயுயமன் முதலியோர் ஆயுதங்காளக
பொங்கரவ சங்கரன் புன்முறுவலோடு
போருக்குப் புறப்பட்டான் பேரிகை முழங்க

***

நடந்தது கடும்போர் மண்டல நடுங்க
மாண்டார்கள் வானவர் பலகோடிபேர்கள்
அடுநஞ்சுக்கண்டனின் ஐந்துமுகம் தனிலே
*ஐந்துமுக விநாயகர் வந்துதுணை தந்தார்
நந்தியம் பெருமானும் போர்த்தலைமை தாங்க
நடந்த பெரும்போரினைக் கண்டவிண்ணோர்கள்
சிந்தைமிக நடுக்கமுற உமையம்மை கண்டு
சிவனுக்கு மெதுவாகச் செப்பினார் ஆங்கே
அம்மையே திரிபுரனின் பராக்கிரம மெல்லாம்
அமரரும் யாவரும் அறிய வெளிப்படவே
இவ்வளவும் போரிட்டேன் இனியவனும் மாள்வான்
என்றுசிவன் கணபதியை இதயத்தில் வைத்து
கவ்வுதிரி சூலத்தால் கடியவனை அழித்தார்
கனத்தமுப் புரங்களும் கருகியழிந்தனவே
திரிபுரனின் ஆன்மா செஞ்சோதியாகி
சிவனுடன் கலந்தது சாந்தியுற்றதுவே
செருவிலிறந்தோரைச் சிவன்கருணை கொண்டு
சீவனுறச் செய்தார் திருக்கைலை சென்றார்

## (18) பார்வதி அனுட்டித்த சதுர்த்தி விரதம்

சிவனாரை அவமதித்துச் செய்வேள்வி யில்ஆட்டின்
அவமான தலைபெற்ற அக்கிரமன் தக்கனது
மகள்தாட்சா யணியென்ற வசைநாமம் நீங்குதற்கு
வகைசொல்க என்றரனை மாதுமையாள் கேட்டுநிற்க

(*பஞ்சமுக விநாயகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையரசன் மகளாக வளர்வாயென் றுரைசெய்தார்
அம்மையார் அப்படியே ஆதிமலை யரசனுக்கு
செம்மைதரு மகளாகத் திருவவதா ரம்செய்து
பார்வதியாம் பேருடனே, பயில்தேவி தந்தையிடம்
பேர்வளரும் சிவனடியைப் பிடிப்பதற்குச் சிறந்தத்தவ
விரதமெது சொல்கஎன, பிரணவத்தின் வடிவான
கருதுவிநா யகசதுர்த்தி கனசிறப்புக் கொண்டதென்று
அனுட்டிக்கும் முறைசொன்னான் ஆவணியில் வளர்சதுர்த்தி
இனிதாகத் தொடங்கிமறு மாதத்தின் வளர்சதுர்த்தி
முப்பதுநாள் மண்பொன்னால் வடிவமைத்துக் கடைசிநாள்
செப்பிடுமங் களஇசைகள் சேர்ந்துவரக் கொண்டுசென்று
ஓடும்நதி யிற்கரைத்தால் ஓங்கார விநாயகனார்
நாடும்வரம் தந்திடுவார் என்றலுமே பார்வதியார்
இந்தவிரதம் முன்னர் எவரு மநுட் டித்தனரோ
அந்தநல்ல வரலாற்றை அடியேனுக்குரைத்திடுக

* * *

எனக்கேட்க மலையரசன் இனியமக ளைப்பார்த்து
தனிக்கோல வேல்முருகன் தந்தையிடம் வந்தொருநாள்
சர்வசித்தி தந்தருளும் தனிவிரதம் எதுவென்றான்
சர்வசித்தி தந்திடும்நற் சதுர்த்தி விரதமென
அண்ணது சதுர்த்தி அப்பாஉங் களிற்பெரிதோ
எண்ணுமிந்த விளக்கத்தை எனக்குரையென் றான்முருகன்

சிவன் முருகனுக்குக் கூறியது

ஒன்றதாய்ப் பலவாய் அருவாய் உருவாகி
நின்றெலா உலகத் தினும் நீக்கமிலாத
துன்று சோதியே கணபதியெனச் சொலும்நாமம்
நன்று தாங்கிய தறிமதி நாமெலா முய்ய

(வி.பு.)

மகனேகேட் டிடுதியந்த வக்ரதுண்டராம் முன்னே
புகலும்மும் மூர்த்திகளைப் பொருந்தவே தோற்றுவித்தார்
அவர்தானே மூவருக்கும் அநாதியாம் பரம்பொருளே
அவனே யான், ஒருவடிவில் அவனெனக்கு மகன்வடிவம்
ஆகையால் ஐங்கரனின் அற்புதமா சதுர்த்திசுக
போகசித்தி யத்தனையும் பொலிந்துதரும் என்றுரைத்தார்
இதையுணர்ந்த பார்வதியாள் இவ்விரதம் தனைநோற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியாக சிவன்பாகம் பற்றினாள் மங்களமே.
இன்னுமந்த விநாயகரின் எண்ணிலாப் பலகதைகள்
உன்னி*உனக் குரைக்கின்றேன் எனப்பிருகு மாமுனிவர்

## (19) சதுர்த்தி விரதமகிமை

**பிருகுமுனி கார்த்தமன் பேர்மன்னனிடம் அன்றொருநாள்
வருகைதர, அவன்பலவா றுபசரித்து வினவுகின்றான்
மகாமுனியே யான்சிறப்பாய் வாழ்ந்தரசு செய்வதற்கு
மகாதவங்கள் என்னசெய்தேன் வரலாறு சொல்லுகென்று
கார்த்தமனும் கேட்கையிலே கனிந்துமுனி கூறுகின்றார்
கீர்த்திதரு தானங்கள் முற்பிறப்பில் செய்யவொண்ணா
வறுமையுள்ள வைசியனாய் வாழ்ந்தாய்நீ சுற்றமெல்லாம்
வெறுத்துன்னைத் தள்ளிவிட வேதனையால் காடுசென்றாய்
அக்காட்டில் சவுபரிப்பேர் அருள்முனிவர் சந்தித்தார்
முக்கண்ணன் விநாயகரின் மூலமந்தி ரத்தைஉன்றன்
செவியிலுப தேசித்தார் சீரான சதுர்த்தியெனும்
சுபவிரதம் வந்தெய்தத் தூயசவு பரியுடனே
நீயுமனுட் டித்திடவே நின்வீட்டில் செல்வமெலாம்
ஆயுவகை நிறைந்தனவே அவ்விரத மகிமையினால்
இப்பிறப்பில் மன்னனாய் இராச்சியமும் செய்கின்றாய்
நிடதநா டரசாண்ட நீதிமன்னன் நளன்என்பான்
திடமிகுந்த சதுர்த்திநோன் பியற்றிச் சிறப்படைந்தான்
இன்னும்கேள், சந்திராங்கதன் என்னுமன்னன் வேட்டையிலே
தன்னந்தனி யாளாகத் தங்கிநின்ற நேரத்திலே
வீரமுள்ள இராட்சதர்கள் வேந்தனைவந் தெதிர்த்தார்கள்
தீரமுடன் அன்னாரைச் செறுத்தழித்தான் பின்னரக்கி
ஒருத்தியங் கேவந்தாள் உற்றபெண்ணோ டமர்புரிதல்
பொருத்தமில்லை எனமன்னன் பொன்னாட்டுக் கன்னியர்கள்
நீராடும் தடாகத்திலே மறைந்திருந்தான் அத்தருணம்
நீராட வந்தபெண்கள், நின்றசந்தி ராங்கதனை
சீரான கணவனெனச் சேரும்படி கேட்டார்கள்
நேராக மறுத்தமையால் நெடுவானில் சிறைவைத்தார்
நாரதரின் சொற்படியே நாயகனைக் காண்பதற்கு
பேரான இந்துமதி பிரணவனின் சதுர்த்திதனை
பன்னிரண் டாண்டனுட்டிக்கப் பயில்நாக கன்னியர்கள்
மன்னவனைக் கொணர்ந்து விட்டார் வகித்தான் அரசியலை

(* சோமகாந்தனுக்கு ** நான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (20) மன்மதனுக்கருளிய கணபதி

சங்கரன்பால் பலவரங்கள் பெற்றவீரத்
தாருகனால் வெந்தலுத்த தேவ ரெல்லாம்
அங்குசென்று பார்வதிபால் முறைப்பாடாற்ற
அவள்சிவனை வேண்டும்படி கூறிவிட்டாள்.
சிவனும்மத கிரியில்மகா விஷ்ணுவுக்கும்
சிறந்தபுஷ்ப கிரியிலே பிரமாவுக்கும்
தவசந்தன கிரியிலே தேவருக்கும்
தகுகோள கிரியிலே முனிவருக்கும்
உபதேசம் நிகழ்த்திக் கொண்டிருக்கக் கண்ட
உம்பரும் சிவன்யோக நிலைகுலைக்கத்
திவமான மன்மதனை அனுப்பிவைத்தார்
சிவன்மீதில் ஐந்துகணை அவனும்விட்டான்
கண்ணைவிழித் தாரிறைவன் மதனும் மாண்டு
கரிச்சாம்ப ராகினான் - பின்னரீசன்
எண்ணுமறு பொறிபரப்பிச் சரவணத்தில்
இளமுருகன் உதிக்கவைத்தார் முருகன் பால்போய்
விண்ணவர்கள் முறையிட்டார். முருகன் ஞான
விநாயகரின் அட்சரத்தை உச்சரித்தார்
அண்ணலவர் விநாயகரும் வந்துதோன்றி
ஆயசக்தி யத்தனையும் தம்பிக்கீந்தார்
தன்மயூர வாகனத்தைச் சரவணப் போத
தம்பிக்கு விநாயகனார் தந்தார். வேலன்
நன்மதுர அறுகுலட்சம் சாததிவேழ
நாயகனைப் பூசித்துப் போர்க்குச் சென்று,
தாருகனைச் சங்கரித்தார், தான்பூசித்த
தலம்மயூ ரேசமென்றும் விநாயகர்க்குப்
பேர் *இலக்க விநாயகர்* எனவிளங்க
பிரதிட்டை செய்துவழி பட்டார் வேலன்
மன்மதனே ரதிக்குமட்டும் தோற்றமாக
மற்றவர்க எறியாத வண்ணமாக
பொன்மலர்சேர் சடைப்பரமன் ரதிதேவிக்குப்
பொருந்து வரம் கொடுத்தகன்றார், மதனும் பின்னர்
மனமகிழ்ந்து குகன்பணித்த மயூரேசத்தில்
மகோற்கட விநாயகரைப் பதிட்டைசெய்து
தினமும்ஏ காட்சரத்தை தியானம் செய்தான்
சித்திகள்எல் லாம்பெற்றான் விஷ்ணுவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திரனாய் நீபிறப்பாய் என்றுவாழ்த்தி
பூதவயிற் றான்மறைந்தான். பின்னர், மாய
வித்தைகளைப் புரிகண்ணன் வந்துதித்து
விளங்கிடுருக் மணியைத்திரு மணம்புரிந்து
பேரழகு மன்மதனைப் பெற்றெடுத்தார்
பிறக்கும்போ தவனதுபேர் பிரத்தியும்னன்
நேரும்*ரதி* என்றபெண் தனித்திருக்கும்
நிலைகண்டு சம்பரன்வான் மார்க்கமாகத்
தூக்கிச்செலும் வேளையிலே அவள்தவத்துத்
துணையாலே அவன்பிடியில் விட்டுநீங்கி
ஏக்கமுறு கடலிலே வந்து வீழ்ந்தாள்
இவளைஒரு மீன்விழுங்க, அந்தமீனைச்
செம்படவன் சம்பரனுக் களித்தான், மீனுள்
சிறுகுழந்தை தனைக்கண்டு புதல்வியாக
நம்பிவளர்த் தான்அசுரன். வரலாறிஃதை
நாரதர்போய்ப் பிரத்தியும் னனுக்குச் சொன்னார்
பிரணவனின் சதுர்த்தியைருக் மணியாள் நோற்று
பிரத்தியும்னன் வெற்றிபெறும் சக்தி நல்க
விரைந்தெழுந்து சம்பரனைப் போரில்வென்றான்
விதிப்படியே மதன் ரதியை வதுவைபூண்டான்

***

அனிருத்தன் மன்மதனின் மகனாய்வந்தான்
அவனைக்கன விலேகண்டு காதலித்த
நினைவுடைய உஷைஎனும்வா ணன்புதல்வி
நேராகச் சித்திரரேகைத் தோழி மூலம்
அனிருத்தனை மெதுவாக நள்ளிருட்டில்
அமளிகொளும் கட்டிலுடன் எடுப்பித் தாங்கே
இனியமணம் புரிந்து கொண்டாள். கர்ப்பமாகி
இருக்கின்றாள் உஷைஎன்ப தறிந்தவாணன்
சிறையிட்டான் அனிருத்தனை, இதனைஎண்ணி
திகைத்தமன் மதன்தாயி னிடம்போய் வேண்டி
மறைபுகழும் சதுர்த்திவிர தத்தை நோற்றான்
மந்திரத்தால் கணபதியை வணங்கிநின்றான்.
இச்செய்தி நாரதரால் கேள்வியுற்ற
இசைக்கண்ணன் வாணனுடன் சமர்புரிந்து
நிச்சயித்த அனிருத்தன் உஷையைமீட்டு
நித்யசுப மங்களமாய் வாழவைத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. ஆதிசேஷன் கர்வபங்கம்

பார்வதிசமேதராய் பரமசிவன் கையிலையில்
பரவுமுனிவர்கள் தேவர்
பணிந்திடும் நிலைகண்டு படர்சடையில் விளங்கிடும்
பாம்பான ஆதிசேடன்
தேர்வுமிகு மிவரெலாம் என்னையும் வணங்கிடும்
திறமையெனக் குண்டென்றுதன்
செருக்குற்ற நிலைகண்டு சிவனார்அப் பாம்பினை
திருக்கையாலி ழுத்துவெளியே
தரையிலே மோதினார். சர்ப்பத்தின் ஒருதலை
தனித்தனிஆ யிரம்பிளந்த
தலையாகி மயக்குற்றான், அப்பொழுது நாரதர்
சர்ப்பத்தின் நிலைமை கண்டு
விரைவாக நீசென்று பிரவாள நகரிலுள்ள
விநாயக ரைச் சதுர்த்திநாளில்
வேண்டினால் அவர்வந்து நினதுதுயர் தீர்கின்ற
விமோசனம் காட்டியருள்வார்.
என்றுநா ரதர்கூற விநாயகரைப்பூசித்தான்
எண்ணரிய ஞானமுதல்வன்
ஈரைந்து கைகளுடன் ஆயுதம் பலதாங்கி
எழிற்சிங்க வாகனத்தில்
நின்றனன் சித்தியும் புத்தியும் பாகமுற
நிறைவான அழகனாகி
"நினக்கென்ன வரம் வேண்டும்" எனக்கேட்கக் கைகூப்பி
"நிருமலா என்னைக் காப்பாய்
செருக்குற்ற எண்ணத்தால் வந்தபழி தீர்த்தென்னை
சிவனிடம் சேரவைப்பாய"
சித்திதந்திடுநாத னேயென்று பணியாதி
சேடனார் வேண்டிநின்றான்
அருட்கொடைக் கணேசனார் ஆதிசே டனைநோக்கி:
"அன்பனே அஞ்சவேண்டாம்
ஆயிரம் தலைப்பிளவும் ஆயிரம் தலையாகும்
அவற்றினால் புவன கோடி
பெருக்கெலாம் தாங்குவாய், ஐந்துதலை நாகமாய்
பெருமானின் முடியில் வாழ்வாய்
பேணுமென் னுடையஉதர பந்தனமு மாகுவாய்
பிரியவரம் உனக்குமீந்தேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுவிநாயகர் இயம்பி மறைந்தார்
அன்று மனங்குளிர் ஆதிசேடனும்
துன்றிய கையிலை சூழ்ந்தான். சங்கரன்
கொன்றைச் சடைமிசை சேடனைச் சூடினார்

## (22) புருசுண்டி முனிவர்–(கற்பக விருட்சம்)

பாராகும் சகஸ்ரபுரப் பட்டினத்தை சூரசேனன்
பரிந்தாட்சி செய்கையிலே பறந்துவந்த இந்திரனின்
ஏராகும் விமானமங்கே இறந்கியதைக் கண்டமன்னன் இங்குவந்த
தன்மையென்ன என்றுவிசா ரணைசெய்தான்
புருசுண்டி மாமுனிவர் புனிதவிநா யகர்வடிவில்
இருப்பதனை காணவந்தேன் எண்ணரிய பெரும்பாவி
பெருகுபல நோயாளி பெருநரகுக் குறுபாவி
வருமெனது விமானமதைக் கண்டதனால் என்விமானம்
தரையிறங்க வேண்டிற்று சங்கட கரசதுர்த்தி
விரதமதை அனுட்டிக்கும் மெய்யன்பன் இங்குள்ளான்
அவனின் அனுக் கிரகத்தால் அத்தோஷம் நீங்கிவிடும்
அதனாலே வந்தேனென அமரேந்தின் புகன்றான்
சூரசேனன் அவ்வேளை தூயபுரு சுண்டிஎன்பார்
யாரென்று கேட்கையிலே இந்திரனும் சொல்லுகின்றான்

* * *

தண்டகா ரண்யத்திலே நந்தூர நகரருகே
மண்டுவன வேடர்குலம் வதிவிடத்தில் விப்ரதன்
என்னுமவன் கொள்ளையிடும் இழிதொழிலை மேற்கொண்டான்
உன்னியோர் அந்தணனை உரப்பித் துரத்திவந்தான்
அந்தணன் போய் மறைந்து விட்டான் அவனைத் துரத்தியதால்
வந்தகள்வன் விப்பிரதன் வாடிக் களைத்துவிட்டான்
அருகிலுள்ள விநாயகரின் ஆலயத்தடாகத்திலே
பருகினான் நன்னீரைப் படுத்தான் மரநிழலில்
அவ்வழியே வந்த அருள்முற் கலமுனியை
இவ்வேடன் கண்டான் எடுத்தான் நெடும்வாளை
ஓங்கினான் முற்கலரின் ஒளிப்பார்வை யால்வேடன்
ஆங்குநிலை மாறினான் அழுதான் முனிவரின்தாள்
வீழ்ந்து வழிபட்டான் மெய்நடுங்கி நின்று அழுதான்
சூழ்ந்த முனிவர் பிரான் துவண்டுநின்ற வேடுவனை
நீராடி வரப்பணித்தார் நிமலன் விநாயகரின்
சீரான மந்திரத்தை செவியிலுப தேசித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவியி னுபதேசம் தெய்வீக மாக்கியது
தவமுனிவர் முற்கலனார் தண்ணருள் செய் தவ்விடத்தே
காய்ந்த மரக்கொப்பைக் காட்டிஅக் காய்ந்தமரம்
ஏய்ந்ததுளிர் காட்டும்வரை இபமுகனின் மந்திரத்தைச்
செபித்துவா என்றுரைத்தார் செபித்தானா யிரவருடம்
மனஉறுதி கொண்டவனாய் ஓம்மகா கணபதியே
எனக்கருள்வாய் என்றிரந்தான் இட்டபட்ட மரக்கொப்பு
பச்சிலை தளிர்த்ததுவே பார்த்தார்முற் கலமுனிவர்
அச்சிலைவே டன்மேலே தெளித்தாரே கமண்டலநீர்
விப்ரதன் முகப்புருவ மத்தியிலே தும்பிக்கை
விளங்கியதால் உன்றனுக்கு புருசுண்டி என்றுபேர்
இப்பொழுதுண் டாயிற்று தளிர்த்தகிளை கற்பகப்பேர்
செப்பிடுமா விருட்சமுமாய்ச் சிறப்படையும் எனக்கூறி
விநாயகர் மாமந்திரத்தை விப்ரத னுக்குரைத்தார்
விநாயகரும் வேடனுக்கு விளங்குநாற் பாதங்களை
விளக்கினார். சின்னாளால் வித்தைமிகு நாரதனார்
மேவுபுரு சுண்டிமுன்னே விபரமொன்று சொல்லவந்தார்

* * * *

புருசுண்டியே நின்னுடைய பூர்வமு தாதையர்கள்
நரகத்தில் கிடக்கின்றார் நானுனக்குச் சொல்ல வந்தேன்
இப்படியாய் நாரதனார் இயம்புகையில் இவர்களையான்
எப்படியும் மீட்டெடுப்பேன் என்று புருசுண்டி முனி
தற்பரவி நாயகரின் சங்கட ஹரசதுர்த்தி
அற்புதமாய் நோற்றாரே அந்தவிரதப் பலன்போய்த்
தனதுமு தாதையர்க்காய்ச் சங்கற்பம் செய்கையிலே
அனைவரும் நரகம்விட்டு மீண்டு நலம்பெற்றார்கள்

## (23) சங்கடஹர சதுர்த்தி விரதம்

காவிரிக் கரையருகே காணும்பட் டினமொன்றை
யாவருமே பாராட்ட நற்கிருத வீரியன்தன்
மனைவி சுகந்தையொடு வளராட்சி செய்துவந்தான்
இனியமகப் பேறின்றி எண்ணிலாத் தவம் இருந்தான்
நாரத மாமுவர் நண்ணினார் பிதிருலகம்
பேரான அவ்வுலகில் பிதிர்தேவன் என்கின்ற
கிருதவீரியன் தந்தையிடம் அவன்புரியும் தவமுரைத்தார்
பிதிர்தேவன் பிரமனிடம் பெருமானே என்மைந்தன்
மக்கட்பே றில்லாமல் வருத்தமுறும் காரணத்தை
எனக்கியம்ப வேண்டுமென்றான் இயம்புவார் பிரம்மதேவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனதுமகன் கிருதவீரியன் ஓர்அந் தணனாக
சாம்பன் என முற்பிறப்பில் வாழ்ந்தான் அவனுக்கோர்
ஆண்மகவு கணேசனென அவதரித்தான், ஆனாலும்
வறுமையால் வாடினான் வழிப்பறியில் ஈடுபட்டான்
சிறுவயதுக் கணேசனும் தீனின்றி உயிர்பிரியும்
தறுவாயில் கிடக்கையிலே சாம்பன்வனத் தின்வழியே
வருகின்ற பன்னிரண்டு மறையோரை கொன்றொழித்து
பொருளெல்லாம் கொண்டுவந்து புத்திரனாம் கணேசனை
கணேசா கணேசா கணேசா எனமூன்று முறையழைத்தான்
கணேசனின் சீவாத்மா கழன்றதுவே உடலைவிட்டு
கணேசன் இறந்ததனால் கவலையாலே சாம்பன்
பிணமானான் அந்தநாள் சங்கட கரசதுர்த்தி
ஆகையால் இருவருக்கும் விண்ணுலகம் கிட்டியது
சோகமுறு பிரமகத்தி தொடர்ந்ததால் உன்மைந்தன்
மக்கட்பே றில்லாமல் வாடுகிறான் இவ்வுலகில்
தக்கசங் கடகர சதுர்த்தியை அனுட்டித்தால்
புக்கபழி தீர்ந்துவிடும் புத்திரப்பே றுண்டாகும்
இக்கதையை அயன்சொல்ல, இதயம்நொந்து பிதிர்தேவன்
விரதம னுட்டிக்கும் விதமென்ன? எனக்கேட்கப்
பிரமனும் கூறுகின்றார் பேசுகின்ற மாசிமாதம்
அபரபக்கச் சதுர்த்தி *அங்கார கன்நாளில்
சுபமாய் வரும்போது சுத்தநன் னீராடி
கணசரே காட்சரத்தைக் கருதித் தியானமுடன்
உணவின்றி இரவிலே உறங்காமல் விழித்திருந்து
தந்திமுக நாதனுக்கும் சந்திரமா மூர்த்திக்கும்
கந்தமிகப் பூசித்து கனதானங்கள் செய்து
பாரணம் செய்துவந்தால் பலன்கிடைக்கும் என்றறிவாய்
சீராகச் சதுர்த்திவரும் தினமெல்லாம் இவ்வாறோர்
வருடம் அனுட்டித்தால் மகப்பேறு கிடைத்து விடும்
விரதமிந்த முறையுரைக்க வினவுகிறான் பிதிர்தேவன்
"செவ்வாய்க் கிழமையிலே சேரும் சதுர்த்திநாள்
எவ்வாறு சிறந்ததென" இரங்கிக்கை கூப்பிநின்றான்

* * *

பகவான் விநாயகரின் பக்தனாம் பரத்துவாசன்
பாயும்நர் மதையாற்றில் படிந்திடும் வேளையிலே
மிகஅழகி தேவகன்னி விளங்குவதைக் கண்டவளின்
மேற்காதல் கொண்டதனால் மேதினியில் ஓர்குழந்தை

(* அங்காரகன் - செவ்வாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமாய்ப் புலம்பியது சுதனவனைப் புவிதேவி
போற்றி எடுத்தணைத்துப் புனைந்தாள்அங் காரகன்போ
அங்கார கன்பரத்து வாசரிடம் விநாயகரின்
அட்சரோப தேசம்பெற்றான் ஆயிரமாண் டருந்தவத்தால்
மங்காத நவக்கிரக மண்டலத்தோர் கோளானான்
வாரணன்அங் காரகனுக்கு வந்துகாட்சி தந்ததினம்
செவ்வாய்கிழமையாய்த் திகழ்ந்ததால் அத்தினமே
சிறந்ததின மென்றமரர் சித்திக்கண நாயகனை
இவ்வாறு போற்றிடுவார் எதிர்ப்பட்ட சங்கடங்கள்
எல்லாமே தீர்ந்துவிடும் என்றார் பிரமதேவர்

## சந்திரன் அனுட்டித்த விரதம்

போற்றுகின்ற அங்காரக சதுர்த்தியின் பொலிவைச்
சாற்றிநிற்றலும் பிதிரனானவன் தகத்தொழுது
தோற்றுசந்திர உதயத்தில் பூசிக்கச் சொன்ன
மாற்றமென் அஃதுரையென மலரவன் கிளப்பான்

ஐயா பிரமனே சங்கட கரசதுர்த்தி
அம்புலி உதயம் அனுட்டிக்கச் சொன்ன
மெய்ம்மையை எனக்கு விளக்குக என்று
வேண்டினான் பிதிரன் விளம்புவார் பிரம்மா,
தேவர்கள் கோள்கள் திகழ்ந்திடக் கைலையில்
மூவரின் முதல்வனாம் முக்கணன் முன்னே
நாரதர் கொணர்ந்த நன்மாங்கனியை
ஆரிடம் கொடுக்க லாம் எனச்சிவன் அயனிடம்
வினவிய போதில் வேலனுக்குத்தான்
கனியைக் கொடுங்கள் என்றயன் கூறக்
கணபதி சினந்தார் கமலனு மகன்றார்
தணியாச் சிரிப்புச் சந்திரன் செய்தான்
ஏளனச் சிரிப்பே என்னைச் சிரித்தாய்
சூழுமுன் பிரகாசம் தொலைக என்றார் கணன்
சந்திரன் ஒதுங்கினான் இந்திரன் முதலியோர்
வந்து கணேசனை மன்றாடி நின்றனர்
இரங்கிய பெருமான் இவனை ஆவணியில்
வரும் சதுர்த்தியிலே மாநிலத் தோர்கள்
பாரா தொழிக மற்றைய காலம்
சீராய் இருக்கட்டும் எனச் சாபத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கி விட்டார் தூமதிக் கமரர்
கணபதி மந்திரம் காதில் உரைக்க
கணபதி தன்னை கங்கா சர்வசித்தி
நகரில் விநாயக நாதனை இருத்தி
சுகமிகு விரதம் இருபத் தீராண்டு
சந்திரன் பூசிக்க ஐங்கரன் வந்தான்
எந்தையே சிரித்த எனது குற்றத்தை
பொறுக்குக என்றான், புனிதனே சந்திரா
குறித்தநின் ஒருகலை என்முடிதிகழும்
எனது சதுர்த்தியில் என்னையும் உன்னையும் *
மனதுறப் பூசிப்போர் வாழ்வார் இனிதே
இனையன உரைத்து பாலசந்திர
விநாயகர் எனும்பேர் விளங்கிட நின்றான்

***

## (24) அறுகம்புல்லு
## மூவரின்சாபங்கள்

அவந்தியென்னும்பட்டினத்தைச்சுலபன்என்பான்ஆண்டுவந்தான்
அவன்மனைவி சுபத்திரையும் அங்கிருக்கும் வேளையிலே
மதுசூத னன்என்னும் வறுமைமிக்க அந்தணன் அங்
"கேதுவாயினும்தருக" என்றுவந்து யாசித்தான
அந்தணனின் பரிதாப தோற்றம்கண்ட சுலபமன்னன்
அவனைப்பார்த் தேளனமாய் அருவருத்துச் சிரித்து விட்டான்
சிவபக்தி யுடைய அந்த அந்தணனும் மன்னவனை
என்னைச் சிரித்த நீ எருதாகக் கடவை என்றான்
முன்னின்ற சுபத்திரையும் மூடாநீ கழுதையாகப்
போஎன்றே அவள்சொல்லச் சண்டாளப் பெண்ணாக
நீவருவாய் என றங்கே நின்றமறையோன் சொன்னான்

***

மன்னன் எருதாகி வயலிலே புல்மேய்ந்தான்
சொன்னமறை அந்தணனும் சலவைத் தொழிலாளியின்
கழுதையாய் வந்துவிட்டான் காரிகை சுபத்திரையும்
வழியோரச் சேரியிலே வரும்கூலி வேலைசெய்தாள்
ஒருநாள் மழைசொரிய ஒதுங்குதற்குப் புல்மேய்ந்த
எருதும் கழுதையும் இசைந்த புல்லுச் செதுக்கவந்த
பெண்ணும் அங்கோர் விநாயகரின் பெருங்கோயில் வந்தார்கள்

(*சந்திர உதயத்தில் பூசிப்பதன் காரணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின்புல் லைத்தின்னக் கழுதைஅங்கே செல்லுகின்ற
போதினிலே புல்லுக்காரி கழுதையைக் கையாலடித்தாள்
மோதுகின்ற கழுதையது எருதை உதைத்ததுவே
மூவருக்கும் சண்டைமிக மூண்டதால் விநாயகரைப்
பூசிக்கும் முனிவர்குழு மூவரையும் கலைத்தார்கள்
சண்டையும் பலத்தது எருதும் கழுதையும்
பெண்ணின்புல் லைப்பறித்துத் தின்றார்கள் அப்போது
கடுங்காற்றால் புல்லுக்கட்டில் கிடந்தஓர் அறுகம்புல்
நெடுங்கொம்பன் கணபதியின் நீள்முடியில் தங்கியது
புல்லைப்பறித் துத்தின்ற எருதின்வாய் தனிலிருந்து
நல்லறுகம் புல்லொன்று தும்பிக்கையில் விழுந்ததுவே
கழுதைவாய்ப் புல்லறுகு கணபதியின் பாதத்திலே
விழுந்ததைக் கண்டங்கு மெய்த்தொண்டு புரிமுனிவர்
அறுகுகளை நீங்கிவிட்டு நீராட்டிக் கணபதிக்கு
நெறிமுறையில் பூசையிட்டு நீங்கினார். நீங்கியபின்
பொழுது விடிந்ததுமே போய்ப்பார்த்தார் முனிவரெலாம்
மொழிந்தஅந்த மூவருமே இறந்தங்கு கிடப்பதையும்
மூவரையும் விநாயகரின் முதுகணங்கள் விமானத்திலே
தேவுலகம் கொண்டு செல்லும் காட்சியையும் கண்டார்கள்
அப்போது முனிவரெலாம் அம்மூவர் விண்புகுத
ஒப்பமுறச் செல்வதற்குச் காரணங்கள் என்ன என்று
கணபதி கணத்தவரைக் கேட்டார்கள். "மூவர்வழி
கணபதிமேல் அறுகுபட்ட காரணத்தால் சாபமெலாம்
விலகியது" என்றார்கள் விநாயகரின் அறுகுபுகழ்
உலகறிய எமக்குரைப்பீர் என்றுமுனி வர்கேட்க
அறுகின் பெருமபுகழை அக்கணத்தார் உரைக்கின்றார்

* * *

### அறுகம்புல்லின் பெருமை

தாபரம் என்னும் தகைமிகு நகரில்
தாலந் தோப்பில் கவுண்டிய முனிவரும்
மனைவிஆ சிரியையும் மகாகண பதியை
நினைவுயர் அறுகினால் நித்தமும் பூசைகள்
நிகழ்த்தி வருவார் நிறைகமழ் மலர்கள்
பற்பல இருக்கையில் படர்வேர் அறுகால்
தற்பரன் பூசை புரிவதேன் எனவே
ஆசிரி யைதன் கணவனைக் கேட்டாள்
மாசிலா அறுகின் வரலாற் றினைக் கேள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கவுண்டியர் இனிவாய் இயம்புவார்
அரம்பை திலோத்தமையில் ஆசைகொண் டான்யமன்
இருவரும் தருமகன் அனலா சுரனென
வந்தான் விண்ணவர் மண்ணவர் சராசரம்
நொந்திட வைத்தான் ஐந்து கரத்தனைத்
தேவர்கள் அணுகினர் திருவடி வேண்டி
பாவி அசுரனின் படுசெயல் கூறினர்
விண்ணவர்க் கிரங்கிய விநாயகப் பெருமான்
திண்ணிய கரத்தால் திறல்அனல் அசுரனை
விழுங்கினர் அன்றே விழுங்கியதாலே
ஒழுங்குறு சராசரம் ஒருங்கே கருகின
விநாயகர் உடம்பு வெப்பம் மிக்கதாய்
கனல்நிகர்த் திருப்பதைக் கண்ட முனிவர்கள்
கங்கைநீர் சந்தனம் குங்குமம் பன்னீர்
தங்கும் கலசம் தாங்கிநீ ராட்டினர்
விநாயகர் தேக வெப்பம் தணியாது
அநேக தேவர் அறிவு கலங்கினர்
எண்ணிய சந்திரன் இன்னமு தத்தினை
நண்ணிச் சொரிந்தான் நலமொன்று மில்லை
அப்பொழு தாங்கே ஆயிரக் கணக்கில்
முப்பழம் நுகரும் மூஷிகர் குளிர்ந்திட
ஆளுக் கோரறு காகக் கொணர்ந்து
தாள்முதல் முடிவரை சாத்தி அர்ச்சித்தனர்
அறுகுநீ ராலே அபிஷே கித்தனர்
மறுகணம் விநாயகர் மகிழ்ந்தார் குளிர்ந்தார்
எல்லா உலகமும் எல்லா உயிர்களும்
எல்லாச் செழிப்பும் எய்தி மகிழ்ந்தனர்
"பல்லாயி ரமாய் படர்அறுகாலே
சொல்லரும் அர்ச்சனைத் துதிபல புரிந்த
முனிவர் கூட்டமே, இருபத்தோர் அறுகால்
எனையர்ச் சிப்பினும் எண்ணிய பலனை
பெறுவார் எவரும் " எனப் புகன் றைங்கரன்
மறைந்தனர் ஆங்கே வானவர் முனிவரர்
கோயில் கட்டிக் கோமான் கணேசனை
ஆய கும்பாபி ஷேகம் செய்தனர்

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (25) பசித்து வந்த பரம்பொருள்

தூத்துவ முனிவீர் ஒற்றைத் தூர்வையால் வறுமைநீங்கி
ஏத்தரும் செல்வம் பெற்றான் இருந்திரி சிரசு என்பான்
சாத்தும் அவ் வறுகின் மேன்மை தனைஇன்னும் கேண்மினென்று
நாத்திகம் பயிலாநாவின் நன்கணத் தவர்கள் சொல்வார் (வி.பு.)

கவுண்டியர் இன்னுமோர் கதையைச் சொல்வார்
தவமிகுமரசன் ஜனகன் என்பான்
"நான்வே றுபகவன் வேறன்று" என்று
நானே கொடுப்பவன் நானே பெறுபவன்
ஆகிய இறுமாப் பகத்தின னாகி
வேகம் கெடாத வேந்தனாயி ருந்தான்
நாரதர் வந்தார் நல்லுரை சொன்னார்
பேரருட் பதியும் பிணங்கும் பசுவும்
ஒன்றெனக் கூறினாய் ஓமெனும் தத்துவம்
நின்றுண ராதாய் நீமிகு விரைவில்
உணருவாய் என்று விநாயகரிடத்தே
உணரா ஜனகனின் நிலைமையை உரைத்தார்
ஜனகனை விரைவில் உணர வைக்கின்றேன்
எனப்புகன் றைங்கரன் இளைத்தஅந் தணனாய்
ஜனகன் இடத்தே நண்ணினார் கேட்டார்
எனக்கு மிகப்பசி ஏதாவது தா
என்றலும் ஜனகன் எதிர்நின்றாரை
நன்று போசனம் நல்குமின் என்றான்
எல்லாம் உண்டார் இராச்சியப் பண்டம்
நல்லாய் உண்டார் நாடிய பசியின்னும்
தீரவில்லையே தீப்பசி தீர
பேருண வின்னும் தாருங்கள் என்றார்
திகைத்தான் ஜனகன், தீராப்பசி யொடு
நகைத்திடும் வண்ணம் நயந்தன உண்டீர்
இனித்தர உணவுகள் ஏதுமேயில்லை
அனைத்தையும் தந்தோம் அந்தணரே உமக்
கேதோ வேறுநோய் இருப்பதாய் உணர்கின்றேன்
வேறோ ரிடம்போய் விளைந்தன உண்மின்
என்றலும் ஜனகனை ஏளனம் செய்து
ஒன்றிய பதியும் உடம்புறு பசுவும்
ஒன்றே யென்றெனும் ஊமைச் சித்தனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சக்தி கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துவிஜ கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றென் பசிக்குண வில்லா தவனே
முன்திகழ் பதியும் பசுவும் ஒன்றென
எப்படி எண்ணுவாய் என்று விநாயகர்

* * *

## திரிசிரன் விருந்து

ஒப்பிலாப் பக்தனாம் உள்ளம் சிறந்த
திரிசிரன் வீட்டைத் தேடிவந்தார்
பசிக்கிற தென்றார் பண்புடன் அவரை
வணங்கி வரவேற் றவன்தன் மனையாள்
விரோசனை என்பாள் "வேதியச் செல்வரே
வறுமையாலே நாம் வாடுகின்றோமே
கரிமுகன் தன்னைக் காலையும் மாலையும்
அருச்சனை செய்த அறுகொன்றுண்டென
அதனைத் தாவென அந்தணர் வாங்கி
இதமாய் வாயில் இட்டார் மகிழ்ந்தார்
என்பசி தீர்ந்ததென் றிபமுகன் கூறி
தன்வடி வத்தைக் காட்டினார் ஆங்கண்
திரிசிரனும் மனை யாளும் வணங்கிப்
பிரணவப் பொருளே பேறென நின்கழல்
தருகெனக் கூறலும் தங்கிட மெங்கனும்
மனையிடம் முழுவதும் வழிந்தது செல்வம்
எந்தை கணபதி இவர்களை வாழ்த்தி
நுந்தம் அந்திய காலம் கழித்து
என்திரு வடிகளை அடையுமினென்று
நின்று மறைந்தனர், நிகழ்ந்ததை அறிந்த
ஜனகனும் இழந்த செல்வம்மீண் டுற்று
கணபதி மந்திரம் காதில் பெற்று
பெருந்தவ மியற்றி பெரும்பே றெய்தினான்
வருமிக் கதையை கேட்ட ஆசிரியை

* * *

## அறுகின் பெறுமதி

என்பெரும் பதியே எல்லாத் தினமும்
இன்புறு மறுகு பதினாயிரத்தால்
விநாயகர் பாதம் வேண்டுகின்றோமே
நினைவுறு செல்வம் எமக்கேனில்லை
என்று கேட்க, இடரெய் தாதே
அப்பனைப் பூசித்த அறுகொன்று தருகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுதேநீ இந்திரனிடம் போய்
இவ்வறு குற்ற எடையுள்ள செல்வம்
செவ்விதில் தருக எனக்கேட்டுப் பெறு.
எனவுரைகூற இனியஆ சிரியை
மனங்குளிர்ந் திந்திரன் மாளிகை சென்றனள்
இந்திரன் குபேர னிடம்செலப் பணித்தான்
அந்த அறுகின் நிறையுறு செல்வம்
தந்தால் போதும் என்றவள் கேட்க,
தந்தனள் அறுகைத் தராசுத் தட்டில்
குபேரன் செல்வம் எல்லாம் கொட்டியும்
இபமுகன் அறுகின் எடையதி கரித்தது
இந்திரன் சிவனயன் அரியை அழைத்தான்
வந்தனர் மூவரும் துலைக்கோல் ஏறினர்
துலைக்கோல் சமநிலை பெறாமை கண்டனர்
தலைக் கணபதிக்குச் சாத்திய அறுகென
ஆய்ந்துணர்ந் தனைவரும் முனிவர்பால் வந்தனர்
ஏய்ந்த கணபதிக் கேத்திய அறுகின்
பெருமை உணர்த்திய பெருமுனிநாதனை
வாழ்த்திப் பற்பல வரங்கள் கொடுத்து
மூர்த்திகள் அனைவரும் மறைந்தனர். இப்படித்
தேவகணத்தவர் முனிவர்க் குரைத்து
மூவரைக் கொண்டுவான் புகுந்தனர் இனிதே

ஓரறு காயினும் உதவுறாவிடில்
பூரணன் பூசையைப் போற்று மாறெவன்
சீரண் வுறவினித் தெரிக்க என்றலும்
ஆரணன் பிதிரனுக் கறிவிப்பா னரோ ——————— (விபு.)

## (26) வன்னிபத்திரம்

அன்புடனே பிதிர்தேவன் அயனிடத்தே கேட்கின்றான்
அறுகுகிடை யாவிட்டால் அர்ச்சிப்ப தெவ்விதமோ
என்பதனைச் சொல்கஎன இயம்புவார் பங்கயனார்
இசைந்தவன்னி மந்தாரை இவற்றாலே அர்ச்சிக்கலாம்
நவிலும்ஆ தேயமெனும் நகரிலே வீமன்என்னும்
நலியும்சிலை வேடன் கொள்ளை நடத்திவந்தான் வழியிடையே
தவமறையோர் வரும்போது வீமன்அவர் களைக்கொன்று
தன்வழியே செல்லுகையில் சந்தித்தான் ஓர்அரக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடன் அபகரித்த பொருளை அரக் கன்பறிக்க
விரும்பித் துரத்தினான் வேடன் மரமொன்றினிலே
ஓடிப்போய் ஏறினான் அரக்கனும் ஏறினான்
உக்கிரச் சண்டையிட்டுக் கீழ் விழுந்து மடிந்தார்கள்
ஏறியது வன்னிமரம் வன்னியின் கீழ் ஐந்துகரன்
இருவரும் ஏறும்போதில் எம்பெருமான் திருமுடியில்
கூறும்வன்னி வீழ்ந்ததனால் கூடினார் விண்ணுலகம்

***

விதர்ப்பநாட் டினையாண்ட வேந்தன்புண் ணியமூர்த்தி
விளங்குமனை யாளாய மதனா வதியுடனே
புதல்வரில்லாக் காரணத்தால் ***துத்தரிடன்*** மகனாய
பொருத்தமில்லாச் சாம்பனிடம் பொறுப்பித்தான் அரசியலை
துத்தரிடன் மனைவியாள் செம்படவ னோடுகொண்ட
தொடர்பாலே பிறந்தவனே சாம்பன்எனும் அம்மைந்தன்,
துர்ப்புத்தி என்பவன்பால் அரசியலை ஒப்படைத்து
துர்நடத்தை கொண்டலைந்தான் அச்சாம்பன் என்பானே.
சாம்பனவன் வேட்டையிலே தவமுனிவர் வசிட்டர்முன்பு
தாபித்த விநாயகரை தரிசித்து வணங்கிச் சென்றான்
ஓம்என்னும் வடிவுடைய விநாயகரின் அத்தலமே
உத்தமனாம் தசரதனார் சந்தானம் பெற்றதலம்

***

நாட்டு மக்கள் தனைவருத்தி நாடாண்ட துர்ப்புத்தியும்
நடைகெட்ட சாம்பனும் நானிலத்தை நீத்தவுடன்
பூட்டுவான் சோ்கையிலே புண்ணியன் விநாயகரைப்
பூசித்த காரணத்தால், புரிந்தவினை காரணத்தால்
நரகத்தை அநுபவித்து நலியும்பல பிறப்பெடுத்து
நல்வேடன் அரக்கனாய் இருவருமே வந்துதித்து
பரவுவன்னி மரமேறிப் பகவான் விநாயகரின்
பதமுறுவர் எனும்தீர்ப்பை சித்திரபுத் திரர்வரைந்தார்

## (27) வாமனர் யாசித்தமணி

பிதிரன் பிரமனை பெயர்த்தும் கேட்பான்
பிள்ளையார் இருக்கும் வன்னிமரத் தடிப்புகழ்
இதமுறச் சொல்லுக எனக்கேட் டுநிற்க
இனிவாய்ப் பிரமனும் எடுத்துரைக்கின்றார்
காசிபர் தமக்கு மனைவியர் இருவர்
பேசிடும் அதிதி திதிஎன் பவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிதி விஷ்ணுவை அருள்மக னாக
உதிப்பதற் கியைந்த உயர்தவ மிருந்தாள்
எதிருறும் பெண்திதி இரண்டு மக்களாய்
இரணிய கசிபு இரணியாட் சன்தமை
பெற்றனள். இரணியன் சிவனிடம் தவத்தில்
பெற்ற வரத்தால் பெருந்துயர் செய்தான்

தாமரைக் கிழவன் ஈது சாற்றலும் பிதுரன் தாழ்ந்து
வாமனர் யாவர் அந்த வன்னிமென் னிழலில் அங்கைச்
சாமியைப் பூசையாற்றும் தன்மையென் சாற்றுகென்றான்
தோமறப் பிதுரன்கேட்க தொல்லைநான் முகவன்சொல்வான் (வி.பு)

துயரம் பொறுக்காச் சுரருக் குதவ
நயமுடன் விஷ்ணு நன்னிழல் வன்னி
மரத்தடி விநாயகர் மலரடி வேண்டி
நரசிம்ம ராகி அசுரனைக் கொன்றார்
இரணியாட்சன் மகன் விரோசனன் என்பான்
பரவு தவத்தால் பரிதியி னிடத்தே
ஒருகிரீ டத்தை உவந்துபெற் றனனே
மருவு கிரீடம் அணிந்திடு வோர்க்கு
எவ்வித இடைஞ்சலும் எய்தா தாகையால்
எவ்வகை உயிர்க்கும் இன்னலைச் செய்தான்
தேவர்கள் எல்லாம் திருமாலிடம் போய்
நாவுற வாழ்த்தி நடப்பதைக் கூறினர்
விட்டுணு மோகினி வேடந் தாங்கி
கெட்டவி ரோசனன் கிட்டப்போனார்
மோகமாய் வந்த முரடனைப் பார்த்து
போகத் திருமணம் புரிய வேண்டுமேல்
எண்ணெய் தலையிட் டினியநீ ராடி
வண்ணமாய் வந்தால் மணப்பேன் என்றாள்
முடியை எடுத்துச் சிரசிலே எண்ணெய்
தடவும் போது தலைசுக்கு நூறாய்
வெடித்து மாண்டான் அவன்பின் அவன்மகன்
மாவலி என்பவன் மன்னவன் ஆனான்
யாவரும் போற்றிடும் சக்கரவர்த்திப்
பெருமை உண்டாகப் பெருயாகம் செய்தான்
கருதிய யாகம் தொண்ணூற் றொன்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி யாகிப் பொருந்திய நூறாம்
யாகம் கண்ட இந்திரன் கலங்கினான்
நூறும் முடிந்தால் தன்பெரும் பதவிப்
பேறும் போய்விடும் எனமனந் துணிந்து,
திருமா லிடம் போய் முறையீ டுரைத்தான்
திருமால் இந்திரன் தன்னை நோக்கி
நீயஞ் சாதே நிகழ்ச்சி ஜெயம்தரும்
போய்வா என்று புகன்று, முன்னே
அதிதி கேட்ட அரிய தவப்படி
புதிய வாமனப் பொலிவடி வுடனே
அவள்மக னாக அவதரித் தாங்கே
கவருறு வன்னிக் கணபதி நாதனை,
முனிவர் காசிபர் மொழிந்தபடியே
நினைந்து வேண்டி நெடுவரம் பெற்றார்
வாமனர் பிராமண வடிவ மெடுத்து
மாவலி யாகம்வந்து புகுந்தார்
மூவடி மண்தாஎன்று வேண்டினார்
மொழிந்த படியே தருவே னென்றான்
தாரை வார்க்கத் தண்ணீர்க் கெண்டியை
தன்கையில் எடுக்கத் தடுத்தான் சுக்கிரன்
நீர்வரும் கெண்டியின் நீள்து வாரத்தை
நின்றசுக்கிரன் நீள்வண் டாகிப்
புகுந்துநின்றான் புனல்வரா தொழியப்
பூசுரவாமனன் தர்ப்பை ஒன்றாலே
வரும்நீர் தடுத்த வண்டினைக் குற்றினான்
மிகுந்த வேதனையாற் கண்ணொன் றிழந்து
வெள்ளி வெளிவர விளம்பியபடியே
மாதவன் இரண்டு மலரடியாலே
மண்ணெலாம் அளந்தான் மற்றைய அடியை
மாவலி தலையில் வைத்ததும் மாவலி
மன்னுபா தாளம் மருவினான். சிவனருள்
பெற்றவ னாகையால் நற்றவ தியானம்
உற்று விஷ்ணுவின் ஒளிர்பதம் பெற்றான்

## (28) கீர்த்தியின் பக்தி

மேலும் பிரம்மன் விளம்புவான் பலகதை
கோலக் கயிலையில் பார்வதி யம்மை
பரமனைப் பார்த்து பாலன் கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பரவும் வன்னியில் பிரியம் கொள்வதேன்
இவ்விதம் கேட்க இறைவன் சொல்வான்
இராசன் பிரிய விரதன் என்பாற்கு
செவ்விய மனைவியர் கீர்த்தி பிரபை
திகழ்ந்திடும் இவர்களில் கீர்த்தியை ஒதுக்கி
பிரபை யிடமே பேரன்பு கொண்டான்
பிரபைக்குப் பதும நாபன் பிறந்தான்
அரசன் பாஞ்சாலன் என்பவன் மகளை
அவன் மணம்செய்தான் பிரபை மிகவும்
செருக்குற் றிருந்தாள், திடீரென ஒருநாள்
சீற்றத்துடனே கீர்த்தியை உதைந்தாள்
அருள்மிகு கீர்த்தி அவமானத்தால்
ஆருயிர் நீக்க அரண்மனை நீங்கினாள்
எதிரே வந்த அந்தணன் உரைப்படி
இபமுகன் மந்திரம் இசைத்துநல் லறுகால்
விதிமுறை பூசை ஆற்றினாள் கீர்த்தி
விரைவே ரறுகு கிடைக்கா தொருநாள்
வன்னிப் பத்திரம் வாங்கியர்ச் சித்தாள்
வளமுட னறுகு கிடைக்க வில்லையே
என்று கலங்கி நித்திரை யானாள்
இவளின் கனவில் எந்தை விநாயகர்
பெண்ணே கலங்கேல் வன்னியும் எனக்குப்
பிரிய மானதே, கவலையை விடுவாய்
எண்ணும் உன்கணவன் இங்கே வருவான்
இனியவோர் ஆண்மகன் உனக்குப் பிறப்பான்
பிள்ளைக்குக் கிப்பிரப் பிரசாதன் என்று
பெயரினை வைப்பாய் அவனுக்கு நான்காம்
எல்லை வயதில் இடர்ப்படு நஞ்சை
எதிர்க்குமா ற்றாந்தாய் யூட்டுவாள், நஞ்சைக்
கிருச்சம தர்முனி நீக்குவான் என்று
கீர்த்திக்குச் சொல்லி மறைந்தார் விநாயகர்
பிரபைக்குச் சூட்டுப் பெருநோய் வந்தது
பிரகாச மின்றி அலங்கோல மானாள்
பிரிய விரதன் கீர்த்தியை நாடினான்
விநாயக மூர்த்தி விளம்பிய படியே
விளங்கு கிப்பிரப் பிரசாதன் பிறந்தான்
பிரபை நஞ்சூட்ட கிருச்சம தர்முனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரணமோசனர் (கணபதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணிதீர்த்தருளினார் அவரிடம் கீர்த்தி
வன்னியின் சிறப்பு மகிமையைக் கேட்க
மகான் கிருச்சமதா் மகிழ்ந்து கூறுவார்

* * *

கிருச்சமத முனிகூறியது

வன்னி யென்று வாயால் சொல்ல
வாக்கால் வந்த வன்பழி தீரும்
உன்னி நினைந்தால் உள்ளம் செய்த
ஊழ்வினை தீரும் உணர்ந்து வன்னியை
உவந்துவலம்வரில் உடம்பால் செய்த
உக்கிரப் பழியெலாம் உடனே தீரும்

* * *

தவமுனி நந்தி கேந்திரர் பெற்ற
தனயன் ஔரவர் மனையாள் சுமேதை
தந்த புத்திரி சமிஎன் பவட்கும்
சலிகை முனிவரின் தகுந்த மாணவன்
மந்தா ரனுக்கும் மணவினை நிகழ்ந்தது
வழியில் வந்த புருசுண்டி முனிவரின்
நெற்றியின் வழியே நீண்டதும் பிக்கையை
நின்று பார்த்தனர் நெடிது சிரித்தனர்
"அற்றைப் பொழுதெனை அவமதித் தவர்களே
அரிய மரங்கள் ஆகுக" என்று
சபித்தார் முனிவர் சஞ்சலப்பட்ட
தம்பதி மக்கள் தாழ்ந்து வணங்கி
தவசிரேஷ்டரே பிழைபொறுத்தருள்கென
தாழ்ந்து வணங்கின சற்குண மக்களே
இந்தத் துதிக்கை, இபமுகனாலே
ஏற்பட்ட தென்பதை இருவரும் அறிகுதிர்
அந்தக் கணபதி அமர்நிழல் விருட்சம்
ஆகிய வன்னி மந்தாரை மரங்களாய்
விளங்கி விநாயகர் மெய்யடி பெறுகென
விமோசனம் சொல்லிப் புருசுண்டி மறைந்தார்

சமிகர்ப்பர்

இதனை ஔரவர் இதயத் துணர்ந்தார்
எந்தை கணேசனை ஈராறு வருடம்
துதிதவம் புரிந்து தூய வன்னியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமந் தாரைச் சுந்தர மரத்தையும்
மகாகண பதியொடு வழிபாடியற்றி
மங்கள சடாட்சர மந்திரம் செபித்து
மகான் ஔரவரும் மனைவி சுமேதையும்
வழுத்திடும் வேளை வல்லபை நாயகன்
சிங்கவா கனத்தில் திகழ்சக்கரத்துடன்
சிவந்த கஜமுகத் தேவனாய் வந்து
அங்கவர்தம்மை அடியிணை சேர்த்தார்
ஔரவர் ஆன்மா வன்னியின் கர்ப்பம்
உட்புகுந் தமரர்க் குயர்அவிப் பாகமாய்க்
கௌரவம் பெற்றார் காரண மிதனால்
கவின் *சமிகர்ப்பர்* எனப் பெயர் பெற்றார்

## ஏகம்ப கணபதி

இந்த வரலாறுகளை எங்கள் பரமேஸ்வரனார்
இறைவியாம் உமைத்தாய்க் கியம்பினார், எனமுனிவர்
தந்திமுகன் விளையாடல் சாற்றுகிறேன் கேள் என்று
சதுர்மறையோன் ஒருயாகம் சங்கரனுக் காய்இயற்ற
தன்மனைவி சாவித்திரி தனைவிடுத்து காயத்திரியாம்
சரஸ்வதி யாளுடனே தன்பணியை ஆரம்பித்தார்
முன்மனைவி சாவித்திரி மூண்டபெருங் கோபமுடன்
முற்பட்ட யாகத்துள்ளோர் முந்துஜல மாய்ப்போகச்
சபித்தாள் அவ்வேளையிலே தாமரையான் ஈசனிடம்
தாழ்ந்து வழிபட்டுச் சங்கதியை நின்றுரைத்தான்
இபமுகனை மறந்துநீ எடுத்தஇந்தப் பெரும்யாகம்
இந்நிலையைப் பெற்றதனால் இப்பொழுதே கணபதியை
வேண்டிடுவாய் எனப்புகல வேதவய னும் சென்றான்
வேள்வியிலே பங்கெடுத்த விண்ணவர்கள் ஜலமாக
மாண்டதனை யுன்னி வானத்து மாதரெலாம்
மகாவிஷ்ணு வழிபட்ட வக்ரதுண்ட விநாயகரை
மந்தாரை மரத்தடியில் வழிபட்டு நின்றார்கள்
வன்னியினால் துதிக்கும்படி வானிலே அசரீரி
வந்தமொழி கேட்டார்கள் வன்னியால் பூசித்து
தம்நினைவு நிறைவேறிச் சந்தோஷம் கொண்டார்கள்
உருக்குலைந்த தேவரெலாம் ஓங்காரக் கணபதியை
உயர்மந்தா ரைக்கடியில் உணர்ந்துபிர திட்டைசெய்து
கருப்பொருந்தும் ஏகம்பக் கணபதிப்பே ரிட்டார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிசிறந்து யாவருமே சுயஉருவம் பெற்றார்கள்
ஏகம்பக் கணபதியை ஈரிரண்டு முகத்தோனும்
ஏத்தினான் சாவித்திரியை இசையவைத்து யாகம் செய்து
வேகுசா பம்நீங்கி மிகுந்தவரங் கள்பெற்றான்
மேவிடும் வன்னிதன்னை விரும்பித்தரி சனை செய்தோர்
ஆகுவார் அந்தணராய் அந்தணர்கள் ஞானிகளாய்
ஆன்மநலம் பெற்றிடுவார் ஆரார் துதித்தாலும்
சர்வசித்தி பெற்றிடுவார் சகலவள மும்பெறுவார்
தந்திமுகன் வன்னியிதழ் தாங்கியர்ச்ச னைசெய்துன்
திருமகனும் சிறப்படைந்தான் என்றுகிருச் சமதர் சொல்ல
தெய்வமுனி யேஎன்றன் செல்வக் குமரனுக்கு
உபதேசம் செய்கவென உயர்முனிவர் நான்கெழுத்தை
உபதேசித் தார்காசித் துண்டிவிநாய கர்தம்மை
சென்றுவழி படச்சொன்னார். துண்டி விநாயகர் பெருமை
செப்புமாறு கீர்த்தி கேட்டாள், கிருச்சமதர் கூறுகின்றார்

## (29) பவளவிநாயகர் (மணிகர்ணிகை)

மூர்த்திதலம் தீர்த்தமெலாம் முறையாய் அமைந்திருக்கும்
கீர்த்திமிகு காசிபுகழ் கேட்பாயே முன்னொருநாள்
விசுவநா தரைப் போற்ற விஷ்ணுமூர்த்தி காசியிலே
மேன்மைதரு தடாகமொன்றை வெட்டினார்பாதாளம்வரை
பசுபதியும் அங்குவந்தார் பார்த்துத் தலையசைத்தார்
பசுபதியின் குண்டலத்தில் பயின்றமணி ஒன்று சென்று
தடாகத்தில் வீழ்ந்ததனால் தடாகம்மணி கர்ணிகைப்பேர்
தாங்கியது, கங்கைநதி தழுவியது மணிகர்ணிகை
தடாகம் தனைநாடி. தவப்பகீ ரதனதனைத்
தாரணிக்குக் கொண்டுவந்தான் சாரும்நதி பகீரதிப்பேர்
பெற்றுவிளங் கியதன்றே பீடுடைய காசிதனைப்
பற்றிவழிபாடு செய்தால் பரமுத்தி கிட்டிடுமே
இனையமொழி கேட்டுவந்த கீர்த்தியும் அவள்மகனும்
இனியமாசி யமரபக்க சதுர்த்தியிலே நான்கெழுத்தை
உச்சரித்து மந்தாரை அறுகுவன்னி அர்ச்சிக்க
கிப்பிர சாதனுக்கு பத்துக்கரம் ஐந்துமுகம்
பவளநிறம் கொண்டுயர்ந்த சிங்கவா கனந்தன்னில்
சிவமகனாம் விநாயகனார் திருக்காட்சி தந்துயர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வச்சிரா யுதம்கொடுத்துப் பரசுபாணிப் பட்டமிட்டு
மெச்சுகின்ற உலகாளும் வேந்தனா வாயென்று
வரமளித்து துணைபுரிந்தார் மன்னன் பிரிய விரதனும்தன்
வருமனைவி பரசுபாணி மைந்தனையும் வரமேற்று
பட்டாபிஷேகமிட்டு பரலோகம் சென்றடைந்தான்
சட்டமிகு சங்கட சதுர்த்திவிர தத்தின் முறை
பிதிர்தேவ னேகேட்பாய் பேசுமிந்த முறைநோற்றால்
மதிபொங்கு சந்தானம் வருமென்று கூறலுற்றார்

சங்கடசதுர்த்தி விரத முறை

விரதஆ ரம்பத்தில் அல்லதைந் தாம் ஏழாம்
விளங்குமா தங்களில் வரும்
சரதமிகு சதுர்த்தியில் கலசம்வைத் தியந்திரத்
தாபனம் செய்து பொன்னால்
தருசித்தி புத்தியொடு விநாயகரைத் தாபித்து
தாங்குபதி னாயிரம் ஐந்து
பெருகுமாயிரம் ஆயிரம் நூற்றெட் டாகுதி
பெய்துகு றுணிஎள்ளினை
தானமிட் டினியகோ தானமொடு மறையோர்கள்
தகும் இருபத் தொருவருக்கு
ஆனஉணவிட்டதன் பின் ஆனைமுகனைவேண்டி
அமுதினை அருந்த வேண்டும்
இந்தவிர தத்தினும் மேலான விரதமிலை
என்றுபிரம்மன் பின்னரும்
சுந்திரி யுமாதேவி இறைவனிடப் பாகத்தைச்
சூழ்ந்ததும், தமயந்தியாள்
நளன்தனை யடைந்ததும், குறுமுனி அகத்தியர்
நயந்தஏழ் கடலுண்டதும்
வளமுதவு நாரணன் பாணா சுரன்தன்னை
வதைத்துப் புகழ் கொண்டதும்
சதுர்த்தி விரதத்தினை அனுட்டித்த பலனினால்
தானென்று கூறியவுடன்
பிதிர்தேவன் அயன்சொன்ன விரதமுறை யனைத்தையும்
பெரிய நூலாக்கி எழுதிக்
காட்டிலே தவம் செய்யும் கிருதவீ ரியன்கனவில்
காட்சிதந் திந்த நாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிய விதிப்படி சதுர்த்திவிர தம்நோற்று
கதித்தபாக் கியம்பெறுகெனப்
பிதிர்தேவன் கூறித் தனதுலகம் சென்றனன்
பின்பு கண் விழித்தபோதில்
சதுர்த்திநூல் கையிலே கண்டனன், கனவிலே
கண்டவரைக் கண் கண்டிலன்
அந்தநூல் விதிப்படி ஆனைமுகன் சதுர்த்திநோற்
றரியமக வொன்றைப் பெற்றான்
வந்தமக வுக்குக்கை கால்களோ ஒன்றுமிலை
மனக்கவலை கொண்டிருந்தான்
அங்குதத் தாத்திரேய முனிவர் வந் தார்குழந்தைக்
கானைமுகன் ஏகாட்சர
மந்திரோப தேசம்செய் தாயகவலைவிடுக
மகன் சிறப்பாக வாழ்வான்
இவன்காத்த வீரிய னெனும் பெயர்சூட்டினார்
ஏகினார் முனிவர் பெருமான்
தவம்செய்வேன்எனைக்காட்டில்கொடுசென்றுவிடுமினென
தண்கார்த்த வீரியன் சொல
மன்னவனும் அவ்விதம் மகனைஓர் காடுசெல
வைத்தனன், ஆங்கு மைந்தன்
உன்னுமே காட்சரம் ஓதிப்பன் னிரண்டாண்டில்
ஓங்காரன் வரவு கண்டான்
கார்த்தவீ ரியன்தன்னை வாழ்த்தினன் "அன்பனே
கரங்க ளாயிரமும் கால்கள்
சேர்த்திரண்டாகிநீ கற்பகா லம் வாழ்ந்தென்
திருவடியை வந்தடைகுவாய்
எனவுரை பகர்ந்த விநாயகரின் அடிபரவி
இசைந்த பவளத்தினாலே
மனதுநிறை உருவாக்கி வனத்துக்குப் பவளவனம்
மருவு பெயராக வைத்து
உத்தம தவப்பூசை யாற்றிஉயர் பேறுற்றான்:
ஓங்குதலை ஆதிசேடன்
இத்தலத் துப்பவள விநாயகரைத் துதித்ததால்
இவர் *தரணி தரவிநாயகர்*
ஆயபெயர் பெற்றனர், பாண்டவர் முதலியோர்
அண்டி வழிபாடு செய்தார்
ஏயஇவை இந்திரன் சூரசே னனுக்குரைத்
திவ்விரதி ஒருவனைப் பார்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்குகொணர் என்றலும் அங்குள்ள தூதுவரை
எங்கணும் அனுப்பி வைத்தான்
சங்கைமிகு தூதுவரும் சதுர்த்திவிரதம் நோற்ற
தவத்தினரைத் தேடலுற்றார்

## (30) சொர்க்கம் சேர்ந்த சூரசேனன்

வங்காள தேசத்து மன்னன் சாரங்கனின்
மகளான சுந்தரி தனை
சிங்கார சித்திரன் என்பவன் திருமணம்
செய்து வாழ்ந்தி டுநாளிலே
சுந்தரி பிறபுருஷர் உறவுகொண்டவர்களால்
துணைக்கணவனைக் கொல்வித்தாள்
அந்தநிலை கண்டசா ரங்கனும் சுந்தரியை
அடர்ந்தகாட் டிடையனுப்பி
தலைவெட்டிக் கொல்வித்தான் சண்டாளப் பெண்ணாக
தரணிதனில் அவள் பிறந்தாள்
அலைவுற்ற வேளைஅவள் கணபதி கணபதிஎன்
றருள்நாமம் பாடும்பக்தர்
உணவுண்டு போட்டஇலை கண்டதில் கிடைத்தஉண
வுண்டனள் வாயினாலே
கணபதிஓம் கணபதி எனப்பாடி யாடினாள்
காலம்சங் கடசதுர்த்தி
ஆனதால் அவள்செய்த ஊழ்வினைப்பழி நீங்க
அமரர்கள் அவளை யழைத்து
வானமிசை கொண்டுசெலும் வேளை அவளின்பார்வை
வானவர் கோன் விமானம்
மீதினில் பட்டதால் மேலெழுந் திந்திரன்
விமானமும் சென்றதினிதே
ஃதுகண் டான்சூர சேனனும் வசிட்டர் முதல்
இருடிகளை அழைத்துவந்து
மாசிமதி அபரஅங் காரக சதுர்த்தியில்
மகாவிரத மாரம் பித்தான்
மாசிலா விரதபல னால் மன்னன் நகருளார்
மகிழ்ந்து சொர்க்கம் சென்றனர்
சென்றவி மானத்தில் பாவிஒரு வணிகனும்
சேர்ந்து சென்றதன் வினைவினால்
நின்றது விமானமும் நிலத்தினில் இறங்கியது
நேர்ந்த கதி என்ன என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னவன் கேட்கையில் வந்தகணங் கள்மிக்க
வரலாற்றைக் கூறலுற்றார்
முன்னைகௌ டத்தேச தவசீலர் என்கின்ற
முதியமறை யோனுக்கும் ஓர்
கன்னிஜா னகிக்கும்மகன் புதன் பிறந்தான் அவன்
கடையனாய் ஒழுக்க மின்றி
அன்னைதந் தைமனைவி அனைவரையும் கொன்றெங்கும்
அலைந்து காட்டிடை புகுந்து
உன்னும்தா லவனமுனி பத்தினி கலமையை
உடல்சேர வலிந்திழுக்க
அன்னவரும் அசடேநீ குட்டரோகத்தினால்
அலைகுவாய் எனச்சபித்தாள்
பின்னவனும் பேயும்நோயும் கொண்டிறந்தவன்
பேணுமுன் நாட்டு வணிகன்
ஆகிப் பிறந்தஇவன் பெரும்பாவி என்றதும்
அவனைத்தூ யவனாக்கிவான்
போகக் கருணைபுரி வீரகளென மன்னன்
போற்றி செயத் தேவகணங்கள்
கணேசனின் மந்திரம் அவனின்கா தினில் ஓதிக்
கருவினைகள் நீக்க அந்தக்
கணமே விமானமும் விநாயகரின் உலகத்தில்
கதிசேர வைத்ததினிதே.

என்றுமலர்த் தவிசாளி இறைஞ்சியசீர் வியாதமுனிக்கு
அன்றுபுவி விமானத்தோ டடுத்தமக வான்மீட்டும்
ஒன்றுவிசும் பெழுமளவும் உற்றபல கதைமுழுதும்
தொன்றுதொடு முறையாகச் சுவையமிழ்த மெனவிரித்தான் (வி.பு)

## (31) இராமனுக்கு அருளிய பரிசு

கிருதவீ ரியன்தனது மகன்கார்த்த வீரியனைக்
கிரீடம்வைத் தரசனாக்கி
பிரணவனை நினைந்து தவம் காட்டிலே மேற்கொள்ளப்
பிள்ளையார சாட்சி செய்தான்
சகிய மலைச் சாரலில் ஜமதக்னி முனிவரும்
தழுவுரே ணுகைமனைவியும்
சுகமாக வாழ்கையில் இராமனெனும் நன்மைந்தன்
தோன்றினான் பிருகு முனியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாபமுறு விஷ்ணுவின் அவதார மாகவே
தரணி நாடகம் புரிந்தான்
வேகமுறு வேட்டைக்குக் கார்த்த வீரியன் வந்து
விதிமுனிவர் குடிசைபுக்கான்
வந்தார்க்கு விருந்துதரக் காமதேனுவின் மூலம்
மன்னவனும் ஏனையோரும்
சிந்தைகுளிர் விருந்திட்ட செய்தியைச் சிந்தித்து
சீர்க்காமதேனு தன்னை
தரும்படி பலாத்காரம் பண்ணினான் முனிவரும்
தரமுடியா தெனவுரைக்க
பெருவீரர் கள்மூலம் சண்டைக் கெழுந்திட
பெருங்காம தேனுவாலே
உண்டான வீரர்கள் மன்னனையும் யாவரையும்
ஓட்டித்துரத்தி விட்டார்
கொண்டவசை மிகுமன்னன், கார்த்தவீ ரியனந்தக்
குடிசையி லில்லாத வேளை
ஜமதக்னி தனைக் கொன்று ரேணுகையின் உடலிலே
தனுவுறம் பிருபத்தொன்று
அமைவுறப் பெய்திட் டகன்றனன், நைமிச
ஆரண்யம் சென்றுவந்த
இராமனும் கலங்கினான் தத்தாத் திரேயமுனி
இயம்புவிதி ஈமக்கடன்கள்
பராவிநன் கியற்றினான் ஜமதக்னி இன்பமுயர்
பரப்பிரம்ம லோகம் புக்கார்
ஆவிபிரி யும்போதில் தாயான ரேணுகை
ஆற்றியவார்த் தைகளைநினைந்தான்
ஏவியஅம் பிருபத்தொன் றென்னுடலில் பாய்ந்தபடி
என்னைவாட்டிய மன்னனின்
தாவிவரு மிருபத்தோர் வம்சவழி மன்னரின்
தலையறுத் தழித்து வருவாய்
மேவுமிவ் வுரைநினைந் தவ்விதம் புரியவே
வீரசப தம் புரிந்தான்
கைலாச கிரிசென்று பரமேஸ் வரன்பாதம்
கருதித் தவம் கிடந்தான்
ஐயனவன் அருள்கொண்டு விநாயகப் பெருமானை
அருந்தவம் புரிந்தழைத்தான்
அப்பன் விநாயகர் மோதகம் தாமரை
அணிஓலைச் சுவடு பரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிடும் நாற்கரத் துடன்காட்சி தந்துதன்
உயர்*பரசு* கைக் கொடுத்துத்
திருவருள் நல்கினார் இதனால் இவன்பெயர்
ஸ்ரீபரசுராம னெனவே
உருவளர் வெற்றியுடன் உற்றிடும் தொழிலாற்றி
உலகுபுகழ் பேறு பெற்றான்

## (32) கோகர்ணம்

அங்காரகநற் சதுர்த்தி யொடு அறுகுசமிமந் தாரமுமெய்த
தங்காதரவின் அனுட்டித்தோர் தமையும் விளங்கத் தெரிந்தனையால்
கங்கா சுகவிற் படைச்சோம காந்தா இன்னும் சிலகாதை
இங்காதரவிற் கேட்டியென இயம்பும் பிருகு மாதவனே (வி.பு.)

பொங்கும் பிரளய காலத்தில்
புனித இலங்கை அழியாமல்
இங்கோர் இலிங்கம் எனக்கருள்க
என்றான் இராவணன் கயிலையிலே
பரமேஸ் வரனும் ஒரு லிங்கம்
பற்றி எடுத்துக் கைகொடுத்துக்
திருவளர் இந்த லிங்கத்தை
செலுத்தும் வாகனம் வைத்தாலோ
நிலத்தில் வைத்தா லோஇ∴து
நிலைத்து நின்றிடும் எனக் கொடுக்க
மலைத்த இராவணன் கைவாங்கி
வந்தான் வந்த வழியினிலே
வானவர் வேண்டிய வகையாக
வந்தார் விநாயகர் மறையோனாய்
வருணன், இராவணன் சிறுநீரை
விடுமா றவனுக் கிடர் கொடுத்தான்
மிகுந்த சிறுநீர் வேதனையால்
கடிதே யந்த அந்தணனின்
கையில் இலிங்கம் தனைக்கொடுத்து
"நிலத்தின் மீது வைக்காதே
நிற்பாய் இங்கே விரைவினிலே
சலத்துயர் நீக்கி வந்திடுவேன்"
சாற்றும் மொழியை மறையோனும்
சம்மதித் திங்கே விரைவாய்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றும் என்கை வலித்திட்டால்
அழைப்பேன் மும்முறை வராவிட்டால்
இலிங்கம் நிலத்தில் வைத்திடுவேன்
எனவே அந்தணர் கைவாங்கி
மலங்கக் கூற இராவணனும்
வலிந்து சென்றான் சலம்நீக்க
சிறுநீர் ஓய்ந்த பாடில்லை
சீக்கிரம் வாவென விநாயகனார்
ஒருமுறை இருமுறை மும்முறைகள்
உரப்பி யழைத்தார் இராவணனை
வாரா வகையால் இலிங்கத்தை
மண்ணில் வைத்தார் விநாயகனார்
வந்தான் இராவணன் லிங்கத்தை
வலிந்து பெயர்த்தான் இழுத்தலுத்தான்
அந்த லிங்கம் பசுவின்சீர்
அணிசெவி போல மாறியது
அலுத்த இராவணன் அந்தணனாம்
ஐங்கரன் தன்னைக் குட்டுதற்காய்
பெலத்த கைகொண் டோடிவந்தான்
பெருமா னைத்தொட முடியவில்லை
அந்த வேளை எம்பெருமான்
சொந்த வடிவம் காட்டிநின்றார்
துதித்தான் விநாயகர் அருள் செய்தார்
முந்திய லிங்கம் கோகர்ண *
முதுபெயர் பெற்றது. மகாபலமாய்
வாரி இழுத்த காரணத்தால்
மகாப லேஸ்வரர் எனும் பெயரால்
பாரோர் போற்றி வருகின்றார்

## (33) காவிரி தந்த கணபதி

அராவணி சடையெம்மண்ணல் அருளிய வரங்கள் கொண்டே
இராவணன் இலங்கையெய்தி இன்புற வாழ்ந்தானிப்பால்
இராவணக் கடலையுண்ட இருடிபூ சித்தவாறும்
பராவண வுரைப்பக் கேட்டி எனச்சொலும் பதுமச் செல்வன் (வி.பு.)

* (கோ=பசு, கர்ணம்=காது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரனுக்குப் பயந்துவந்த இந்திரன்சீர்
காழியிலே லிங்கம்வைத்து
துதிக்கின்ற காலத்தில் மழையின்றி
நந்தவனம் வாட்டமுற்ற
காரணத்தால் மலரெடுக்கக் கதியின்றி
மனம்வருந்தும் காலந்தன்னில்
கானமுனி நாரதனார் கணபதியை
வேண்டும்படி கதையும்சொல்ல
இந்திரன்ஐங் கரத்தானைத் துதித்துவர
வழைத்தினிது வேண்டுகின்றான்
எந்தையே மழையின்றி நீரின்றி
நந்தவனம் வாடலாலே
சந்ததமும் சிவனுக்கு மலர்சாத்த
முடியாமல் தளருகின்றேன்
தகுந்தவழி செய்களன எதுவேண்டும்
கேளென்றார் தந்திநாதன்
அகத்தியரின் கமண்டலத்துள் பொன்னிநதி
இருக்கிறாள் அவளையிங்கே
அலைபாயச் செய்குதியேல் போதுமென
இந்திரன்நின் றழுதவேளை
மிகத்துரித வெண்காக வடிவாகி
விநாயகனார் வடிவெடுத்து
விரைந்தனரே அகத்தியரின் கமண்டலத்தில்
மெதுவாக வந்தமர்ந்தார்
காகத்தை அகத்தியனார் துரத்தினார்
கமண்டலமும் கவிழ்ந்தபோதில்
காவிரியாம் பெயருடனே காசினியிற்
கமண்டலநீர் பாய்ந்ததம்மா
வேகமுடன் அகத்தியனார் விரைந்து செல
வெண்காகம் சிறுவனாகி
விரைத்தோடக் குட்டுவதற் ககத்தியனார்
துரத்திமிகக் களைப்புக் கொண்டார்
அப்பொழுதில் எம்பெருமான் தன்னுருவைக்
காட்டினார் அகத்தியர் தன்
அடுகையால் தன்சிரத்தில் குட்டினார்
இரந்துமிக அஞ்சலித்தார்
செப்பரிய பரம்பொருளே சிறியேனின்
பிழைபொறுப்பீர் தேவதேவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியனேன் குட்டியவா றாரொருவர்
வழிபடினும் தேவரீரும்
திருவருளைப் புரிகவெனப் பொதிகைமுனி
கணபதியை வேண்டிநின்றார்
சிந்துரனும் வரங்கொடுத்தார் குறுமுனியின்
வரப்படியும் இராவணற்கு
வருமிரா வணன்கேட்ட வரப்படியும்
அடியார்கள் சென்னிகுட்டி
வாரணனை மூன்றுகுட்டுக் குட்டியெழுந்
தனுதினமும் வணங்குவார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம் பாகம்
# லீலா காண்டம்

## (34) கஸ்யபர் சந்ததி

(சூதமாமுனிவர்–ஏனைய முனிவர்களுக்குக் கூறியது)

பிரளயத்தின் முடிவிலே பிரமன்தன் மனத்திருந்து தோற்றுவித்த
பிள்ளைகளாம் எழுவரிலே கஸ்யபர் ஒருவராய்ப் பிறந்து வாழ்ந்தார்
பிரணவனின் ஓரெழுத்து மந்திரத்தைக் கஸ்யபர்க்கு பிதா பிரமன்
பேணியுப தேசிக்கக் கஸ்யபர் ஆயிரமாண் டனுசரித்துத்
தவமிருந்தார் விநாயகனார் காட்சிதந்து தகுவரங்கேள் என்ற வேளை
தற்பரனே தேவீர் என்மகனாய் வரவேண்டும் சிருட்டிசெய்யும்
பவமுறையும் எனக்கருள வேண்டுமெனக் கஸ்யபர் கேட்டுப்பெற்றார்
பயன்பெற்ற கஸ்யபர் தன்பதினால் சக்திகளைச் சேர்த்துதேவர்
கந்தருவர் சாரணர் யட்சர்மலை நதிசெடிகள் ஈஎறும்பு
காண்சகல சீவரையும் படைத்துவிநா யகரின்மந் திரத்தை ஓதித்
தந்தனர்அச் சீவரெலாம் வருடமாயிரம் தவஞ்செய் தோங்காரத்தன்
தாள்கண்டார் அவரவர்க்கு தகுந்தவடி வங்காட்டி னார்கணேசர்
தேவர்கள் சுமுகரென முனிவர்கள் ஏகதந்தர் எனக்கந்தர்வர்
ஸ்ரீகபிலர் சாரணர்சித் தர்கஜா னனர்மனிதர் லம்போதரன்
மாவினம் விகடர்பட்சி மரங்கள்விக் கினராஜர் நவக்கிரகங்கள்
வல்லகண நாயகர் திசையதிபர் தூமகே தெழும்பயிர்கள்
பாலச்சந் திரனென போற்றினார் பத்துடன் வக்ரதுண்டர்
பரவிடும் விநாயகர் ஆகியபன் னிரண்டுமே ஆயிரத்துள்
சீலமிகு மந்திரம் என்றெவரும் போற்றிடும் நாமமென்றார்

தேவர்தொழு தெழுங்கருணைச் செல்வனே போற்றி
சிறந்தொளிரும் மங்கள சொரூபனே போற்றி
ஓவறுசித் திகளனைத்தும் உதவுவாய் போற்றி
ஒலிகெழுகிண் கிணிபாத சாலநூபுரங்கள்
மேவியொளிர் சரணனே போற்றிமததாரை
விரவியதிண் கபோலனே போற்றி நினதருளின்
பாவமொடு பலபிணியும் பம்புவறு மைகளும்
பலவான இடர்களையும் பாற்றுகஇன் புறவே (வி.பு.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமுழுதும் நீக்கமற ஒன்றாய்நிற்கும் பொருளெவன் அவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள் உறாதமேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை ஊட்டும் களைக்கண் எவன்-அந்த
உலகமுதலைக் கணபதியை உவந்து சரணமடைகின்றாம்

## (35) கபில விநாயகரும் கணனும்

**– (சிந்தாமணி விநாயகர்)**

அபிசித்து மன்னனும் மனைவிகுண மதியும்
அரியபுத் திரப்பேற்றுக் கருந்தவம் செய்தனர்
வருமகா முனிவரர் வைசம்பா யனரின்
வாக்குப்படி பரமனை வழிபட்டு வந்தனர்
பரமனின் சொற்படி பாயும்நதி கடலுள்
பரவிச்சங் கமிக்குமிடம் பக்திநீ ராடினர்
பிரமனின் அருளினால் பெற்றனர்ஓர் மகனை
கணனெனும் பேரிட்டார். கணன்கயிலை சென்று
கருதுமுப் பானாண்டு காற்றைப் புசித்தான்
அணையும்பத் தாண்டுகள் உணவின்றி நின்றான்
ஆயிரமாண் டெல்லையில் அருந்தவம் செய்தான்
அவனின்தவ யோகத்தின் அக்கினியால் அண்டம்
அனைத்துமே வெதும்பியன. அரனுமுமையாளும்
இவன்முன்னே வந்தனர் இந்திரனும் அழிக்காத
இலங்குவாள் நீண்டநிறை ஆயுள் மூவுலக
ஆட்சியும் வரந்தந்து மறைந்தனர். வரத்தின்
வலிமையினாற் கணன் மகாராஜன் ஆனான்
வனமொன்றில் வேட்டைக்கு வந்தான் களைப்பாலே
கபிலமுனி ஆச்சிரமம் கண்டான் புகுந்தான்
கபிலமுனி இந்திரன் தந்தசிந்தாமணி
கருணையால் அனைவர்க்கும் கனிந்துணவு தந்தார்
சிந்தா மணிதன்னை சிரமத்தாலே கணன்
திருடினான் முனிவரும் திர்சாபமிட்டார்
சந்ததம் நான்பணியும் தந்திமுகனாலே
சடுதியில் அழிவைநீ எனும்வார்த்தை சொன்னார்
விஷ்ணுவின் மாயா சத்திசா ருகாசினி
விநாயகர் மந்திரம் கபிலமுனிக் களித்தாள்
இஷ்டமொடு கபிலர் இலட்சம் பதினெட்டு
ஏற்றஉருச் செபித்தோம யாகங்கள் புரிந்தார்

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உத்தண்ட கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்ன கிரீடமொடு நடனகுண் டலமாட
நளினமலர் மோதகம் ஞானமழு பூமாலை
திவளஇரு சித்திபுத்தி சேர்ந்துவரச் சிங்கத்திலே
செல்வ விநா யகப்பெருமான் தெரிசனம்தந் தார்ஆங்கே.
சிந்தா மணியுன்னைத் தேடிவரும் கலங்காதே
இந்தமொழியைக் கூறி எம்பெருமான் மறைந்துவிட்டார்
விதந்துஎனும் மந்திரியின் வீண்வார்த்தை யைக்கேட்டு
மெய்யன்பன் கபிலர்தனை கொலைசெய்யப் புறப்பட்டான்
மகாசித்தி நாயகியார் வல்லபடை கொண்டெழுந்து
வந்தபடை களையோட்டி மற்றவரைச் சிறையிலிட்டாள்
தகாதகணன் ஐந்துகணை கபிலமுனி பூசித்த
தந்திமுகன் மேல்விட்டான் ஒன்றுதிரு முடியினிலும்
தடபுயத்தில் இரண்டம்பும் தாள்களிலே இரண்டம்பும்
விழுந்துநீ றாகியன – விநாயகனார் மழுவைவிட்டு
வித்தகனாம் கணன்தலையை வெட்டியறுத்துத் தொலைத்தார்
தொழுந்தேவர் பூச்சொரிந்தார் அபிசித்துக் கைதொழுது
தும்பிக்கை யானடியில் துவண்டுவழிபாடு செய்தான்
கணனின்நன் மக்களுக்குக் கணபதி முடிசூட்டிக்
கனிந்த சிந்தாமணியைக் கபிலருக்குக் கொடுக்கையிலே
குணநிதியே இம்மணியைக் கொள்ளுங்கள் தாங்களெனக்
கொடுத்தார். சிந்தாமணி விநாயகர் பேரிட்டழைத்தார்
கபிலர் பூசித்தமையால்கபிலவிநாயகர் என்றும்
கனிந்தமலர் முகத்துடனே காட்சிதந்த காரணத்தால்
சுமுகர்என்றும் போற்றிசெய்து தொல்லுலகோர் பூசித்தார்
சொல்லுவேன் விநாயகரின் தோற்றமதைக் கேள்என்றார்

சரியை கிரியை வளர்யோகம் தக்கஞானம் எனநின்றே
உரியபணிக ளியற்றுநருக் குவப்புற்றவ்வப் பயன்களையே
விரிய உதவும் பெருங்கருணை விமலா நீயிங் கவதரித்துத்
தெரிய எதிர்நின் றனையதனாற் தேவா நின்னைச் சரணடைந்தேன்
(வி.பு.)

## (36) விநாயகர் தோற்றம்

பிரமதேவர் கொட்டாவியில் பிறந்தமகன் சிந்தூரன்
பிரமதேவர் அவனுக்கு பெருவரங்கள் பலகொடுத்தார்
மூவுலகும் ஆளும்வரம் முட்டுபவர் சாம்பராகி
சாகும்வரம் கொடுத்தாரே. தகுந்தவரம் சரிபார்க்க
பிதாவான பிரம்மனையே பிடிக்கவந்தான் சிந்தூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதாவுமே பயந்தோடி பிதாவையே அழிக்கவந்த
துட்டனேநீ விநாயகரால் தொலைந்திடுவாய் எனச்சபித்தார்
விட்டுணுவை நாடிவந்தான். வீரனேநீ சிவனிடம்போய்
சண்டையிட்டு வெற்றிகொண்டால் சர்வவீரன் ஆகிடுவாய்
என்றுரைக்கச் சிந்தூரன் ஏகினான் சிவனிடமே
சிவனுக்கும் அவனுக்கும் தீர்விலாச் சண்டைகண்டு
உவமையிலா அந்தணனாய் ஓங்கார விநாயகனார்
இருவருக்கு மிடையிலே இகற்பரசை நாட்டிவைத்தார்
பெருத்த சண்டை வெற்றியின்றி பின்சென்றான் சிந்தூரன்
அந்தணராய் வந்தவரை அம்பிகையாள் முகம்நோக்கி
வந்தவர்நீ யாரையா வகையெனக்குக் கூறிடுக
என்றலுமே அம்மாயான் இவனையழிப் பதற்காக
உன்றன்வயிற் றினில் பிறக்க உளங்கொண்டு வந்தேனென்றார்

உலகமுழுதும் தனதுகரத் துறைவித்திருக்கின்றான் யாவன்
இலகுமனாதி சித்தாந்த மாகியிருக்கின்றான் யாவன்
உலகில் பலவேறா முருவம் உடையான் யாவன் மலமணுகா
அலகிலறிவன் யாவன்அவன் அடித்தாமரைக்குப் பணிகின்றோம்
(வி.பு.)

விண்ணவரும் தேவர்களும் விநாயகர்பால் சென்றிறைஞ்ச
"விண்ணவரே அஞ்சாதீர் விமலிபார் வதிவயிற்றில்
வந்துதித்துச் சிந்தூரனை வதைத்திடுவேன்" எனப்புகன்றார்
பந்தமிலாப் பார்வதியின் பயில்கருப்ப மாய்ப்புகுந்தார்
பரமசிவன் பார்வதிக்கு பரியலிஎன் னும்வனத்தில்
மருவியமண் டபமமைத்து வாழ்ந்துவரச் செய்தாரே.
"சிந்தூரனே உன்னைக் கொல்லும் சிறுவனவன் பார்வதிபால்
வந்துகரு வாயுள்ளான் வனமாய பரியலியில்
சென்றுகாண் " என்றங்கே செப்பியதே அசரீரி
கன்றுமனங் கொண்டெழுந்து காற்றுருவில் சிந்தூரன்
பார்வதியின் வயிறுசென்று பாலன்தலை தனையறுத்து
நீர்பொருகு நர்மதையின் நெடுங்கரையில் எறிந்துவிட்டான்
எறிந்த இடம் கணேசகுண்டம் என்னும்பேர் கொண்டதன்றே
செறிந்தங்கே பாயிரத்தம் சோணைநதி யாகியதே
தலையில்லாப் பிள்ளைதனைத் சக்தியுமை பெற்றெடுத்தாள்
நிலைகுலைந்து தேவரெலாம் நெடுந்துயரம் பட்டார்கள்
"சிந்தூரனை யானேதான் சிரச்சேதம் செய்திடுவேன்
அந்தரரே அறிமின்என அக்குழந்தை கூறியது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விண்ணர்கள் தோத்தரித்தார் விமலியுறை மண்டபத்தை
துண்ணெனவே யானையுருக் கொண்ட கஜா சுரன்என்பான்
இடித்திடுத்துத் தள்ளிடவே எம்பெருமான் பரமசிவன்
நெடுத்ததிரி சூலத்தினால் நின்றகஜா சுரன்தலையை
அறுத்தெறிந்தார் அப்பொழுதில் ஆவிவிடும் கஜாசுரன்
உரத்தகுரல் ஓங்கியெழ ஓம்சிவாய நமஎன்றான்
அசுரனவன் தனதுபக்தன் ஆகையால் அவன்தலையை
உவகையுடன் எடுப்பித்தார் ஓங்கார விநாயகனார்
தன்கையால் வாங்கினார் தன்தலையாய் வைத்தெழுந்தார்
முன்னவன் விநாயகராய் முதன்மைமிகும் ஆவணியின்
சதுர்த்தியிலே பூர்வபக்கம் சகலருக்கும் காட்சிதந்தார்
அதிர்கின்ற படையுடனே, அடங்காத சிந்தூரன்
கஜமுகவி நாயகரைக் கசுக்குவேன் என்றெழுந்து
புயந்தட்டிப் போர்புரியப் புறப்பட்டு வந்துநின்றான்
எம்பெருமான் விநாயகனார் எடுத்தார் விஸ்வரூபம்
செம்பதும முகத்தினிலே திருமறையோர் புயங்களிலே
அரசர்எலாம் முழங்காலில் அணிவணிகர் பாதங்களில்
வருணத்தார் பலபேரும் மலர்விழியில் சூரியனும்
இதயத்தில் சந்திரனும் எழில்நாசி அக்கினியும்
முதுவயிற்றில் ஆகாயம் முடியிலே விண்ணுலகம்
அடிப்பாதம் முழுவதுமே அளக்கவெண்ணா மூவுலகும்
தொடுசெவியில் மலையாறு சூழ்கடல்கள் யாவையுமே
கண்டானே சிந்தூரன் கலங்கியுடல் நடுங்கினனே
கொண்டோங்கு துதிக்கையால் தூக்கிநசுக் கிக்குளைத்துத்
தன்னுடலில் பூசிகொண்டார் சகலலோக சீவர்களும்
பொன்னவரும் விநாயகரைப் போற்றிமகிழ்ந் தாடினரே

## (37) மூஷிகவாகனரின் வேலாயுதம்

சபரிமுனிவரின் இல்லத்துத் தர்மபத்தினி மனோமயையை
சபரிமுனிவர் நீர்க்கரைபோம் சமையமறிந்து கிரவுஞ்சன்
என்னுங்கந் தர்வன்வந்து இழுத்தணைக்கவரும் வேளை
இன்னசெயலைக் கண்டமுனி இட்டார்சாபம் பெருச்சாளி
வடிவாய்ப் போவென் றவர்கூற மன்னிப்புக்கேட் டிரங்கிநின்றான்
படிமேல்பராசர முனியிடத்தே பயில்வார் விநாயகர் இனிஒருநாள்
அவரின்வாகன மாகுகென அவனுக்குரைத்தார் சபரிமுனி

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் சபைக்கு நாரதனார் இனிதாய் வந்தார் உரைக்கின்றார்
முந்துறு மன்னன் அபிநந்தன் முற்படநின்றனை அழைக்காமல்
இமயம் விந்திய மலையிடையில் இருக்கும் ஹேம வதிநகரில்
அமரரும் ரித்விக் குகளுமுற அரிய யாகம் புரிகின்றான்
யாகம் நிகழ்ந்தால் உன்வீரம் நலியும் என்றார். அதைக்கேட்டுக்
கோபங் கொண்ட இந்திரனும் குலவும் காலநே மிதனை
விட்டான் அவனும் யாகத்தை விரையாய் அழித்துத் துயர்செய்தான்
முட்டில் லாத முனிவரெலாம் முறையிட்டார்கள் விநாயகர்பால்
துன்பம் தீர்ப்பேன் அஞ்சலெனச் சொன்னது வானொலி திடீரெனவே

* * *

அன்பு மகப்பேறில்லாமல் ஆனைமுகத்தான் அருளாலே
வரேணி யனது மனைவியிடம் வந்து பிறந்தான் ஓர்மைந்தன்
திருவரு ளாலே அம்மகவைச் சீரார் கணபதி மறைத்துவிட்டு
தானே நான்கு கரத்துடனே தாங்கும் தும்பிக் கையுடனே
தேனார் மகவாய்க் கிடந்தாரே திகைத்த மன்னன் அம்மகனை
வனத்தில் விட்டிடப் பணித்திடவும் வந்த தூதுவர் பராசரரின்
வனத்திடை தடாகக் கரையினிலே மழலைக் குழந்தையை விட்டார்கள்
கண்டார் பராசரர் குழந்தைதனை கையால் வாரி எடுத்தணைத்துக்
கண்டார் இவர்மகா கணேசரென: கணபதி முனிவரின் ஆச்சிரமம்
வளருங் காலம் முனிவரிடம் வந்தது முந்திய பெருச்சாளி
துணிகளை வெட்டி மரமெல்லாம் துளைபல போட்டுத் துள்ளியது
கணபதி யிடத்தே பராசரரும் கதித்த எலியின் கொடுமைகளை
எடுத்துக் கூறலும் எம்பெருமான் எலியின் மீதே பரசுதன்னை
விடுத்தார் அதுபோய் எலிதன்னை வேக மாகப் பிடித்துவந்து
பெருமான் முன்னர் விட்டதுமே பிறப்பும் சாப விமோசனமும்
ஒருவா றுணர்ந்த கிரவுஞ்சன் உடைய பேருடை கந்தர்வன்
தன்முன் சாபம் சொன்னதுமே தந்திப் பெருமான் அன்னவனை
மன்னும் வாகன மாய்க்கொண்டார். வானவர் கால நேமிதனை
அடக்கும் வண்ணம் வந்திறைஞ்ச ஆனைமுகத்தான் அங்குசத்தை
முடுக்கி விட்டார் அதுசென்று முரடனைக் கட்டி இழுக்கையிலே
கால நேமி பலவடிவில் காகம் நீர்எரி புயலாகி
கோல வச்சி ராயுதமாய் கோணங்க ளெல்லாம் மறைந்திடுவான்
ஆண்டவ னவனை வேல்ஏவி அடக்கினர் அவனும் சரணடைந்தான்
வேண்டிய கால நேமிதனை விநாயகப் பெருமான் அறிவுறுத்தி
வேண்டிடும் என்னடி யார்களுக்கு விக்கினம் ஒன்றும் இளையாதே
பூண்டிடும் தொண்டர் எவருக்கும் பொருந்திய துணையாய் நின்றிடுவாய்
இப்படிக் கூறி யருள்புரிந்த எந்தை தும்பிக் கையானை
மெய்ப்பொருள் விக்கின விநாயகராய் விண்ணோர் முதலோர் வழிபட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (38) மயில்வாகனர்

கொக்கின திறகு மலைத்தவர் குமர னாகிய விநாயகர் உலகில்
விக்கின ராசர் ஆகியமுறைமை விரித்தனம் வியாத மாதவனே
விக்கின ராசர் ஆகியவாறே வியன்மயூ ரேசராய் உலகில்
புக்கின அசுரர் தமைத்தெறுங் கதையும் போற் றெனப் புகலுவான் பிரமன்
–
வேதங்களை அஸ்திரமாய் விண்ணவர்கள், அசுரர்களை
மோதியே அழித்தொழிக்க முனைப்பிழந்த அசுரர்களில்
கமலாசுரன் கங்காசுரன் கருதிவஞ் சனைநினைந்தார்
கமலா சுரன், கமலஅயன் கனிந்தநிஷ்டை செய்கையிலே
வேதங்களைக் களவெடுத்து கங்காசுரன் இடம்கொடுக்க
ஓதக்கடல் மீதெறிந்தார் ஒளித்தசுரர் அகன்றார்கள்
இதையறிந்த பிரமதேவர் இறைவனிடத் தேபுகன்றார்
மதிச்சடையன் விநாயகரை மன்றாடும் படியுரைத்தார்
விக்கின விநாயகனார் வேதியர்போல் வடிவெடுத்து
தக்கமறை ஆகமங்கள் தங்கிடும்பு ராணமெலாம்
சுந்தராச் சிரமத்திலே சொல்லிநடை முறைசெய்தார்
வந்தமறை யோர்தன்பெயர் மல்லாலர் என்றுசொன்னார்
உலகமெலாம் செழித்தோங்கி உயிர்கள்குது கலித்தனவே
நிலமையிதைக் கேட்டறிந்த நிட்டுர கமலாசுரன்
மல்லாலர் தனையழிக்க வந்தானே படையுடனே
எல்லாவிண் ணவர்களும்தம் இயல்பான வாகனத்தில்
போருக்குப் வந்தார்கள் பூதக்கண நாதனுக்காய்
பேரான யாகம்செய்து பெருமுனிவர் கூட்டமெலாம்
மயில்வா கனமொன்றை வரவழைத்துக் கொண்டார்கள்
செயல் சிறந்த கார்க்கியர் எனும்முனிவர் வாகனத்தை
விக்கின விநாயகருக்கு விரைந்திறைஞ்சிக் கையளித்தார்
மிக்கபுகழ் மயிலினிலே விநாயகரும் வீற்றமர்ந்தார்
சத்திமிக்க புத்தியம்மை தணியாத கோபத்திலே
புத்திரனாய் வந்துதித்த போர்வலிய இலாபனொடும்
புத்திதேவி யாளுடனும் புறப்பட்டார் போர்க்களத்தே
கமலன்பல மாயாவித்தைக் கடும்சமரம் புரிந்துவிட்டு
கடியமோக னாஸ்த்திரத்தைக் களத்திலே பாயவிட்டான்
இமைப்போதில் இலாபனும் ஏற்றபடை வீரர்களும்
ஏக்கமுடன் மயங்கிவிட்டார் இதைக்கண்ட விநாயகனார்
அரியதண்டா யுதத்தாலே அசுரனின் மார்பிடந்தார்
அவனுடலி லெழுந்தரத்தம் அனந்தகம லாசுரராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியசமர் புரிவதனை பேசுமகன் இலாபன்என்பான்
பேணுமிரு தாயரையும் பெருமூச்சு விட்டழைத்தான்
பொலிந்தாரொன் பதுகோடி பூதகணம் இரத்தமெலாம்
நிலந்தன்னில் வீழாமல் நின் றுறுஞ்சி யுண்டனவே
நெடுஞ்சூலத் தாலெங்கள் நீள்கையன் விநாயகனார்
மோதுகம லாசுரனை மூன்றுதுண்டுக் கூறாக்கி
சோதியாய் வந்தவனைத் துணையடியில் சேரவைத்தார்

## (39) சூரியகுமாரன்

மைதல தேசத்தில் கண்டக நகரத்தை
மன்னவன் சக்ரபாணி
வக்கரை மனைவியுடன் வாழ்க்கைபுரி காலத்தில்
வந்துபிறந்திடும் பிள்ளைகள்
வையகத் துதித்தவுடன் மரித்துவிடும் அதனாலே
மகா சவுன முனிவர் சொன்ன
வாக்கின்படி சூரியனை வேண்டியொரு மைந்தனை
வாழ்வுதரப் பெற்றெடுத்தார்
மகனுக்கு மூன்றுகண் சிவந்தசடை இருகரம்
வைத்திருக்கும் சூலங்கள்
ஆக்கமிகு மிவனுக்கு வருணபக வான் சிந்து
ஆய பெயரிட்டுச் சென்றார்
அசுரகுரு சுக்கிரனின் ஆலோ சனைப்படி
அரனாரை நினைந்து வேண்டி
இரண்டாயி ரம்வருடம் தவம்செய்து வரம்வாங்கி
இமயவரை வெற்றி கொண்டான்
இடருற்ற சிறைப்பட்ட தேவர்கள் வியாழனின்
இனிவான வார்த்தைப்படி
இரந்தனர் விநாயகரை அருளினார் தேவர்களை
இடர்நீக்க உறுதிகொண்டார்
இசைவான திரிசந்திப் பதியிலே கௌதமர்
இனையமுனி நாயகரெலாம்
சிவனைமன யோகத்தில் தேடிநின் றிரங்கிடச்
சிவனும்பார் வதியும் வந்து
தேவர்களின் குறைகேட்டுத் தீர்வுதரு வோமென்றார்
திரிசந்திப் பதியின் கண்ணே
சிவனுக்கொ ராலயம் முனிவர்கள் கட்டினர்
சிவனும்நிட் டையில் அமர்ந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநாதன் நிஷ்டையில் இருப்பதேன் என்றன்னை
தேன்மொழி சூரந்து கேட்டாள்
அம்மையே தேவரைச் சிறைமீட்கும் பரம்பொருள்
ஆயமும் மூர்த்திகள் தம்மை
ஆக்கியவன், அவனுன்றன் வயிற்றிலே தோன்றுவான்
அமரரின் சிறைநீக்குவான்
செம்மையாய் அவனின்ர காட்சர மந்திரம்
செபித்துப் பன் னிரண்டு வருடம்
திருந்துதவம் செய்யென பார்வதியும் புரிந்தனள்
செப்பொணாக் கண்கள் முகங்கள்
கால்கைக ளோடுபெரு வடிவிலே விநாயகர்
காட்சிதந்தார் களிக்க
கையினால் முகம்பொத்தி அம்மையார் வதிலனது
கண்கூ சுகின்ற தையா
மேல்வடிவை நீத்துவளர் பால்குடி குழந்தையாய்
விரைந்தென்முன் வருகஎன்ன
விநாயகர் மூன்றுகண் ஆறுகரம் முத்தாரம்
விளங்குமொரு வடிவில் நின்றார்
குழந்தைக்குப் பாலூட்டிக் கணேசனே என்றுவாய்
குளிரத்தாலாட்டி வளர்த்தாள்
இழிந்தசெயல் புரிகின்ற சிந்துராசன் கனவில்
எண்ணிலப சகுனம் கண்டான்

## (40) குழந்தைக் கணேசன் திருவிளையாடல்

சிந்துவின் காதிலே "அடாஉன்னை அழிக்கின்ற
செல்வக் குழந்தை யொன்று
திரிசந்தி க்ஷேத்திரம் வளர்கின்றான்" என்ற மொழி
செய்ததச ரீரிவார்த்தை
அந்தமொழி கேட்டவுடன் அந்தக்குழந்தையை
அழிப்பதற் கசுரர்பலரை
அங்கங் கனுப்பினான் அன்னையார் வதிமடியில்
ஐங்கரன் வளருகின்றான்
கிருத்திகன் கேமன்குச லன் குரன் வியோமன்
கிளர் சதம கிஷைபட்சணி
கேடுபுரி கடன் அசகன் கமலன்வீ மன்கூடன்
கபட விகிர் தாசுரனென
பெருத்தபெயர் அசுர்கள் குதிரைமலைப் பாம்பெருமை
பிறங்குமலை களிறொட்டகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேயனைய பலவடிவில் ஐங்கரனை அழித்திடப்
பிரயத்தனம் செய்தனர்
எங்கள் கணேசனைக் கொல்லவந் தவர்தமை
இமைப்போதில் கொன்றொழித்தார்
இயற்சிற்பி விஸ்வகர் மாஞன கணபதிக்
கிடுபாசம் பரசங்குசம்
பங்கயம் முதலியன வந்துதவ செந்நாயின்
பாவனையில் வருவிருத்திகன்
பாரிலே இறந்துபட அங்குசத் தாலவனைப்
பாலகணபதி யழித்தார்

## (41) கருடரும் நாகரும்

காசிபரின் பதின்மூன்று மனைவியருள் வினதையும்
கத்துருவும் நீண்டபகையால்
கருத்துவே றுற்றுவாழ் காலத்தில வினதை*மகன்
கத்துருவைக் கடிந்துபேசி
வீசுதலை மயிர்பிடித் திழுத்தடித் தநியாய
விளைவுகளை உண்டாக்கினான்
வினதைமகன் சடாயுவைக் கத்துருவின் மக்களாய்
விளங்கு நாகர்கள் கூட்டம்
படையெடுத் தேகினர், கருடர்கள் ஆகிய
பலமுடைய வினதை மக்கள்
பாம்புகளை அடக்கினர் ஆயினும் வாசுகி
பதுமன், மகா பதுமன் குளிகன்
அடல்மிகும் அனந்தன்தக் கன்கங்க பாலனுடன்
ஆதிகார்க் கோடகன்தம்
ஆற்றலால் கருடர்களைச் சிறையிட்ட னர்வினதை
அம்மக்கள் தம்மை மீட்கக்
காசிபரை வேண்டினள் அத்தருணம் காசிபர்
கலங்காதே உனதுவயிற்றில்
கருவாகி ஒருமுட்டை பிறந்திடும் அஃதினைக்
கணேசர் வரும்போதிலவர் முன்
மாசிலா மனமுடன் வைப்பையேல் முட்டையில்
மயிலொன்று வந்து தோன்றும்
மயிலேறி ஐங்கரன் நாகர்களை யடக்கியுன்
மக்களைச் சிறைநீக்குவார்

*சடாயு

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரன்கிருஷ் ணாசுரன் விசித்திரப் பறவையாய்
விநாயகரைத் தாக்கவந்தான்
வித்தக விநாயகர் தனதுபா சத்தினால்
வீழ்த்தினார் அவ்வசுரனை
நேரமிதில் வினதைதன் முட்டையை நிறைவாக
நீள்கரக் கணேசன் முன்னே
நிகரிலாப் பரமனே காண்கஎன வைத்தலும்
நீட்டிக் கையால் உடைத்தார்
வந்ததோர் மாமயில் தன்னைவா கனமாக்கி
மயூரேசர் எனத்திகழ்ந்தார்
மயிலேறி நீராட வரும்போது வாசுகியின்
மகள் அவரை நாகலோகம்
வந்துபூசனை ஏற்கும் வண்ணம் மன்றாடினாள்
வாரணனும் அங்குவந்தார்
வாசுகி மதிக்காத தன்மைகண் டவனுச்சி
மணியைப் பிடுங்கி எடுத்தார்
வாசுகி மயங்கினான் சடாயுமுத லோர்தமை
வன்சிறை மீட்டெடுத்தார்
வாசுகியைத் தன்விரல் மோதிரம தாயணிந்து
மகாஆதி சேடன்தனை
வீசுபுகழ் தன்னுதர அரைஞா ணாய்ப் பூண்டனர்
வலியசுரன் கொக் குருவத்தில்
விரவுமுனி குமாரர்களை விழுங்கியதைக் கண்டநம்
விநாயகக் கருணைவள்ளல்
அசுரனை யழித்தக் குமாரர்களை மீட்டனர்
அதன்பின்னோர் அசுரன் புலியாய்
அனைவரையும் துன்புறுத்த, அவனையும் பன்றி எருமை
ஆயஅசு ரரையு மழித்தார்
அசுரப்புலி மீதிலே பாசம்விட் டிடுவேளை
அவனையழித் தெமனையுங் கொண்
டங்குவந் திடத்தர்ம ராஜனாம் இயமனும்
அடியேனை இழுத்ததேனோ
இனிவாக உரைமினென விநாயக மகாமூர்த்தி
இறந்தவரின் உயிரை நல்கு
எனதயடியர் தம்மிடம் இனிமேல்நீ செல்லாதே
என்ஆணை இதுவென்றறிதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிவாக இவ்வாறு கடமையைச் செய்யென்று
கணராசன் தர்மராஜன்
காதிலுப தேசித்துக் காணுமுல கங்குளிரக்
காட்சிதந் தருள்புரிந்தார்

## (42) சிந்துராஜனின் முடிவு

கயவனாம் ஊர்த்தகே சாசுரனை விநாயகர்
காதுமுக் கறுத்தனுப்ப
கண்டுவெகுண் டெழுந்தனன் சிந்துராஜன் ஸ்ரீ
கணேசரைக் கொல்வ னென்று
நியமமுயர் திரிசந்தி ஆச்சிரம் எவரும்செயல்
நிகழ்த்தக் கூடா தென மதி
நிறைகதிர வன்வருணன் வாயுஅக்கினிதேவன்
நின்றவ ரெவர்க்கும் சொன்னான்
சிந்துரனை அழித்திட சிவன்பல்லா யிரம்பூதம்
சேய்கணே சனுக்குதவினார்
திருமுருகன் வீரபத் திரர்படைகள் திருநந்தி
சேர்ந்துவர மயிலிலேறி
நந்தியைக் கண்டந கர்க்குத்தூதனுப்பினார்
நந்தி சிந்துரனிடம் போய்
நல்லுரைகள் கூறினார் அமரரைச் சிறைநீக்கி
நலமாக வாழச் சொன்னார்
கேளாத சிந்துரனைப் பார்த்தனர் திருநந்தி
கிளம்பியது கோபாக்கினி
கெட்டவனின் அரண்மனை ஹூங்காரத் தொனியினால்
கிடுகிடுத் தாடியதங்கே
நீளானைக் கையனிடம் ஏகினார் அவரிடம்
நிகழ்ந்ததை எடுத்துரைத்தார்
மூண்டது பெருஞ்சண்டை வீரவா குப்படை
முதலியரை எதிர்த்த சிந்து
முதுமைந்தன் மித்திரன், அமைச்சர்கலன் விகலனை
முருகனுடன் வீரபத்திரர்
தூண்டுவே லாற்கொல்ல, மந்திரி கவுத்துவன்
தொடர்வீர ராசன்தன்னை
தொல்வீர பத்திரரும் நந்தியும் கொன்றனர்
துரிதகண பதிநாதனும்
சிந்துவும் போரிடும் போதிலே அவன்விட்ட
தீயுமிழ் கணைகளெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிருஷ்டி கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க்ஷிப்ரபிரசாதர் (கணபதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீக்கிரம் பொடியாகக் கணபதியும் முருகனும்
திரிசூலம் விட்டழித்தார்
சொந்தமகன் தன்மனும்அ தன்மனும் மாண்டனர்
துரிதமாய் நாரதமுனி
தும்பிமுக னைவேண்டிச் சிந்தூரனை அழித்திடத்
தோத்திரம் செய்து நின்றார்
கட்டளைப்படி சென்ற பிருங்கிமுனி சிந்துவின்
கனகமணி முடியை உதைத்து
கண்முன்னே அவன்மனைவி தலைமயிரை அறுத்திட்டார்
கடுகவே வந்த சிந்து
விட்டனன் சக்கரம் விநாயகரை வலம்வந்து
விரைந்து சென்றது பயந்து
விம்மலுறு சிந்துதன் சூலத்தில் பலகோடி
வீரர்களை உண்டாக்கினான்
சூலமொடுபர சினால் அவர்களு மழிந்தனர்
தொழுதனர் தேவர் எல்லாம்
சுந்தர விநாயகர் சூலத்தால் சிந்துவைத்
தொடுமார்பு துளைத்தழித்தார்
மேலான சிந்துவின் தந்தைசக் கரபாணி
விநாயகரை வேண்டி நின்றான்
விளங்குமர சியல்புரிய விட்டனர் அவனும் பின்
விநாயகரின் பாதம் சேர்ந்தான்

## (43) தூமாசுரன்

தோன்று புகழ்மசிபாதினி நகரம்தன்னை
தூமாசுரன் எனும்மன்னன் ஆண்டு வந்தான்
ஆன்றசிவ பக்திஅன் புடைமை சீலம்
அடியார்கள் தொண்டுபல அறிவும் மிக்கான்
ஈன்றமக வீரிருவர் மனைவி ஐவர்
எட்டமைச்சர் சூழஅர சாட்சி செய்தான்
சான்றவராம் பிருகுமுனி சபைக்கு வந்தார்
தன்பூர்வ ஜென்மத்தை உரைக்கக் கேட்டான்
முற்பிறப்பில் விகுதிப்பெயர் அரசனாகி
முனைந்தனைஇந் திரபதவி பெறுதற்காக
நற்பொலிவாய் நூறியா கம்மேற் கொண்டாய்
நலமொடஸ்வ மேதமெலாம்நிகழ்ந்து விட்டால்
பொற்புயரிந் திரபதவி போகுமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதநா ரதமுனிவர் தன்னைநாடி
அற்புதமாய் இந்திரனார் வேண்டிநிற்க
அந்தணனாய் நாரதனார் அவன்பால் சென்றார்
கிழவடிவில் வந்தவரை என்ன வேண்டும்
கேள்என்று தூமாசு ரன்வி னாவ
அழகியநின் மனைவியைத்தா நமது நாமம்
அந்தணர் சிவசன்மன் என்ற ழைப்பர்
பழகுகுடும் பம்நடத்த விரும்புகின்றேன்
பகருமிந்த வார்த்தைகேட் டரசன் நொந்தான்
வழமைதரு மனைவியைவிட் டினிது வேறு
வகைதருவேன் எனக்கூற முனிகோபித்து
சொன்னசொல்லைக் காப்பாற்ற முடியா தாய்நீ
தொடர்யாகம் அழியட்டும் அசுரனாகிப்
பின்னுபவம் பெற்றிடுவாய் எனச்சபித்துப்
பிராமணரும் மறைந்திட்டார் அவ்வாறாக
மன்னவனாய் வந்துதித்தாய் என்றுரைத்தார்

* * *

மங்களபா சினியைமா தவன்என்கின்ற
நன்னெறியோன் அரசாண்டு வந்தபோதில்
நயந்ததன் மனைவிதனை மலடிஎன்று
இகழ்ந்துரைக்க சுமுதையாம் அவன்மனைவி
இனியமகா விட்டுணுபால் தவங்கிடந்தாள்
பகவன்விநா யகப்பெருமான் விஷ்ணுவாகப்
பரிந்துவந்து எதுவேண்டும் என்றுகேட்க
அகமகிழத் தேவரீர் குமாரனாக
அவதரித்தென் துயர்தீர்ப்பீர் என்றாள் மாது
மிகமகிழ்ந்து சுமுதைகர்ப்ப வதியுமானாள்

* * *

வெற்றிபல தேசமெலாம் கொண்டுவந்த
தூமாசு ரன் செவியில் வானம்மீதே
சொன்னதோர் அசரீரி "தூமனேநீ
மாமன்னர் களைவெல்ல நினைத்தாய் உன்னை
வதைப்பதற்கு சுமேதையின் வயிற்றகத்தே
வாமபக வான்கருவாய் வளருகின்றான்"
வார்த்தையிதைக் கேட்டசுரன் மனம்பதைத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமமுறு கருவினைச் சிதைக்கும் வண்ணம்
சிறந்திடுவித் துருமன்முத லோரைவிட்டான்
சென்றவர்கள் சுமுதைமா தவனைக் கட்டில்
சேர்த்துக் கட்டி நடுவனத்தில் வந்தபோது
நின்ற விநா யகர்படைகள் துரத்தத் தூதர்
நெறிப்படுத்த முடியாமல் திரும்பி வந்தார்
அன்றுவித்து ருமன்கடமை தவறினானென்
றவன்தலையைக் கொய்வித்தான் தூமராசன்
மன்றிலுற்ற நல்லமைச்சன் கூறுகின்றான்
மன்னனே மாதவனும் சுமேதைமாதும்
நின்பகைவர் அல்லர்வந்து பிறக்கப்போகும்
நிகரில்லாக் குழந்தையே பகைவனாகும்
என்பதனை உணர்ந்துகொள் என்றுகூற
இசைந்துமன அமைதிகொண்டான் தூமன் பின்னர்
மன்பதைசூழ் குழந்தையாய் மகாகணேசன்
வந்து நின்றார் பெண்சுமுதை குழந்தை தன்னை
இன்பமிடும் "என்மகனே வந்தவன்நீ
யாரெ"ன்றாள் குழந்தைமுகம் மலர்ந்து சொல்வான்
அம்மாஎன் பெயர்பாலச் சந்திரன் ஆகும்
ஆற்றியநும் தவப்படிநின் மடியில் வந்தேன்
இம்மாற்றம் பற்பலவாய் பேசும்வேளை
எதிர்த்து வந்தான் படைகளுடன் தூமராசன்
பெம்மானாம் பாலனது வாயிலிருந்து
பெரும்புகையாய் எழுந்திடவே தூமன்மற்றோர்
வெம்மாயச் சாம்பராய் வெந்துபோனார்
விண்ணவரும் முனிவர்களும் குதூகலித்தார்
கருவிருந்த சுமுதைநா ரணரைப் பெற்றாள்
கதிகாட்டி நாரணர்வை குந்தம் சென்றார்
பெரும்புகழாய் அரசியற்றி மாதவன்தன்
பிரியமனை யாள்சுமுதை யுடனே மேலாம்
திருவருளைப் பெற்றார்கள் கதியுற்றார்கள்
சிற்பரனார் கணபதியும் * தூமத்தாலே
உருவழித்த வண்ணத்தால் தூமகே தென்(று)
உலகுமகிழ் பெயர்பெற்றார் வேதம்போற்ற

*தூமம் – புகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (44) கஜமுகா சுரன் வதம்

தேவர்களால் அரசுப்படை அழியக்கண்ட
சிறந்தகுரு சுக்கிரனார் விபுதைதன்னை
மேவுமுனி வசிட்டரது மரபில் வந்த
வேதமா கதமுனியைச் சேரச்சொன்னார்
தாவியிரு வரும்யானை வடிவெடுத்து
தந்தமகன் கஜமுகனும் புணர்ந்தபோதில்
பாவையவள் மயிர்க்காலில் தோற்றமான
படையினரும் பற்பலவாய்க் கொடுமை செய்தார்

***

பிறந்ததி லிருந்துபல விளையாடல் செய்குவான்
பெரியமரங் களைப்பிடுங்குவான்
பேராழி கலக்குவான் மலைகளை உடைத்துலகில்
பிறவிடங்களிற் போடுவான்
அறிந்தறிந் தமரர்களை அடித்துத்துரத்துவான்
அரனிடம் வரங்கள் பெற்றான்
அணிவளரும் மதங்கநகர் ஆக்குவித் தானதன்
அரசனாய் வீற்றிருந்தான்
நெறிதவறி விண்ணவர் நெடுமுச் செறிந்தனர்
நீலகண் டனிடம் சென்று
நிகழ்வதைக் கூறினர், நிருமலனும் உமையவளும்
நிறைந்த சித் திர கூடத்தில்
அறிவரிய பிரணவம் கண்டவடி வம்நோக்கி
ஆனைமுகனைப் பெற்றனர்
அருளும்பிர ணவமகனை அன்னைமகிழ்ந் தமுதூட்டி
அசுரகஜன் தன்னை மாய்த்து
வருகஎன் றருள்புரிய வள்ளல் பெரும் போர் செய்து
மாளாத அசுரன்தன்னை
வல்லசலன் முதுகேறி பூதகணம் வியந்தேத்த
மருப்பொன்றை ஒடித்துவீசி
மருவுமார் பைத்தாக்க மயங்கிய கஜாசுரன்
மடிந்திடுமவ் வேளையவனை
வலியமூ ஷிகமாக்கி வாகனம தாய்க்கொண்டு
வந்தனர் அந்தவேளை
பரமனுடன் அம்பிகையயில் சூதில் சாட்சியாய்ப்
பகர்ந்தபொய் காரணத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி சபித்திடக் கண்கள் குரு டாகிமலைப்
பாம்பாய் வனம் கிடந்த
அரிநாதன் மூஷிகரை வந்துதொழச் சாபமும்
அகன்று சுயவடி வெய்தினார்
அமரரெல் லாம் வந்து மூஷிகவா கனமூர்த்தி
அடிபரவி வேண்டுகின்றார்
கரிமுகா சூரன்முன்பு *தோபிகர ணம்போடக்
கட்டளை யிட்டான் அதனைநும்
கழலிணையில் போடுவோம் என்று வழிபட்டனர்
கண்ணன் தன் சாபம் நீத்துத்
தரிசனம் புரிந்திட்ட தலத்திலே விநாயகரைத்
தாபித்துப் பூசையாற்றி
சந்ததம் துதித்தனர் இமையவர்கள் சிறைநீங்கி
சந்தோஷ வாழ்வு பெற்றார்

## (45) மகோற்கடர்

கணபதியென் றுலகேத்தும் கண்ணுதலார் அவதாரம்
குணமுறக்கேட் டனையன்றே கோதில்மகோற் கடரென்ன
அணவலுறும் ஐயிரண்டாம் அவதார மிதுவிசைகூர்
குணமலிதெய் வதநெறியில் கொணமினான் முனிவீரர்கள்

மறையோன் ரௌத்திர கேதுவுக்கும் நன்
மனைவிசா ரதைக்குமிரு குழந்தைகள் பிறந்தனர்

ஒருவன் தேவ காந்தன் மற்றவன்
உயர்ந்த நராந்தகன் ஆகிய இருவரும்
நாரதர் சொற்படி நம்பனைக் குறித்து
நற்றவம் புரிந்தனர் அசுரரைப் போல
சீரிய வானையும் ஜெகத்தையும் ஆளும்
செவ்விய வரத்தைப் பெற்று மீண்டனர்
தேவ காந்தன் தேவுலகாண்டான்
ஜெகத்தையும் பாதா ளத்தையும் நராந்தகன்
அடக்கி யாண்டனன் அமரர் வருந்தினர்
அருள்முனி காசிபர் ஆலோ சனைப்படி
அவரின் பத்தினி அதிதிஎன்பாள்
சிவமகன் விநாயகர் சேவடி போற்றி

(* செவிகளை -இருகைகளால் மாறிப்பிடித்துக் கொண்டு இருந்தெழும்புதல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்தவ மாண்டுநூ றாற்றினள் அமரரும்
அவ்வாறாற்றினர் "அஞ்சிட வேண்டாம்
அதிதியின் மகனாய் அவதரித் துங்கள்
அவலம் தீர்ப்பேன்" என்றது வானொலி
கதிதரு மாயிரம் கைகளி னுடனே
கதிரவன் போலக் கணபதி யப்பன்
அதிதியின் முன்னே அருங்காட்சி தந்தார்
அவளும் வேண்டிட அருள் மகனானார்
மகோற்கடர் என்று வழங்கினர் நாமம்
மன்னன் நராந்தகன் மட்டிலாத் தீய
தகாத சொர்ப்பனம் கண்டு தவித்தான்
சோதிடர் மற்றையோர் சொற்படி விரசையாம்
மாதினை அனுப்பினர் மகோற்கடர் தன்னை
கொல்வதற் காக கொடூர விரசை
வல்ல குழந்தையை வந்து குடிசையில்
மெல்ல எடுத்து விழுங்கினள் உடனே
சொல்லொணா அக்கினிச் சூட்டால் வாடினாள்
தவித்தாள் விழுந்தாள் தந்திக் குழந்தை
அவளது வயிற்றைக் கால்கட்டை விரலால்
கீறிக் கிழித்து வெறியே வந்தார்
கோர விரசை குடல்கிழிந் திறந்தாள்

* * *

அதிதியும் மகோற்கடரும் சோமா வதிநதி
அரிய தீர்த்தம் ஆடும் போதில்
முதலை யொன்று குழந்தையைக் கௌவ
முதலையின் முதுகில் குழந்தை ஏறி
கரையில் வந்ததும் முதலை இறந்தது
உரைபுகல் சித்திரன் உருவங் காட்டினான்
ஐயயான் கந்தர்வன் அரிய என் மகனின்
ஆனந்த திருமணம் ஆற்றிய வேளை
மெய்யுணர் பிருகுவை மிகுவர வேற்காது
விட்டபிழையால் முதலையாகினேன்
தேவரீ ராலே சாபம் நீங்கினேன்
திருவடி சரணம் செல்கிறேன் விண்ணகம்
என்று மறைந்தான் இயம்பிடும் காசிபர்
ஒன்றிய குடிசையில் ஆஹா ஊஹு
தும்புரு என்ற கந்தர்வர் தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிர கங்களை அங்கே வைத்து
விருந்துண வுண்ணுமுன் நீராடச் சென்றனர்
அக்கணம் அவர்கள் பூசிக் கின்ற
விக்கிரகங்களை விநாயகர் மறைத்தனர்
கந்தர்வர் காசிபர் முனிவர்க்கு முறையிட
மகோற்கடர் தனது வாயுளே அவர்கள்
மகாஉரு வங்களும் மன்னுலோகங்களும்
பரமன் பார்வதியும்பயில் தெய்வ மனைத்தும்
தெரியக் கட்டினார் திகைத்தனர் கந்தர்வரும்
அன்னவர் விக்ரகம் ஐந்தையும் கொடுத்தார்
மன்னிய மகோற்கடர் மலரடி பணிந்தனர்
ஓங்கு மகோற்கடர் உபநய னத்தில்
உருமாறி வந்த ஐந்தசு ரர்களை
பெருமான் அரிசி ஐந்தை வீசிக்
கணப் போதினிலே அழிந்திடச் செய்தார்
இணைபிரியாத தந்தை தாயாகிய
பரமன் பார்வதி எண்டிசை அதிபர்
பரவிடு மேனையோர் பாலமகோற் கடர்
இணையடி வணங்கினர். பரமன் பார்வதி
பிநாகம் சூலம் மழுமதி துடிசடை
என்பன வழங்கினர் விஷ்ணு சக்கரம்,
இன்பப் பிரமன் கமண்டலம் தாமரை,
அம்பிகை சிங்க வாகனம், வருணன்
வெம்பிடு பாசம் சமுத்திர ராஜன்
முத்து மாலை கொடுத்தனர். மகேசன்-
தத்துவ விநாயகர்க்கு விரூ பாட்சன்
பரசுபா ணி,பாலச் சந்திரன்
அருளுடை இப்பெயர் அளித்தனர், ஆதி
சேடன் படுக்கையாய் பணிராச வாசன்
சூடுமிப் பெயருறச் சூழ்ந்தனன் இவ்விதம்
இந்திரன் மட்டும் இறுமாப்புடனே
அந்தக் குழந்தையை யான் வணங்குவதா?
வெறுத்த மனத்துடன் இருந்த அவனை,
பொறுத்த காசிபர் "மகனே இந்திரா
குழந்தைஎன்று குறிப்புண ராமல்
அழுந்திடு துயரில் அகப்பட் டிடாதே.
உன்தன் சகோதரன் எனநினையாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்றிய பரம்பொருள் எனத்துணிந் திடுவாய்"
என்றபோதிலே இந்திரன் சீறினான்
முன்றிகழ் வாயுவை தேயுவை அழைத்தான்
கணேசக் குழந்தையை கடிதே அழித்திடப்
பணித்தான் அண்டம் பலவும் சிதறின
எடுத்தார் மகோற்கடர் விஸ்வ ரூபத்தை
அடுத்த வடிவிலே அரியயன் விண்ணவர்
அண்டகோடிகள் அமரர்கள் முனிவர்கள்
கொண்டவைகுந்தம் கைலை யனைத்தும்
கண்டான் இந்திரன், கதித்த கணேசரின்
விசுபரூ பத்தில் இந்திர லோகமும்
அசைவின்றித் தானும் அடங்கிய தறிந்தான்
வெளிவர முடியாது விநாயகரைத் தொழ
ஒளிவளர் மகோற்கடர் உவந்தருள் புரிந்தார்
இந்திரன், கற்பகம் அங்குசம் வச்சிரம்
தந்தனன் இரண்டு பணிவிடைப் பெண்களை
மகோற்கடர் சேவைக்காய் வழங்கினன் வணங்கினன்.

## (46) மகோற்கடரும் காசிராசனும்

காசிராசன் தன்மகனின் திருமணத்திற்
கலந்துகொளக் காசிபரை அழைக்கவந்தார்
காசிபர் சாதுர்மாஸ்ய விரதம் நோற்கும்
காரணத்தால் மகோற்கடரை அனுப்பி வைத்தார்
மாசிலா இருவருமே போகும்போதில்
மன்னுதவத் *தூமாட்சன் தவத்தை மெச்சி
தேசுதரு சூரியனோர் ஆயுதத்தை
சேரவிட்டார் தூமாட்சன் கையில் நிற்க
வந்தமகோற் கடரதனைப் பிடித்தார் அஃதை
வல்லசுரன் மேல்விட்டார் அவனைக் கொன்றார்
அந்தமகோற் கடர்தம்மைக் கொல்வதற்காய்
அவன்மைந்தர் இருவர் வந்தார் அவர்கள் தம்மை
தந்திமுகன் மூச்சினால் அழித்துவிட்டார்
தன்சிற்றப் பன்மக்கள் உயிரை மாய்த்த
இந்தச்சிறு வனையழிப்பேன் என்றுகூறி
எதிர்ப்பதற்கு நராந்தகன் படையைவிட்டான்

* *நராந்தகனின் சிற்றப்பன்* * *பிரமதேவர் தருமதத்தராக அவதரித்தவர*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏகதந்தர் கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னவரை வரவேற்கும் புரோகிதர்போல்
மாயமாய் வந்தஇரு அசுரர்தம்மை
தன்னுடைய கையணைப்பால் அழித்துவிட்டார்
தாவுபுயற் காற்றான அசுரன்தன்னை
பன்னகமாம் ஆதிசேடன் வசமடக்கிப்
பழித்தழித்தார் நராந்தகன் படைகள் எல்லாம்
உன்னுபெரு மூச்சினால் அழித்துவிட்டார்
ஓங்குமரண் மனைவாசல் கல்லைப் போலக்
கிடந்தபெரு மசுரன்மேல் தேங்காய் கொண்டு
கிலுங்கஆ யிரத்தெட்டை எறிந்தபோதில்
திடமிழந்த அசுரன்சொந்த வடிவெடுத்தான்
செறிபரசி னாலவனை அழித்தார் ஐயன்

***

அரண்மனை வாயில் அணுகினர் பெருமான்
தரும ** தத்தராய்ச் சதுர்முகன் தோன்றிய
காலத் துதித்த சித்திபுத்தியை
கோலத் திருமணம் மகோற் கடர்க் கியற்ற
ஏற்பா டாகி இருந்த வேளை
பார்ப்போர் வியக்கும் பகவானைக் கொல்ல
காமன் குரோதன் கழுதை யுருவிலும்
கயவன் குண்டன் களிறு வடிவிலும்
தூமன் மனைவி மறைப் பெண்ணாகவும்
சூழ்ந்தனர் அவர்களைத் தொலைத்தனர் பெருமான்
மணப்பந் தலிலே மகோற்கடர் திருமணம்
அணி சிறப்பாக அமைந்தது நடந்தது

***

நராந் தகன் ஏவிய மூன்றசு ரர்குழு
நண்ணினர் காசி நகரம் தன்னில்
விதாரணன் காற்றாய் சுவால முகன்அனல்
வேகமாய் * வியாக்கிரன் மக்களை விழுங்கும்
வாயனாய் வந்து மட்டிலாக் கொடுமை
தேயம் நடுங்கச் செய்தனர் அங்கே
உயிர்பல மாண்டன. உடைந்தன கட்டிடம்
செயலறியாது திகைத்தனர் எங்கும்
மன்னன் மகோற்கடர் மலரடி பிடித்தான்

*வியாக்கிரமுகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா கலங்கேல் என்று மகோற்கடர்
கமண்டல நீரைக் கையில் எடுத்துக்
கடுகித் தெளித்தார் காசிமா நகரம்
முன்போல் ஆனது முட்டிய அசுரர்
மின்போல் அழிந்தனர் விழுங்கும சுரனின்
கீழ்வாய் ஏறி விஸ்வரூபமாய்
நீள்வடி வெடுத்து நிருத்தனம் புரிந்தார்
அசுரனும் மாண்டான் அவன்வாய் விழுங்கிய
திசை செறி மக்களும் சீருடன் வெளியே
வந்து மகிழ்ந்தனர். மகோற்கட ருக்கு
மாண்புயர் விருந்து வகுத்தான் மன்னன்
பட்டத் தரசி பலகா ரங்களை
முட்டிடப் பாத்திரம் முறை முறை வைத்தாள்
அரண்மனையில்லா அதிசயப் பட்சணம்
கரிமுகன் பாத்திரத் திருப்பதை மன்னன்
காரணம் கேட்டான் கனிந்த என் பக்தன்
சீராரும்புரு சுண்டியென் பான்வளர்
நேரார் சதுர்த்தி நிறைதினத் தின்று
தாராள மாகத் தந்தவை இவையென
அரசன் வியந்து அப்புரு சுண்டியை
அழைப்பது நன்றென ஆனைமுகனின்
அழைப்பென அரசனும் அங்கு சென்றழைத்தான்
மகோற்கடர் அழைக்கிறார் எனப்புரு சுண்டி
மகோற்கடர் தம்மை யானறி யேனென
வேந்தன் தலைமேல் விழிமுடச் சொலி
சாந்தக் கரத்தை தடவும் போதில்
மீண்டனன் காசி வேந்தன் தன்பதி
காண்டற் கரிய காட்சியைச் சொன்னான்
மீண்டும் மகோற்கடர் வேந்தனை யனுப்ப
பூண்ட தவத்துப் புருசுண்டி வந்தார்
புருசுண்டி முன்பு புத்தி சித்தியுடன்
கிரீடம் மிளிர பத்துக் கரமும்
ஆனைமுகமும் அணிதரச் சிங்க
வாகனந்தன்னில் மகோற்கடர் நின்றார்
புருசுண்டிக்கும் மகோற்கடருக்கும்
விருந்துதந் துகாசி வேந்தன் மகிழ்ந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (47) சோதிடன் வந்தான்

நராந்தகன் ஏவிய மேகனெனும் அசுரனும்
நண்ணினான் சோதிடன் போல்
நாடியுரை வார்த்தையால் காசிராசன் மிகவும்
நடுங்கினான், மகோற்கடரிடம்
சராசரம் போற்றிடும் தன்கழுத்து மாலையைச்
சார்ந்த சோ திடனுக்கிட்டார்
சாம்பராய் வெந்தனன். தவளையும் கிணறுமாய்
தனியுருவ அசுரன்தன்னை
கிணற்றுளே நின்றழித் தொழித்தனர், நராந்தகன்
கீர்த்திமிகு தம்பிமாராம்
கிளர்அந்த காசுரன் துங்கன்அம் பன்,கொடுமை
கிட்டும் இருள், மலை மின்னலாய்
கணக்கிலாத் துயர்புரியக் கண்டபெருமான் கடிது
கயவரை யழித்து வெட்டி
கருதுமவர் உடல்களைப் பெற்றதாய் பிரமரை
காணஅவள் முன்விழுத்த
பிரமரை வெகுண்டந்த மகோற்கடரை அழித்திடப்
பெருநஞ்சுப் பலகாரங்கள்
பெற்றதாய் அதிதிபோல் வந்தனள் மகோற்கடர்
பெரியபசி உடையரைப் போல்
பரிவாக வாங்கியதை உண்டனர், பிரமரை
பயில்நஞ்சால் உயிரை விட்டாள்
பாரினுள் நன்மக்கள் மகோற்கடார்க் கமுதுதர
பரமனிடம் வேண்டி நிற்க
அவரவர் வீட்டிலே மக்கள்முன் ஆங்காங்கே
ஐயனொரு தருணத்திலே
அமுதுண்டு காட்சி தந்தருள்மழை பொழிந்தனர்
அந்தணர் குலச் சுக்கிலர்
தவிட்டுப்பல காரத்தைத் தன்மனைவி வித்துருமை
சமைத்துவைத் துளம்கலங்க
தந்திமுகன் அந்தணர் நிலைகண்டார் அங்குபோய்த்
தவிட்டுப் பலகாரம் உண்டு
மேலான சௌபாக்கியம் தந்துபே ரின்பமும்
விதிமுறை யவர்க் களித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நராந்தகன் முடிவு

வீரன் நராந்தகன் படைகளொடு வந்தனன்
விநாயகரை எதிர்த்து நின்றான்
மினிர்காசி ராசனையும் மந்திரிகள் படைகளையும்
விரைந்து சிறை வைத்து வெகுண்டு
நேரார் மகோற்கடரை நோக்கிவர ஐங்கரன்
நெடுமாயிரம் வீரரை
நிகரிலாக் குரூரன் எனும் தலைவனுடன் அனுப்ப அவன்
நெஞ்சிலே கணநாதரை
வைத்துப் புறப்பட்டு மன்னுசிறைப் பட்டவரை
வயங்கொண்டு மீட்டுப் பின்பு
மகோற்கடர் தந்தகணை விட்டனன் நராந்தகன்
வான்சென்று பாதாளம் போய்
மெத்தக் களைத்துப் பின் மாயவடி வத்திலே
வீசினான் புயற் காற்றென
விநாயகர் வில்நாணை விரலினால் சுண்டினார்
வெகுமாய வடிவை விட்டான்
பின்னர்அக் கினியாகிப் பற்பல வடிவமாய்
பேரிடி முழக்க மழையாய்
பெருயுத்தம் புரிந்தனன் அவற்றினை மகோற்கடர்
பெருகுகணை யாலழித்தார்
"என்னைப் பணிந்திடில் உனக்குக்கெள ரவமாகும்"
இப்படி இன் னுரைபுகன்றார்.
ஏற்காத நராந்தகன், எண்ணிலாப் பாணங்கள்
எழில் மகோற் கடரில் விட்டான்
விட்டார் பிநாகத்தை அதனால் நராந்தகன்
விரிதலை யறுந்து விண்ணில்
விரவுதேவாந்தகன் முன்போய் விழுந்தது
மீண்டுமவன் தலை முளைத்து
நிட்டூரம் செய்தது முளைக்கமுளைக் கத்தலையை
நிகரிலா உலகமெங்கும்
நிகழ் அரசர் வாசலிலும் வீழ்த்தினார் எங்கணும்
நிறைவிஸ்வ ரூபமெடுத்து
காற்கட்டை விரலினால் மார்பைப் பிளந்தனர்
கடையவன் மாண்டொழிந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட விண்ணிலே தேவாந்த கன்முன்பு
விழுந்ததலை தன்னைக் கண்டு
சீற்றமொடு தூதரரைச் செய்தியறிந் திடும்வண்ணம்
சீக்கிரம் அனுப்பி வைத்தான்

## (48) தேவாந்தகன் வதம்

அறிந்தவுடன் மகோற்கடரை அழிப்பதற்காக
அணிபடைக ளுடன்தேவ காந்தன்வந்துற்றான்
செறிந்த படை கண்டவுடன் மகோற்கடர்தனது
தேவிபுத்தி யைப்பார்க்கத் தேவியும்பணிந்து
அட்டமா சித்திகளைச் சத்திகளாக்கி
அவரவர்க் கெண்ணிலா வீரர்களையுதவ
திட்டமாய் அவர்களும் போர்க்களம்புக்கு
சின்னாபின் னம்செய்து படைகளையழித்தார்
தேவகாந் தன்வந்து போரிலே தோன்ற
செறுவீர புத்தியோர் உக்கிரமிகுந்த
தேவிதனை அனுப்பினள். வீரர்பலர் சென்று
தீர்க்கதந்தன் தாலசங்கன் எக்குமன் மகண்டன்
காலாந்த கன்இரத்த கேசன்முதலோரை
கடிதிலே அழித்தனர். உக்கிரத் தேவி
தேவாந்த கனையும்படை வீரர்பலர்களையும்
செலுத்திய கணைகளையும் விழுங்கினாள். அசுரன்
வீரமா சக்தியின் மூக்குவழியாக
வெளிப்பட்டான் ஓடினான் வேதனையடைந்தான்
விண்ணுலகம் சென்று தன் தந்தையிடம் கூறி
விபரங் கேட் டொருயாகம் செய்தனன் யாகம்
துண்ணெனஓர் கருங்குதிரை தன்னையங் குதவ
துள்ளியதில் ஏறினான் போர்க்களம் புக்கான்
யாகத்தில் தோன்றிய பெண்பூத மொன்றும்
நடைபோட்டு வந்தது மோகனாஸ் திரத்தை
பாகமாய் விட்டதும் படைவீரரெல்லாம்
பரவச மடைந்தனர் தம்மை மறந்தார்கள்
பெண்பூதம் அவர்களைப் பிடித்து வாய்விழுங்க
பெருமான்தன் ஞானாஸ்தி ரத்தைவெளிவிட்டார்
பெண்பூதம் மயங்கியது புத்தியின் சக்தி
பிளந்ததே அவளைஇரு துண்டங்களாக
தேவகாந் தன்விட்ட தீக்கணைகளெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீச்சாம்ப ராகவே செய்தனர் பெருமான்
காவலுறு தண்டினால் கணபதியைப் புடைத்தான்
களிறுமுகம் கொண்டவனை ஒருதந்தத்தினாலே
குத்தினார் தேவகாந் தன்தலைவெடித்துக்
குலைந்ததே ஆயிரம் துகள்துகள்களாக
சித்திமிகு தேவாந் கன்தனதுசீவன்
ஸ்ரீமகோற் கடர்பாதம் சேர்ந்ததே சோதி
காசிரா சன்மகனின் கடிமணம் நிகழ்த்தி
காசிபரின் தலம்புக்கார் கணநாத வள்ளல்

## (49) வக்ரதுண்டர்

### 1. பிரமாசுரன்

செல்வமிகு பத்மகமாம் திருநகரப் பிரமாசுரன்
சிவனை நினைந்துதவம் செய்துபெற்றான் தீயவரம்
வல்லஎன்றன் கையெவர்மேல் வைத்தாலும் அவர்கள் எல்லாம்
வன்சாம்ப ராகவேண்டும் என்றவரம் பெற்றுவிட்டான்
தந்தவரம் பரீட்சிக்கச் சங்கரன்பால் கிட்டிவந்தான்
சங்கரனும் போய்மறைந்தான் சாரங்கன்மோகினியாய்
அங்குவந்த வேளையிலே அவள்மேலே மோகமுற்றான்
நடமாடும் ஒருவனையே நான்மணப்பேன் என்றதுமே
மடமாது மோகினிபோல் வல்லசுரன் தன்தலைமேல்
கைவைத்தாள் அவ்வளவில் கரும்சாம்ப ராயழிந்தான்
மைவந்த கண்டத்தரும் மனந்தெளிந்து வெளிவந்தார்.

### 2. துராசதன்

பிரமாசுரன் அழிந்தவிதம் கேள்விப்பட்டான் அவன் மைந்தன்
துராசதன் என்னுமவன் தொடுபழிக்குப் பழிவாங்க
எண்ணினான் தவமியற்றி எந்தைசிவ னாரிடத்தே
எண்ணும் வரம்வாங்கி முகுந்தமென்ற பட்டினத்தில்
அரசாட்சி புரியலுற்றான் அடக்கினான் மூவுலகும்
உரவுடைய தேவரெல்லாம் ஒளித்தார்போய்க் காசியிலே
துராசதன் காசிக்குத் தொடர்ந்து சென்றான். அங்கிருந்து
பரமனுடன் கேதாரம் பாய்ந்துசென்றார் தேவரெலாம்
காசித்தலம் வீற்றிருந்து துராசதன் ஆட்சிசெய்தான்
கனத்தஅவிப் பாகத்தைத் தேவருக்குக் கொடுக்காமல்
மாசிலா முனிவர்களை வழிவழியே துரத்திவிட்டான்
ஓடோடித் தேவரெலாம் உரைத்தனரே பிரமனிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையவளைப் பங்கயனும் உம்பரும் வேண்டலுற்றார்
துரசதன் தனையழிக்கச் சுதன்ஒருவன் தருகஎன்றான்
சுரரேநும் துயர்தீர்க்க சுதன்வருவன் என்றுரைத்தாள்
தேவர்களின் துயர்கேட்டுச் சிவசக்தி மனம்நொந்து
கோபமுற்றாள் அத்தருணம் கோலமுகத் தேயிருந்து
*ஐந்துமுகம்* பத்துக்கரம் ஆயுதங்கள் பலகொண்டு
வந்துநின்றார் விநாயகனார் வந்தவரை வக்ரதுண்டர்
என்றுபெயர் இட்டழைத்தாள் இமையோர்கள் வேண்டிநின்றார்
ஒன்றுக்கும் அஞ்சாதீர் உங்கள்துயர் தீர்ப்பனென்றார்
படையணிகள் சூழ்ந்துவர பரமன்மகன் புறப்பட்டார்
கடையவனே என்னப்பன் கனத்தவரம் தந்தமையால்
அளவிலாக் கொடுஞ்செயல்கள் ஆற்றுகின்றாய் அவைவிடுத்து
உளமுருகி எனைப்பணிந்தால் உனக்குநலம் செய்திடுவேன்
இவ்வுரையை மகோற்கடர்நின் றியம்பவெகுண் டான்அசுரன்
அவ்விடத்தே ஆயிரமா யிரபாணம் விட்டிடவே
அவற்றினையெல் லாம் தடுத்தார் அந்தத்தில் மகாஉருவாய்
அவன்தலையில் திருவடியை வைத்தனர் அஞ்ஞானம்போய்
நல்லுணர்வு பெற்றதுமே ஞானவக்ர துண்டர்தமை
வல்லவனே நினைமறவா வரமருள வேண்டுமென்றான்
துராசதனே நீ காசித் தொல்பதியின் மேற்றிசையில்
பராவுமென தடியிருந்து பாவிகளைத் தண்டிக்கும்
பெரும் பணியைச் செய்க எனப் பெருமான் அருள்புரிந்தார்
வரங்கள் கொடுக்கின்ற மகோற்கடர் காசியிலே
உரங்கொள் உடுண்டி ஓங்குபெய ருடனமர்ந்தார்
விரும்பு சுவா யம்பு என்பான் மேதினியை ஆண்டபின்னே
அறுபதாயிரம் மாண்டாய் அவனியிலே மழையில்லா
நெறியை உணர்பிரமன் நிகரில்லா மன்னவனை
நாட்டைஅர சாள்வதற்கு நானிலத்தில் எங்கணுமே
நாட்டமிகத் தேடிச்சென்ற நற்கதையை இனிக்காண்போம்

## (50) திவோதாசன்

பங்கயன் காசிவந்து பரமனை வேண்டிநின்று
பயில்தவம் இயற்றுகின்ற ரிபுஞ்சயன் தன்னைநோக்கி
பொங்கிய காசிதன்னை புரியர சாட்சி செய்து
புவனியைக் குளிரவைக்கும் புண்ணியம் புரியவாராய்
எனஅயன் கேட்டபோதில் ஏற்கிறேன் ஆனால் காசி
எழிற்பதி தன்னில்தேவர் எவருமே இருக்கொணாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனையன கேட்டான் மன்னன் இதன்படி முறைமைகேட்க
விசுவநாத ரின்பால் வேதன் விளம்பலும் காசிநாதர்
இசைந்திடு விண்ணோரோடும் எழுந்து மந்திரகிரிக்கு
மேவினார் முனிமரீசி மிகுவரவேற் பளித்தார்
தேவர்கள் காசிவந்து தெரிசிக்க முடியாத்தன்மை
குருவியா ழனுக்குச் சொல்லிக் கொண்டனர் கவலை வெள்ளம்.
ரிபுஞ்சயன் காசிவந்து சீராதி சேடன் பெற்ற
அங்கமோ கினியைவேட்டுத் தனியரசாட்சி செய்தான்
முறைமுறை யரசுசெய்து முதுநிதி செழிப்புக் கொள்ளும்
நெறியர சாட்சி செய்யும் நிலைமையிற் பிழை ஏற்பட்டால்
காசியை விட்டன்னானைக் கலைக்கலாம் அதுவரைக்கும்
ஈசனின் வரத்தின் வண்ணம் இராச்சியம் புரிவன் என்று
வியாழனும் விண்ணவர்க்கு விளம்பத் தேவேந்திரன்சீத்
தயாமிகு காசிதன்னில் தாவுமக் கினியைப் போகக்
கூடாதென் றாணையிட்டான் குலைந்தது முனிவர் செய்யும்
ஈடேறு யாகபூசை இவ்விதம் நிகழ்ந்த எல்லாம்
அமரரின் செயலே என்றான் ஆறுத லனைவோருக்கும்
நமதுநல் வரத்தினாலே நல்குவேன் என்று சொன்னான்
சூரியன் தீபோல்மற்றும் சொல்லிய வடிவமாகிக்
காரியம் குறையாவண்ணம் காசியை ஆண்டுவந்தான்
அங்கமோ கினியை விவாகம் புரிந்தகா ரணத்தாலே
பொங்குதிவோ தாசன்நாமம் பொருந்திய புகழைப்பெற்றான்
எண்பதினா யிரம்வருடம் இனிதர சாட்சிசெய்தான்
கண்கலங்கித் தேவர்கள் கைலாய பதியிடம்போய்
காசி சென்று வணங்குதற்குக் கடிதருள் செய்கஎன்றார்
ஈசன்பல தேவர்களை ஏவிஅர சைக்குழப்பப்
பற்பலயோ சனைகள்சொன்னார் பலிக்காத விதங்கண்டாங்கு
நற்பரம யோகிகளை நம்பனங்கே அனுப்பிவைத்தார்
திவோதாசன் அரசியலை செயலிழக்கச் செய்வதற்காய்
ஆவனஎல் லாம்செய்தும் அவையொன்றும் பலிக்கவில்லை
சிவபெருமான் விநாயகரைச் சென்றுவரப் பணித்ததுமே
அவருமொரு சிறுவனைப்போல் அறிவான சோதிடன்போல்
காசிக்குள் ளேநுழைந்தார் காசியுள்ள மக்களெல்லாம்
பேசுபுகழ் சொல்லிச் சொல்லி பிரியமுடன் பலன்கேட்டனர்
எம்பெருமான் காசிமக்கள் ஏங்கும்படி கனவுகாட்டி
தம்பலனைச் சொல்லிக்காசி தலமிருக்கக் கூடாதென
ஏராளம் மக்கள்பலர் ஏகினார் காசிவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரான காசிநகர் பெருமழிவு கொள்ளுமெனச்
சோதிடனார் சொல்லியதும் துயரமிகக் கொண்டார்கள்
ஆதலினால் காசிநகர் அருட்பொலிவு குன்றியது
நாரணனும் லட்சுமியும் நகருக்குள் ளேசென்று
சீரழிவை மக்களெல்லாம் செய்யும்வழி காட்டினார்கள் பதினேழாம்
நாள்விஷ்ணு பட்டினத்தைச் சென்றடைந்தார்
அதிபதியாம் திவோதாசன் அவர்களைத் தோத்திரிக்க
நாரணன் தம்முடைய நல்வடிவைக் காட்டி அங்கே
வாரணனார் சோதிடனாய் வந்தவகை யைக்கூறி
நல்வார்த்தை கூறியதும் ஞானம்பெற்ற திவோதாசன்
பல்வரிசைகொண்டு காசிப் பரமனையும் தேவரையும்
வரவேற்றுப் பூசித்தான் வகுத்தான் புதுக்கோயில்
மறையோங்கப் பதிட்டைசெய்தான் மலரடியில் லயித்துவிட்டான்
தன்னாட்சி யைத்தனது தனயனிடம் ஒப்படைத்துப்
பொன்னார் சிவலிங்கம் புகுந்தைக் கியப்பட்டான்

## (51) வல்லபை திருமணம்

பிரம்மதேவர் தன்மகன் மரீசிமுனிவருக்கு – யாவர்க்கும்
தலைவர் விநாயகர் எனக் கூறல்

அவன்பரஞ் சோதி தத்துவாதீதன்
அருவினன் அனகநற் குணத்தோன்
சிவன்பரத்தினுக்கும் பரன்வெகுரூபி
திகழ்பர தத்துவன் ஈசன்
தவறில் நிர்க் குணத்தன் சர்வகல்யாணன்
தமக்குமோர் காரணன்என்ன
எவர்களும் துதிக்கப் படுவர் அக்கணேசர்
எங்களைத் தினம்புரக் கின்றார் (விபு)

மரீசிமுனி விநாயகரை மனத்துவைத்துத்
தவமிருந்தார் நெடிதுகாலம்
வந்தனரே எம்பெருமான் என்னவரம்
வேண்டுமென்று கேட்டபோது
பிரணவனே உமைஎனக்கு மகனாக
வரவேண்டும் தேவரீர்அப்
பெண்ணைமணம் புரிந்துலகில் நலம்பெருக
அருள்புரிய வேண்டுமென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே தந்தேனென் றானைமுகன்
மறைந்தபின்- மரீசிசென்று
அயனுலகில் சிறப்படைந்தார். அயன்தேவ
வல்லியெனும் பெண்ணையாக்கி
செவ்விதே மரீசிக்கு மணமியற்றி
இன்பமுற வாழவைத்தார்
திருக்கயிலைத் தலத்தொருநாள் உமையுடனே
சிவனிருக்கும் வேளைதன்னில்
ஐயனே அண்டங்கள் இயங்கும்வகை
எனக்கறிய இயம்புகென்று
அம்பிகையாள் கேட்டபொழு தப்பனுரைப் பார்
"உமையே அண்டமெல்லாம்
உய்யும்வகை உரைக்கின்றேன்" நிமித்தம்துணை
உபாதானம் என்னும் மூன்றால்
உலகமெலாம் நடக்கின்றன நிமித்தம்நான்
துணைசக்தி உபாதானம் மகா
மாயையென அறிதி"என உமையெழுந்தாள்
சக்திநான் அன்றோசாமி
மருவும் உடல் வடிவமெலாம் நானேதான்
என்னாலே தான் எல்லாமே
ஆயசெயல் நடப்பதென மிடுக்குடனே
அம்பிகையார் உரைத்தவேளை
ஆதிசக்தி அனைத்தும்யான் என்பதனை
அறியாமல் அலட்டுகின்றாய்
"பார்" இன்னே என்றுலக சக்திகளை
எம்பெருமான் அடக்கிக்கொள்ள
பகிரண்டம் செயலற்ற நிலைகண்டு
பார்வதியார் நடுநடுங்கி
பேர்கொண்ட தங்கள் செயல் அறியாமற்
பிதற்றிவிட்டேன் பிழைபொறுத்து
பெருமானே அருள்புரிக எனவேண்டி
உலகமெலாம் மிளிரவைத்தாள்
இப்பழிக்கு யான்செய்ய வேண்டியதைச்
சொல்கஎன உமையாள் கேட்க
இயற்றுதவ மரீசிக்கு மகளாகு வாய்யானும்
விநாயகன் போல்
ஒப்புதிரு மணம்புரிவேன் எனப்புகல
இறைவியமு னாதீரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்குமலர் தாமரையாய்ச் சங்காகிப்
பெண்குழந்தை உருவங்கொண்டாள்
மரீசியதைக் கண்டெடுத்து வல்லபையாம்
பெயர்வைத்து வளர்த்தபோதில்
மகாதவங்கள் புரிதலுற்றாள். வாரணனும்
தந்தையைப் பணிந்துவேண்ட
திருமறையோன் வடிவிலே வல்லபையின்
ஆச்சிரமம் சேர்ந்து தன்னை
சேருவகை வேண்டுகையில் வல்லபையாள்
கோபிக்கக் கோலம்மாறி
கணேசர்போல் நின்றவரை வழிபட்டாள்
மணம்புரியச் சம்மதித்தாள்
கன்னியே உனக்கென்ன வரம்வேண்டும்
கேளென்ன "உலகமீன்ற
கணேசாஉன் வலப்புறத்தில் என்னாளும்
இருக்கவரம் வேண்டு"மென்றாள்
கடிமணத்துக் கமரரெலாம் வந்தனர்சீர்
சிறப்பினுடன் வல்லபைக்கும்
விநாயகர்க்கும் மணம்நிகழ்த்தி வரங்கள்மிக
வானோர்கள் பெற்றுமீண்டார்
விஷ்ணுமனம் நினைந்தேத்திப் பெருமானே
விஸ்வரூ பத்தைக் காட்டி
மனோலயமெய்ஞ் ஞானோப தேசமதைப்
புரிகவென வேண்டிஅன்பு
மக்களாம் மோதை,பிர மோதை,சும
தை,சுந்தரி மனோரமை,மங்
கலை,மோகினி, காந்தை, சாரு காசை, சுமந்
திமை,நந்தினி காகத்தையைப்
பக்குவமாய் ஏற்றருள வேண்டுமெனக்
கணபதிக்குக் கையளித்தார்
பகவானும் விஷ்ணுவுக் குபதேசம்
பண்ணினார் விஷ்ணுமூர்த்தி
பிரமனுக் குபதேசம் செய்தனர்
பிரமன்வி யாசர்க்குரைத்தார்
பின்னர்வியா சர்சூத முனிக்குரைக்க
அவர்சவுனா தியர்க்குரைத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூதர்உபதேசம்

உருவம் அருவம் உபயமென உரைக்கப்படு மூவர்கள் தமக்கும்
கருவி கரணமுதற் பலவுங்கண்டு புரந்துதுடைத்து மறைத்
தருளு முதலாய் அவருளமும் அறியாப்பொருளாய்த் தனதருளால்
மருவு மொழியாய் எங்குநிறை வாய்மை எதுவோ அதுபிரம்மம்

அந்தப் பிரமம் எரிஇருப்பை அடுத்தாங் கறிவைத் தொடர்ந்துருகொள்
இந்தஉலகில் விநாயகரென் றிணையில் பெயர்தன் உண்மையினைப்
பந்தமகன்றோர் தெரிந்துகொளப் பரிந்துவிளையாட டயர்ந்திருந்து
முந்துமலத்தா னொருவனுமம் முதல்வ ரியற்கை யுணர்ந்திலரால்

பாவ புண்ணியப் பயத்தினைப் பரமனுக் களித்தத்
தேவனற் பதங் கருதிய செல்வரே பொறியின்
மேவலற்றுறு பந்தமாகிய வினைநீங்கித்
தாவலின்ப மாகியதனிப் பரத்தினைச் சார்வார்

அன்னதாகையால் மனம்பொறி வழிவிடாதடக்கி
என்னையா ளுடைக் கணேசனார் இருபதத் தென்றும்
தன்னதார்வ மெலாம் தரிப்பித்தலே வேண்டும்
இன்னதாம் வழி பாட்டினால் இருஞ்சுக மாமே

தெய்வம் யாதனைச் சேர்ந்தெவர் போற்றினுமந்தத்
தெய்வமாயி ருந்தவர்களுள் வரங்களைச் செறிக்கும்
தெய்வம் தேர்வரும் பிரமமாகிய விநாயகனே
தெய்வம் யாவையும் வழிபடும் தேவனும் அவனே

## (52) சோமகாந்தன் முத்தி

விதிப்பிரமன் வியாசருக்கு விளம்புவிநா யகர்கதையை
துதிக்கும் பிருகுமுனி சோமகாந் தனுக்குரைத்து
நித்தியமும் விநாயகரை நீபூசை செய்யென்றார்
பத்தியுடன் சோமகாந்தன் பல்லாண்டு பூசைசெய்தான்
வாழ்க்கையின் பூர்த்தியிலே வாரணரின் புட்பரதம்
மேற்றேவர் கொண்டுவந்தார் வேந்தன்சோ மகாந்தனுடன்
மனைவிசுதன் மைஅமைச்சர் மகிழ்ந்துரத மேறிவிட்டார்
மனைவிதன் மகன்ஏம கண்டனையும் கூட்டிச்செல்ல
வேண்டுமென வேண்டிநின்றாள் வேந்தனுமோ மறுத்துவிட்டான்
நீண்டவிநா யகர்சரிதம் நீங்கள்கேட்ட நற்பலனால்
இவர்கட் கருள்புரிந்தால் ஏமகண்டன் யாவரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்க லாமென்றார் அங்குநின்ற தேவகணம்
அப்படியே சோமகாந்தன் அருள்புரிய, தேவநகர்
மெய்ப்புமிகு மக்களுடன் வேந்தன்ஏம கண்டன்எல்லாம்
ஞானவி நாயகரின் நல்லுலகம் சேர்ந்தார்கள்
வானவர்கள் வரவேற்க மகாசோதி வடிவானார்

## (53) விநாயக புராணம் கேட்ட பலன்

சூதமா முனிவர் சொல்லிய விநாயகர்
துதிக்கதை யாவும் தொழுநைமி சாரண்ய
முனிவர்கள் கேட்டு முகமலர்ந் திருக்கையில்
இனியஇக் கதைகேட் டிருந்தோர் பெறும்பயன்
யாவும் உரைப்பேன் நயக்குதிர் எனவே
மேவிய சூதர் வியந்துரைக் கின்றார்
ஐங்கரன் கணபதி அருட்புரா ணத்தை
உய்வழி உணர்ந்தோர் பின்வரும் குற்றம்
செய்தா ரேனும் சேர்பழி ஓடும்
செய்ந்நன்றி மறத்தல் சீவனை வருத்தல்
தருமம் யாகம் தானம் தவங்கள்
புரியா திருத்தல் பூமி விண் நீர்
வாயு தேயு மறையோர் தெய்வம்
குருபசு சூரியன் குமுத நண்பன்
வருமிவை எள்ளி வசை மிகச் செய்தல்
பிறபெண் புணர்தல் பொய்கொலை களவு
கரவொடு சூது காமம் கள்ளு
முதலிய புரிதல் முறப்படு பிதுரர்
மதிதரும் மாதுர் மற்றையோர் கடன்கள்
செய்யா திருத்தல் தீநிலை யோர்க்கு
மெய்யார் தீட்சை விளங்கக் கொடுத்தல்
தெய்வம் தொழாமை திருவளர் தொண்டரை
வைதல் ஆலய வரம்பினை மறுத்தல்
முதியோர் பெண்கள் முதுகலை அறிஞர்
கதிதரு குரு தாய் தந்தையை இகழ்தல்
இத்தகை பாவம் இயற்றிய எவர்களும்
மத்தள வயிறன் மகாகதை கேட்டுச்
சித்தத் துணர்ந்திடில் செப்பிய பழியெலாம்
சூரியன் கண்ட துளிப்பனி போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர்கணத் தழியும் உத்தமன் கணேசரின்
தாண்மலர் நீழல் தங்குவ ரினிதே
மீண்டும் பிறக்கா வீடு வாழ் வாரே

முழுமுதற் கடவுளாய முக்கணன் கணேச வேளின்
விழுமிய புராணம் கேட்டோர் மெய்யுணர்ந் தோதிநித்தம்
தொழுதவர் அன்னான் நாமம் சொன்னவர் தொண்டர் எல்லாம்
எழுவினை யொழிந்தானந்த இகபர சுகம்காண்பாரே

---

பொங்குசீர் முனிவர் சூதர் புகன்றதும் வானோர் மற்றோர்
தங்களின் குறைகள்நீங்கி சாந்திவாழ் வுற்றார் வேள்வி
தங்கிய கருமமாற்றி சார்முனி வோர்கள் மீண்டார்
மங்களம் மலர்ந்ததெங்கும் மாநிலம் செழித்த தோங்கி

–சுபம்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பிள்ளையாரின் 32 தோற்றங்கள்

**1~ பால கணபதி :**

நான்கு திருக்கரங்களும் யானை முகமும் உடையவர் உதிக்கின்ற செங்கதிர்போன்ற நிறம் உடையவர். குழந்தைத் திருமேனியுடையவர். வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு இவற்றை நான்கு திருக்கரங்களிலும் தாங்கியவர்.இவரது துதிக்கையில் மோதகம் விளங்கும்.

**2~ தருண கணபதி :**

எட்டுத் திருக்கரங்களையும் யானை முகத்தையும் உடையவர் கைகளில் பாசம், அங்குசம் பணியாரமாகிய மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த தன் கொம்பு, நெற்கதிர் , கரும்பின் துண்டு இவைகளையுடையர். நண்பகல் தோன்றுகின்ற சூரியனைப் போன்ற நல்ல சிவந்த திருமேனி படைத்தவர்.

**3~ பக்தி கணபதி :**

சரத்காலத்து நிறைமதிபேன்ற வெண்ணிறம் படைத்தவராக தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், பாயஸ பாத்திரம் இவற்றை நான்கு திருக்கரங்களில் ஏந்தி, யானைமுகமும் உடையவராக விளங்குபவர்.

**4~ வீர கணபதி :**

வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகிய பதினாறையும் தாங்கிய பதினாறு திருக்கரங்களையும் சிவந்த திருமேனியையும் சிறிது சினந்த திருமுகத்தையும் உடையவர்.

**5~ சத்தி கணபதி :**

செவ்வந்தி வானம் போன்ற நிறமுடையவராக, பச்சைநிற மேனியளாகிய தேவியைத் தழுவிக்கொண்டு இருப்பவர். ஒருவருக்கு ஒருவர் இடுப்பில் கை கொடுத்து தழுவிக்கொண்டிருப்பது தனியழகு. பாசம் பூமாலை இவற்றைத் தாங்கிய திருக்கரத்துடன் அஞ்சலென்கிற அபயகரமும் உடையவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6~ துவிஜ கணபதி :

நான்கு திருக்கரங்களிலும்,முறையே புஸ்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம், இவற்றைத் தரித்தவர். மின்னற் கொடிபோல விளங்குகின்ற கைவளையல்களை உடையவர். சந்திரன் போல வெண்மையானவர். நான்கு யானைமுகங்களை உடையவர்.

**7~ சித்தி கணபதி:**

மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு, இவற்றைத் துதிக்கையுள்பட ஐந்து கரங்களில் தரித்தவரும் பொன்கலந்த பசுமை நிறமுடையவருமாக விளங்குபவர்.

**8~ உச்சிஷ்ட கணபதி:**

நீலோற்பலம் மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை, இவற்றைத் தரித்தவரும்,நீலத்திருமேனிஉடையவருமாக விளங்குபவர்

**வேறு வகைகள்:** பெண்ணின் யோனியில் துதிக்கையை வைத்தவராக காமமோதிடராக விளங்குாவர். நீலவர்ணம் உடையவர்.

**9~ விக்ன கணபதி :**

சங்கு, கரும்புவில், புஸ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு மாலை, பூங்கொத்து. பாணம் முதலியவற்றேடு கூடிய திருக்கரங்களை உடையவரும் ஆபரணங்களை நிரம்பத்தரித்தவரும் பொன் மேனியருமாக விளங்குபவர்.

**10~ சஷிப்ர கணபதி:**

தந்தம், கற்பகக்கொடி, பாசம், ரத்னகும்பம், அங்குசம், இவற்றை ஏதியவர், செவ்வரத்தம்பூப்போன்ற அழகிய மேனியர். செந்நிறமனவர்.

**11~ஏரம்ப கணபதி:**

அபயம் வரதமாகிய கைகளையுடையவர், பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம், இவற்றைத் தாங்கியவர். சிங்கவாகனத்தில் ஏறியவர். யானை முகம் ஐந்து உடையவர். பசுமை கலந்த கருமை நிறம் உடையவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12- லட்சுமி கணபதி

எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக்கொடி, கட்கம், வரதம் இவற்றையுடையவர். அமுதப்பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப்பூவை ஏந்திய இருபெருந் தோவிமார்களோடு திகழுபவர்.

## 13- மஹா கணபதி

மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோத்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம், இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர்போன்ற நிறம் முடையவர். முக்கண்ணர், பிறைமுடியர், மடிமீது எழுந்தருளியிருக்கின்ற - தாமரையைஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப் பெற்றவர்.

## 14- விஜய கணபதி

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம், இவைகளைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.

## 15- நிருத்த கணபதி :

இவர் கூத்தாடும் பிள்ளையார் எனப் பெறுவர். மோதிரங் களணிந்த விரல்களையுடைய கைகளால் பாசம், அங்குசம், அபூபம், கோடரி, தந்தம், இவைகளைத் தரித்தவர். பொன்போன்றநிறமுடைய திருமேனியர். கற்பக விருட்சத்தினடியில் எழுந்தருளியிருப்பவர்.

## 16-ஊர்த்துவ கணபதி:

நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்புவில், பாணம், தந்தம் இவற்றையுடையவர். பொன்வண்ணர். பச்சைநிற மேனியோடு விளங்குகின்ற தேவியைத் தழுவியிருப்பவர்.

## 17- ஏகாட்சர கணபதி:

செந்நிறமானவர், செம்பட்டாடையர், செம்மலர் மாலையர்., பிறைமுடியர், முக்கண்ணர், குறுந்தாளர், குறுங்கையர், மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம் இவைதாங்கிய கரங்களையுடையவர். யானை முகவர், பதுமாசனத்திருப்பவர், பெருச்சாளி வாகனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**18- வரகணபதி:**

செவ்வண்ணர், யானைமுகவர், முக்கண்ணர், பாசம், அங்குசங்களைத் தரித்தவர். தேன் நிறைந்த கபாலத்தை உடையவர். பிறைமுடியர்.

**19-திரயாக்ஷர கணபதி:**

அசைகின்ற செவிகளாகிய சாமரையணிந்தவர். பொன்னிறமானவர், நான்கு கரங்களை உடையவர், பாயம், அங்குசம், தந்தம், மாம்பழம், இவற்றைத் தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

**20- க்ஷிப்பிரசாத கணபதி:**

பாசம், அங்குசம், கல்பலதை, மாதுளம்பழம், தாமரை, தருப்பை, விஷ்டரம் இவற்றைத்தரித்தவர். திருவாரணங்களை அணிந்தவர். பேழை வயிற்றையுடையவர்.

**21- ஹரித்திரா கணபதி :**

மஞ்சள் நிறமானவர் நான்கு கரங்களையுடையவர். அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம், இவற்றைத் தரித்திருப்பவர். பத்தர்கட்கு அபயம்மளிப்பவர்.

**22- ஏகதந்த கணபதி:**

பேழை வயிற்றுடன் நீல மேனியர் கோடரி, அட்சமாலை, லட்டு, தந்தம் இவற்றையுடையவர்.

**23- சிருஷ்டி கணபதி:**

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம், இவற்றைக் கரங்களில் ஏந்தியவர், பெருச்சாளி வாகனத்தையுடையவர். சிவந்த திருமேனியர்.

**24- உத்தண்ட கணபதி:**

நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்புவில், ரத்னகலசம் பாசம், நெற்கதிர், மாலை இவற்றையேந்திய பத்துக் கைகளை உடையவர். அழகிய தாமரைப்பூவை ஏந்திய, பச்சைமேனியளாகிய தேவியால் தழுவப்பெற்றவர் சிவந்த மேனியுடையவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**25~ ரணமோசன கணபதி:**

பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் இவற்றைத் தரித்தவர். வெண்பளிங்கு போன்ற மேனியர். செந்நிறப்பட்டாடையுடுத்தியவர்.

**26~ துண்டி கணபதி:**

அட்சமாலை, கோடரி, ரத்னகலசம், தந்தம், இவற்றை ஏந்தியவர்.

**27 ~ துவிமுக கணபதி:**

தந்தம், பாசம், அங்குசம், ரத்தினபாத்திரம், இவற்றை கையில் ஏந்தியவர். பசு நிலமேனியர் செம்பட்டாடையும் ரத்தின கிரீடமும் அணிந்தவர். இருமுகம் உடையவர்.

**28 ~மும்முக கணபதி:**

வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம், இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுதகலசம், அபயம், இவற்றை உடையவர். பொற்றாமரையாசனத்தின் நடுப் பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புரசம்பூ போன்ற சிவந்த நிறம் உடையவர்.

**29 ~சிங்க கணபதி:**

வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம், இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்னகலசம், பூங்கொத்து, அபயம், இவை அமைந்த இடது கைகளை உடையவர். வெண்ணிறமான மேனியர். யானைமுகவர், சிங்கவாகனத்தில் எழுந்தருளியிருப்பவர்.

**30 ~யோக கணபதி:**

யோக நிலையில், யோக பட்டம் தரித்துக்கொண்டு இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு இந்திர நீலம் போன்ற ஆடையை உடுத்திக் கொண்டு பாசம், அஷமாலை, யோக தண்டம், கரும்பு இவற்றை ஏந்தி யிருப்பவர்,

**31 ~ துர்க்கா கணபதி:**

சுட்ட பசும்பொன்னிறம், எட்டுக்கை, பெரியமேனி, அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம், இவைகளை, வலதுகைகளில்ஏந்தியவர். பாசம், வில், கொடி, நாவற்பழம், இவைகளை இடது கைகளில் உடையவர். செந்நிற ஆடையர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**32 –சங்கடஹர கணபதி:**

இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு இடப்பாகத் தொடையில் அம்மையை உடையவர். அம்மை பசியமேனியளாக நீலப்பூவை ஏந்தியவளாக இருப்பள். வலதுகையில் அங்குசம், வரதம், உடையவர். இடது கையில் பாசம், பாயசபாத்திரம் ஏந்தியவர்: செந்தாமரை பீடத்தில் நிற்பவர். நீலநிறமான ஆடையணிந்தவர்.

# பிள்ளையாரின் ஆயுதங்கள்

1– பாசம்: இது கயிறு பகைவர்கள் கையையும். கால்களையும் கட்டப் பயன்படும் ஒருகயிறு அல்லது இரண்டு மூன்று கயிறுகள் சேர்த்து எளிதில் அவிழ்க்கும் சுருக்குமுடிச்சாக இடப்பட்டிருக்கும் சுருக்கிடாமல் வளையமாகவும் இருக்கும். விநாயகருக்குச் சிறப்பான கருவி நாகமே பாசமாக அமைவதும் உண்டு. இதனை நாகபாசம் என்பார்கள். இதன் வகைகள் நான்கு.

2– அங்குசம்: இது யானையை அடக்கப்பயன்படுவது. இரும்பாற் செய்யப்பெற்ற வளைந்த மூக்கும் குத்தியடக்கக்கூடிய ஒருகூரிய நேரான பகுதியும் உடையது. நீளமான கழிகளிற் செருகப்பட்டிருக்கும். யானைப்பாகன் இதனை யானைக்காதிலே மாட்டித் தொங்கவிட்டிருப்பான். இதில் இரண்டு உருவங்கள் உள்ளன. விநாயகருக்கு உரிய சிறப்புக்கருவிகளில் இதுவும் ஒன்று.

3 – தந்தம்: ஒடிந்த யானைக் கொம்பு

4 – வேதாளம்: தசை நாரில்லாத அச்சமும் அருவெறுப்புந் தரத்தக்க பூதவடிவாக இருப்பது. இதனை ஏவிப்பகைவர்களை விழுங்கசெய்வதும் வழக்கம். இது வீரகணபதி கரங்கள் ஒன்றில் இருக்கிறது.

5 – சத்தி: இது வேல் ஆறு கூரிய பகுதிகளையுடையது. தகட்டு வடிவானது முருகனுக்குச் சிறப்பானது விநாயகரும் வீரகணபதியாக விளங்கும்போது தாங்கியிருக்கிறா் இது பிடித்தபடியே எறியும் கருவிகளில் ஒன்று வேல்மட்டும் இரும்பாலானது. இதனை நடுவில் பிடித்து எறிவது வழக்கம். இருமருங்கும் குத்தும் இயல்பினது. யானையெறிந்தவேல் ஏந்தல்இனிது என்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6 – அம்பு:** (arrow) இது வில்லை வளைந்து அதில் வைத்து எய்யப் பெறுங்கருவி. நுனி கூரிய முள்போன்றது. நுனிமட்டும் இரும்பாலானது. நுனியை ஒரு கழியிற் செருகியிருப்பார்கள். அதனது வால் பக்கத்தில் கழுகின் இறகுகளையும், மற்ற பறவை இறகுகளையும் கட்டியிருப்பார்கள் பெரும்பாலும் கழுகிறகே இதற்குப் பயன்படும். இறகு கட்டுவது விரைந்து காற்றை ஊடுருவிச் செல்வதற்காகவே.

**7 – வில்:** இது அம்பு எய்யப் பயன்படுவது மூங்கில், சிலையென்னு மரம் முதலான வளையக்கூடிய நார் மரத்தால் செய்யப்பெறுவது. இந்த வில்லினது இருதலையிலும் தோல் அல்லது நார்கயிற்றானியன்ற நாண் கட்டப்பெற்றிருக்கும். வில்லை வளைத்து நாணை இறுக்ககட்டி அதன் நடுவில் அம்பைவைத்துவிடுவது வழக்கம். எவ்வளவுக்கெவ்வளவு வில்லின் வலியும், நாணின் உறுதியும் இழுத்துவிடுபவன் வன்மையும் இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அம்பின்வேகமும். தைக்கும் வன்மையும் மிகும். அம்பு பட்டவுடன் இறப்பதற்காக அதன் நுனியில் விஷம் தோய்த்து வைத்தலும் வழக்கம். அம்பின் நுனி பிறைமாதிபோலக் கவர்பட்டதாகவும் இருக்கும். இதற்குப் பிறையம்பு என்று பெயர்.

**8 – சக்கரம்:** இது விஷ்ணுவுக்கு உரிய சிறப்பான கருவி. இதன் அமைப்பு அனைவருக்கும் நன்கு தெரிந்ததே. அதில் இரு வகையுண்டு ஒன்று தேருருளை போன்றது. மற்றது வளையம் போன்றது. இது அழகுப்பொருளாக எத்தனையோ வடிவங்களிற் காணப்பெறுகின்றன.

**9 – கத்தி:** இது இன்று அறவே மறந்துபோன கருவி. தலைப்பகுதி குண்டாகத் தடித்துள்ள நீளக்கழியிற் போக்கப் பெற்றுள்ளகருவி. இதுவும் பகைவரை அடிக்கப் பயன்படுவது. தலைப்பக்கம் ஒரு மண்டை ஓடுபோலவும், கம்பி முழங்கால் எலும்பாகவுங்கூட அமைந்திருப்பதுண்டு. இதனை குத்துக்கத்தியாகிய பிச்சுவா என்பாரும் உளர்.

**10 – கேடகம்:** இது கத்திவெட்டைத் தடுப்பதற்காகப் பயன்படுவது. பலகையாலும், வலுவுள்ள காட்டெருமை, கடமா, நீர்யானை காண்டாமிருகம் இவற்றின் தோலாலும் செய்யப்பெறும். சதுரம், நீளச் சதுரம், வட்டம் முக்கோணி முதலிய பலவடிவங்களிற் செய்யப்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11 – சம்மட்டி:** இது இரும்பாலியன்ற கனத்த தலைப்பகுதியை உடையது. இதன் நடுவில் தொளையிடப்பெற்றிருக்கும். இதில் கைபிடிக்கும் சிறுகழியைக் கோத்திருப்பார்கள். இதுவும்உடையவன் கையைவிட்டு அகலாதபடி எதிரியை அடித்துத் தாக்கப் பயன்படுத்தப் பெறும்.

**12 – கதை:** குண்டாந்தடி இதில் பலவகைகள் காலாந்தரத்தில் ஏற்பட்டன. பகைவர்களை அடித்து நொருக்கப் பயன்படுவது. கையைவிட்டு அகலாதபடி காவலாக இருந்து உடையவனைப் பாதுகாப்பது.

**13 – நாகபாசம்:** இதுவும் பாசவகைகளும் ஒன்று.

**14 – சூலம்:** இது மூன்று நுனிகளையுடையது. சிவபெருமானுக்குச் சிறப்பாக உரியது. சுரைவரையிலும் எ.்.கு இருப்பாற் செய்யப்பெற்றது. நீளமான மரக்கம்பிற்கோக்கப்பெற்றிருக்கும்.

**15 – குந்தாலி:** இன்று வன்மையான நிலப்பாறைகளை உடைக்கப் பயன்பெறும். தலை கனத்துக்கூரிய நுனியோடு இருக்கும் இரும்பானியன்ற கருவி இது பலகைகள் உள்ளன.

**16 – மழு:** இன்று மரங்களை வெட்டப் பயன்பெறுவதாக எறியென்னும் பெயருடன் வழங்குகிறது. மிகக் கூர்மையானது வாய்ச்சி என்னும் மரஞ்செதுக்குங் கருவியினின்றும் முற்றிலும் வேறுபட்டது. தீப்பிழம்பு என்பதும் உண்டு. சிவபெருமானுக்கு விருப்பமான கருவி.

**17 – கொடி:** இது வெற்றிக்கு அறிகுறியானது. துணியாலியன்றது. அடையாளம் எழுதப்பெற்றது. இதனையும் விநாயகப்பெருமான் தமது திருக்கையில் தாங்கியிருக்கின்றார்.

**18 – தண்டம்:** இது நீளமான கைத்தடி மரத்தாலானது.

**19 – கமண்டலம்:** நீர் வைத்துள்ள கலம். ஒரு மரத்தின் காயால் இயன்றது. முனிவர்கள், அந்தணர்கள் தங்கள் நாட்கடனைக் கழிப்பதற்காக வைத்திருப்பார்கள். இதுவும் அஷமாலையும் ஆயுதங்கள் அல்லவானாலும் திருவுருவ நிலையை அறிந்துகொள்ள உதவும் கருவிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20 – பரசு:** இது சற்றேக்குறைய மழுப்போன்ற கருவிதான். ஆனாலும் மழுவின்வாய் சதுரமாக இருக்கும். இதன் வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும். இதுவும் காம்பில் செறிக்கப்பெற்றுப் பயன்படுத்தப் பெறும் கருவியாகும்.

**21 – கரும்பு வில்:** கரும்பால் செய்யப்பெற்ற வில் இது மன்மதனுக் குரிய சிறப்பான கருவி. யோகியாக இருக்கும் மற்றைய தெய்வங்களும் காமேஸ்வரியாகிய காமாட்சியும் தாங்கியிருப்பர்.

**22 – சங்கம்:** இதுவும் விஷ்ணுவுக்குரி சிறந்த ஆயுதம் வெற்றியை அறிவிக்கும் கருவி பகைவர்களை இதன் ஒலிகேட்டதுமே ஒடுங்கி அடக்கச்செய்யும் அச்சக்கருவியுமாம். இதிலும் பல வடிவங்கள் உள.

**23 – புஷ்ப பாணம்:** தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம், என்ற ஐந்து பூக்களாலியன்ற பாணம் இவற்றை மன்மதன் மக்களிடத்தில் காம நினைவூட்ட எய்வன். போக நிலையில் மற்றத் தெய்வங்களும் தாங்குவதுண்டு.

**24 – கோடரி:** மரம் பிளக்கப் பயன்படும் கருவிபோலப் பகைவரின் உடலைப் பிளக்க இது பயன்படும். இரும்பால் வாய் கூர்மையாகப் பின் பக்கம் கனமானதாக அமைந்துள்ளது.

**25 – அஷமாலை:** உருத்திராஷ மாலை, இது தனித்தனியே ஒருமாலையாகத் திருவுருவங்களில் தொங்குவதும் உண்டு. மிகப் பழமையான திருவுருவங்களில் இது ஓராயுதம் போல் இருப்பதைக் காணலாம்.

**26 – சாமரம்:** இது கவரிமான் வால்மயிரால் ஆனது. ஓர் ஆயுதம் அன்று. ஆனாலும் விநாயகப் பெருமானுடைய திருவுருவ அடையாளங்களில் ஒன்றாகையால் ஆயுதவரிசையில் இது இடம்பெற்றிருக்கிறது.

**27 – கட்டு வாங்கம்:** இது நீளமான கத்தி. போரில் படைகளை வெட்டப்பயன்படுவது. இதில் ஒருமுனையுடையதும் இருமுனையுடையதும் என இருவகையுண்டு. குத்திக்கத்தியாகக் கூரிய நுனியுடையதும் உண்டு. பழங்கால மன்னர்கள் இடுப்பில் செருகியிருப்பதும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28 – தீ அகல்:** ஒரு தீப்பிழம்பு. தீ அகலாகிய மழுவின் வடிவும் இப்படியே தான் இருக்கும்.

**29 – வீணை:** இது ஓர்இசைக்கருவி. போர்க்காலங்களில் தளர்ந்த படைவீரர்களுக்கு உணர்ச்சியூட்டப் பயன்படுவது.


1

2

3


4

5


6

7

8

9

10


11

12

13

14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


15


16


17


18


19


20


21


22


23


24


25


26


27


28


29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணாதிபன் அச்சகம் - கரணவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org